# BHARATĀRṆAVA

OF

NANDIKEŚVARA

WITH TRANSLATION
IN
ENGLISH & TAMIL

N:44x1,2
N57
21554

1957

Tanjore Saraswati Mahal Series No. 74

# भरतार्णवः

नन्दिकेश्वरविरचितः

# BHARATĀRṆAVA

OF

NANDIKES'WARA

*Edited by:*

Sangita Kala Sikhamani
SRĪ K. VĀSUDEVA SĀSTRI, B. A.,
*Research Professor, Saraswati Mahal Library, Tanjore,*
Editor of
Gitagovinda with Abhinaya, Nātya Sāstra Sangraha,
Tāla Samudram, Sangīta Darpanam
and Author of
Sāstrīya Sangitam and Science of Music.

*Published by:*

SRI S. GOPALAN, B. A., B. L.,
*Hony. Secretary for the Administrative Committee,*
*Saraswati Mahal Library, Tanjore.*

1957

Price Rs. 15/-

NS44x1,2
N57
TAMIL NADU ARCHIVES LIBRARY MADRAS-600 008
21554

# BHARATĀRṆAVA

OF

# NANDIKEŚVARA

WITH TRANSLATION
IN
ENGLISH & TAMIL

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
3 - DEC 1957
MADRAS

*Sponsored by:*

**SANGEET NĀṬAK AKADAMI,**
**DELHI.**

1957

# PREFACE

This publication presents to the public for the first time "Bharatārṇava", a very rare and valuable standard work on "Nartana" or pure dance by Nandikēs'wara, the highest authority on the subject. The publication has been taken up at the instance of the Saṅgīt Nāṭak Akadami, Delhi, who have sanctioned a grant for the purpose covering the entire cost of publication.

"Nartana" or Pure Dance is to be distinguished from "Nāṭya" or Dramatic Representation on the one hand, and "Nritya" or gesticular representation of the ideas contained in a song, on the other. Though the arts of Nartana and Abhinaya are both learnt by a student of Bharata Nāṭya, they are none the less separate arts having separate origin and growth. According to Nāṭya S'āstra of Bharata, Brahma created the art of Nāṭya as an innocent diversion in Trētā Yuga, when men in their vicious mood could think of no other way of amusing themselves than by injuring one another. Nartana or pure dance on the other hand was the creation of Paramas'iva, the king of dancers. It is as old as Paramas'iva himself. It would thus appear that the art of Nartana is much older than Abhinaya. Bharata who knew only the art of Nāṭya in the first instance, learnt Nartana also on the suggestion of Lord S'iva from Taṇḍu or Nandikēs'wara, the first student of Lord S'iva.

Nāṭyaśāstra is a pretty big treatise dealing with Nāṭya (Dramaturgy) Kāvya and Nāṭaka (Poetic and dramatic compositions), Rasa (aesthetics), Gīta and Vādya (Vocal and instrumental music), Nritya (visual) representation of the ideas in a song and Nartana (pure dance). But the last item has been dealt with only in its elements, viz., Karaṇas and Aṅgahāras, the words and phrases, so to say, of pure dance. Comprehensive treatises on pure dance have however been written by Nandikēśwara and other disciples of Lord Śiva. These treatises are now very rare and the art is now preserved only in the practice of dance-masters.

Bharatārnava, one of these most rare and important texts, has fortunately been preserved in the Saraswati Mahāl Library, Tanjore, although the manuscript is not complete. It contains, however, the main part of the work. It is now published, so far as it is available in this manuscript and other manuscripts available in other Libraries. The whole work is said to consist of 4000 verses. Our manuscript contains the first fifteen chapters running over some 800 ślokas. From the manuscripts obtained from other Libraries, specially the one from the B. O. R. Institute Library, Bombay and another from Mysore Oriental Library, we have added some 400 more verses. The slokas were found replete with errors and omissions and the text has been carefully edited by our Research Pandit Sri K. Vāsudeva Sāstri, B. A., who has already edited other works on Nāṭya, Saṅgīta and allied subjects. The text in this publication is accompanied by translations in English and Tamil so



that the book may be useful to the general public and the teachers and students of dance who may not be versed in Sanskrit.

The work contains a good number of new items of pure dance which are very simple to execute, but remarkable in artistic effect. It is hoped that this publication will be eagerly read by those interested in Bharata Nāṭya, which has now established an extensive dominion over the minds of men and women of our country and abroad.

Our thanks are due to the learned editor for his valuable services. We are greatly indebted to the Sangīt Nāṭak Akadami, Delhi, who have helped us to publish this important work.

Saraswathi Mahal,
Tanjore,
Dated: 21—5—57.

**S. GOPALAN,**
*Honorary Secretary.*

# INTRODUCTION.

'Nāṭya' and 'Nartana' are two words that are derived from two different roots 'Naṭ' (नट्) to imitate and Nṛt (नृत्) to dance. The two words mean respectively 'Drama' and 'Dance'. 'Dance' is not necessarily an organic feature of Drama, but has been added to it from very early times as an embellishment. The two arts therefore have had different origins and have had also each its independent growth. The credit of combining both the arts into one goes to Bharata Muni, the first student of Drama under Brahma and the original propagator of the Art.

According to our tradition recorded in Bharata's Nāṭya Sāstra, Brahma created the art of Drama as an innocent diversion at a time when people in their vicious mood could think of no other means of deriving pleasure than injuring one another. This is said to have taken place in Trētā yuga. But the art of dance had been in existence long before. That art is the creation of Lord Paramas'iva in his exhuberance of joy. He is the first and the greatest of dancers. The dance of Naṭarāja however is a purposeful dance, and the five-fold activity of creation, protection, destruction, hiding and blessing is effected by it. It is a universe in essence with all its activity. Being a world in miniature, there is as much of drama in it as dance. That is why the Master Dancer is commonly called by the name of Naṭarāja, the king of 'actors,' though he is strictly speaking 'Nartana Rāja'.

The first student of Lord S'iva is Tandu or Nandikēs'wara. In fact, Bharata who had originally learnt only the art of drama from Brahma was taught the art of dance by Tandu as directed by Lord S'iva.

The addition of Dance to the Dramatic art was first suggested by Lord S'iva himself before whom Bharata exhibited his art in Mount Kailas. The theme exhibited was Tripurasambhāra of Lord S'iva himself. Paramas'iva was so pleased by the performance that he suggested the addition of dance (his own art) at least in the Pūrvaranga or the preliminaries of the drama. But Bharata knew no dance. So Paramas'iva ordered his chief disciple Nandikēs'wara otherwise called Tandu, to teach Bharata the elements of his own dance before the celestials. The dance taught by Tandu was called therefore 'Tāṇḍava'. S'ri Pārvati was asked by Lord Paramas'iva to exhibit the Lasya or the femenine dance so that Bharata may learn its features also. So Lāsya and Tāṇḍava were added to Abhinaya, and they were accompanied by musical compositions either in words or in swaras or in jatis or syllables of instrumental sounds specially coined for dance, or all these combined. Music had been admitted by Bharata in the shape of special songs called 'Dhruvas' describing the dramatic situation or the characters entering, at the beginning, at the end and in between the acts. Five kinds of Dhruvas were prescribed by him. Pravēs'iki, Ākṣēpiki, Prāsādiki, Antara and Naiṣkrāmiki. Detailed rules are prescribed for various kinds of Dhruvas and in respect of various types of characters as to the rāga, tala and the metre of the compositions. In all these musical features words were always expounded with Abhinaya.



Now, after the suggestion of Paramas'iva, special compositions for dance were also added to them. These compositions had greater emphasis on Tāla and their forms and their use on particular occasions were also prescribed in detail. Brahma gave a helping hand in composing these latter compositions which were called 'Gītis' and 'Chandas' each seven in number. Thus dance entered fully into the musical part of the drama along with Abhinaya.

Bharata's Nāṭya S'āstra however gives a detailed description only of the Musical and Tāla compositions intended for the pure dance, but does not give a detailed description of the movements of pure dance that have to accompany them. He satisfies himself by mentioning in general the 108 Nartana Karaṇas or combinations of leg and hand movements that form the alphabet as it were of Lord S'iva's Nartana. The chief combinations of these karaṇas 32 in number are also given in general. They are called 'Aṅgahāras', but where they have to be used is not mentioned. The particular occasion for using Karaṇas and Aṅgahāras and the whole technique is all left to the treatises on pure dance and the traditional practice. The necessity and utility of works on pure dance can now be well understood.

Nandikēs'wara's treatise is naturally the first among these treatises. Five works of Nandikēs'wara find mention in our texts. Nandikēs'wara Samhita

quoted by Simhabhūpāla in his commentary on Saṅgīta Ratnākara is one. Bharatārṇava said to consist of 4000 s'lokas is the second. Bharatārṇava Saṅgraha said to be an abridgment of the second is the third. Guhēs'a Bharatārṇava being the version of Bharatārṇava as redacted by Guha or Skanda is the fourth. The word Īs'a in the name seems to suggest however that this version has something to do with Lord Paramas'iva. It is possible that the contents of Guhēs'a Bharatārṇava are on the same lines as the ancient treatises on Nāṭya and Nartana in the Tamil country whose tradition of Saṅgīta and Nāṭya goes far back into some millaniums. There is a Tamil work called 'Bharata Sēnāpatīyam' which by its Sanskrit name suggests that it may be a Tamil version of a Sanskrit work solely created by Sēnāpati or Skanda. There is a work in Tamil mentioned as an ancient work by the name Pañca Bharatam which is ascribed to Nārada.[1] It is just possible that Nārada, the authority on music made a digest of five redactions of works on Nartana and Nāṭya and called it Pañca Bharatam. We have evidence of five names connected with Bharata S'āstra namely Ādi Bharatam, Nandi Bharatam, Mataṅga Bharatam, Arjuna Bharatam and Hanumat Bharatam.[2] These by themselves or with substitutes may be the five works digested by Nārada.

1. These facts are based on Śilappadikāram, the ancient Tamil classic and its commentary.

2. Ādi Bharatam and its commentaries :— This appears to be a collection of extracts from ancient works on Nāṭya and Nartana including the original Ādi Bharata said to have been addressed by Lord Paramaśiva to Śri Pārvati. This work gives a clear though brief idea of the principal elements on Nṛtya and Nāṭya and is in the form of an address by the Dance Master to the audience.

2. *Nandi Bharatam :*— Our text is a part of it.

3. *Mataṅga Bharatam :*— There is a work of this name but it is a later compilation by an author called Lakṣmaṇārya.

4. *Arjuna Bharatam :*— This consists of a number of fragments of some old work and contains portions relating to Tālas and hastas.

5. *Hanumat Bharatam :*— This is mentioned among available manuscripts in publication of Music and Dance, but where it is now available is difficult to ascertain. Hanuman Matam is quoted however in books on Music and Dance. Numbers one to four are available in the Sarasvati Mahal Library.



It is clear therefore that the art of Nartana and Nāṭya has spread far and wide in the country giving rise to several redactions of the texts on our subject. In the treatise of Kōhala quoted by Kallinātha in his commentary on Saṅgīta Ratnākara an author by the name Bhaṭṭa Tanḍu is referred to as an authority. It is just possible that Tanḍu referred to here is no other than Nandikēs'wara, though the word Bhaṭṭa suggests that the author may be some brahmin of that name.

Bharatārṇavam is described in Bharatārṇava Saṅgraha as a work of 4000 stanzas. The introduction to the Saṅgraha gives an account of the occasion for the Saṅgraha to be written. Indra approaches Nandikēs'wara and requests him to make an abridgment of the Bharatārṇava which is of 4000 verses, and there-

fore too big to be learnt in an emergency. The present urgency was that the Asuras who were being instructed by S'ukrācārya had thrown out a challenge to the Dēvas to compete with them in a dance competition. Nandikēs'wara agrees. Indra selects Sumati for receiving instruction in the abridged Bharatārṇava from Nandikēs'wara. The work is therefore called Sumati Bōdhaka.

The text of Bharatārṇava that we now present to the public has been gathered from a number of sources. In Saraswatī Mahal, we had the main portion of the text which begins with the last s'loka of the IV chapter and continues to a good portion of chapter 15. The last s'loka in chapter IV deals with a Pāda Bhēda called 'Lalita'.

The work is called 'नन्दिकेश्वर विराचिते भरतार्णवे' in some chapters, 'नन्दिकेश्वर विरचिते भरतार्णवे सुमतिबोधके' in some other chapters. In one of the chapters namely chapter X relating to Nānārtha hastas, the colophon is 'नन्दिकेश्वर-विरचिते भरतार्णवे पार्वतीप्रयुक्त भरतचन्द्रिकायां कथित नानार्थ हस्तप्रकरणम्'. The title page calls the work 'Bharatārṇava Granthaḥ Nandikēs'wara Viracitaḥ' — The first page however gives two names 'Bharatārṇavaḥ Nandikēs'wara Viracitaḥ' and 'Guhēs'a Bharata Lakṣaṇam'. At the end of the manuscript also, the work is called 'Guhēs'a Bharata Lakṣaṇam'. It is clear that this work though mainly consisting of the original Bharatārṇava has been added to from other sources namely 'Guhēs'a Bharata Lakṣaṇam', 'Sumati Bōdhaka Bharatārṇavam' and 'Pārvati prayukta Bharatārtha Candrikā'. The chapters in the book deal with Pāda Bhēdas,



Sthānakas, their uses, Sañkara hastas, 108 Tālas, Cāris, Angahāras, Nānārtha Hastas, S'ṛnga Nāṭya, Sapta Lāsya and Puṣpāñjali.

The available s'lokas are from 101 to 810. The available manuscripts bearing this name have been secured from all available sources. The manuscripts from the B. O. R. Library, Poona contains in its first part the preliminaries of Nartana and special abhinayas to indicate varied objects and persons. The second part begins with the chapter relating to Sañkara hastas and Nānārtha Hastas. This covers exactly chapters VI and X of our text. We then have three chapters relating to Hasta mudras. These are called the first three chapters of Bharatārṇava. Then there is a chapter on S'iras and Dṛṣṭis. Chapters 1–3 relating to hasta mudras are also found in some of the manuscripts of Saraswati Mahal. Chapters 1, 2 and 3 therefore have been reconstructed with the help of the B. O. R. manuscript and the Saraswati Mahal manuscripts.

A manuscript under the name Bharatārṇava has been secured from Mysore Oriental Institute also. In this manuscript the first three chapters are the same as those in the B. O. R. Institute manuscript and the Saraswati Mahal manuscripts. The fourth chapter is divided into two parts. The first part gives the use of hasta mudras according to Bṛhaspati. But it is described as a part of Bharatārṇava. The same portion is found in a compilation of Saraswati Mahal also where again it is described as a part of Bharatārṇava. But the number of the chapter is not given in this latter manuscript. We have therefore included this

as the first part of chapter 4. The second part of the Mysore manuscript contains S'iras and Dṛṣṭis. The same matter and Pāda bhēdas are found in some of the manuscripts of Saraswati Mahal. The second part of the fourth chapter has therefore been reconstructed with the help of B. O. R. Manuscript, and the matter found in some of the manuscripts in Saraswati Mahal. They deal with S'iras, Dṛṣṭis and Pāda Bhēdas. A big manuscript with elaborate Telugu commentary bearing the name of Bharatārṇava was also secured from Govt. Oriental Manuscripts Library, Madras. But it is a mere elaboration from various sources of the chapter on mudras. It was therefore not found useful in editing this work. This is all the matter that could be gathered from all the manuscripts bearing the name of Bharatārṇava. The matter collected comes to about 1200 s'lōkas. The rest of the 4000 s'lōkas has yet to be traced.

Chapters 1 to 4 contain the Hastas, Dṛṣṭis, S'iras and Pādas. V chapter deals with Sthānakas or standing poses numbering 31 in all. These 31 consist of six masculine poses, seven feminine poses and 18 common poses as explained in later chapters. Bharata's Nāṭya Sāstra mentions 6 masculine poses and 3 femenine poses and common poses are not mentioned at all. S'ārṅgadēva's Saṅgīta Ratnākara written in 1200 has made a comprehensive but judicious digest from all the ancient texts. It has classified the standing poses into 13 Mārga poses and 23 Dēs'i or provincial poses. The Mārga poses are then divided into 6 masculine poses and 7 femenine poses. This classification agrees more closely with Bharatārṇava. It is to be noted, however, that the order in which the poses appear in Bharatārṇava is specially intended for the description of the several dances that appear in Chapter IX onwards, and the order closely follows the order of the poses in those dances. The name of one of the poses has caused some difficulty in editing. It is the seventh pose called Cāndrika in some places and Cāṇḍika in other places. The original authors of the first seven poses are said to be the Sapta Mātās (or the seven mothers or S'aktis–Brāhmi, Māhēs'wari, Koumāri, Vaiṣṇavi, Vārāhi, Indrāṇi and Cāmuṇḍā). The more correct form will thus appear to be Cāṇḍika and not Cāndrika.



The first part of Chapter VI deals with the uses of the Sthānakas. The second part deals with Saṅkara hastas or special adaptations and combinations of the usual hastas for special purposes.

Chapter VII deals with the 108 Tālas. The description here agrees fairly with that given in Ādi Bharatam and in Tamil works on Tāla like Tāla Samudram, Cāccapuṭa Veṇba and Bharata Saṅgraha. It is to be noted that these 108 Tālas find no mention in Bharata's Nāṭya S'āstra which specialises in Nāṭaka and Abhinaya and refers to the Tāla only as an aid to Gīta and Vādya. It is clear therefore that the 108 Tālas have more to do with Dance proper than with musical compositions in general. These latter have originally confined themselves to the limits of the five original Tālas Caccatpuṭa, Cācapuṭa, Ṣaṭpitāputraka, Sampakvēṣṭāka and Udghaṭṭa and their expanded

forms with 2, 4, 8 etc. kalas. The prastāras or expatiations of these Tālas with the help of 'jatis' or syllables of instrumental sounds are not given for all the Tālas in the treatise, but they are given for those Tālas that are employed in the Tāṇḍavas and Lāsyas described in chapter IX onward. These jatis have been coined by dance-masters in hundreds and they are found in old books in Tamil on dance and in the jati manuscripts preserved in the Saraswati Mahal Library.

Chapter VIII deals with Cārīs or movements of the limbs below the hip. Our text gives only nine Ākās'a Cārīs or Cārīs off the ground and sixteen Bhū Cārīs or Cārīs on the ground, whereas Nāṭya S'āstra mentions 16 of each variety and Saṅgīta Ratnākara adds Dēs'i Cārīs or Cārīs of provincial variety as well. The reason for this is that the number of Cārīs in this text is limited to those items that occur in the varieties of dance dealt with in the latter portion of the text.

In the IX Chapter begins a description of several items of dance that are unique in this text. In this chapter, the word Aṅgahāra is used for each item of dance and each item is intended to subserve a particular '*emotional appeal*' and is named after the particular rasa it evokes. We have thus five items of 'Lalita Aṅgahāra' with Sṛṅgāra rasa as their aim. We have three items of 'Vikrama Aṅgahāra' depicting Vīra rasa. We have four items of 'Kāruṇika Aṅgahāra' pertaining to Karuṇā rasa. Then are given two items called 'Vicitra Aṅgahāra' pertaining to Adbhuta rasa. We have next two Aṅgahāras named 'Vikala' for evoking Hāsya rasa. Then we have two items of 'Bhīma', two items of 'Vikṛta', two items of 'Ugratara' and two items of 'S'āntija' pertaining to Bhayānaka, Bībhatsa, Roudra and S'ānta rasas respectively. The poses and movements in these Aṅgahāras are extremely simple though their effect promises to be full of life. The look and the bearing are given an important place in each of these Aṅgahāras.



The word 'Aṅgahāra' as described in Nāṭya Sāstra and other texts is a highly technical term applied to a combination of 8, 9, 10 or more dance-units or Nartana Karaṇas out of the 108 units into which the dance of Paramas'iva has been analysed. Each Karaṇa is a combination of poses and movements of the hands and legs accompanied by appropriate looks and movements of the head and other parts of the body. The Karaṇas by themselves have yet to be revived in the practice of dance. The manner of their execution however has been preserved for us in sculptural forms in many temples chief of which are those in the temples of Chidambaram[1] and Tanjore.

1. In Chidambaram Temple the Karaṇas are cut on rocks in the East and West Gōpuras of the Naṭarāja Temple with the appropriate verses from the Nāṭya Sāstra underneath each of the postures. In the big temple of Tanjore there is a duplicate of 'the holy of holies' above the one now in use and over the former stands the tower which is a hollow structure, a wonder of architecture. In the corridor of the upper holy of holies all round are cut the Karaṇa poses numbering 81. The remaining 27 poses have been assigned their places but have not been cut into form. The work remains unfinished to this day. These poses have each four hands indicating that they are poses of Siva's

There are 32 Aṅgahāras described in those texts, 16 to be executed in Tryas'ra Tālas or Tālas with three-fold inner gait, and 16 to be executed in Caturas'ra Tāla or Tālas with four-fold gait. The particular Tāla for each Aṅgahāra and the dance syllables that regulate the movements and poses are not found in Nāṭya Sāstra and other ancient texts. But they are fortunately preserved in a manuscript in Saraswathī Mahāl called Saṅgīta Muktāvali by Dēvendra Ācārya [2].

But the Aṅgahāras that are found in Bharatārṇava are entirely different from these. In the first place they are not composed of the Nartana Karaṇas. They are conceived with specific emotional appeal and executed with that purpose. It is just possible that the 32 Aṅgahāras in Nāṭya Sāstra and other texts are the performance of Lord S'iva and the Aṅgahāras in Bharatārṇava are the performance of Sri Pārvati, though the texts describe them both as the performance of Lord S'iva.

Chapter X deals with the uses of 'mudras used for more than one purpose'.

Chapter XI deals with a further development of Aṅgahāras detailed in Chapter IX. Each Aṅgahāra is accompanied by a sthānaka and this is preceded by an Ākās'a Cāri coupled with a Sthānaka and followed by a Bhū Cāri coupled with a Sthānaka. Each combination thus consists of six elements. This combination is called S'rṅga Nāṭya, so called because this was performed by Lord Paramas'iva in one of the peaks of Mount Kailās surrounded by pleasure gardens. Nine such varieties of S'rṅga Nāṭya are given in this chapter.

---

dance. Each pose is about three feet square and the poses are more life-like and more faithful to the texts of Nāṭya Sāstra than the poses in Chidambaram temple.

2. There are two manuscripts by the name of Saṅgita Muktāvali both by authors of the same name. One is a palm-leaf manuscript and contains a systematic account of the theory of the subject. The second is a paper manuscript and contains more practical details than theory. It is the second that contains the Tālas and syllables for each Aṅgahāra.



The XII chapter details how the S'rṅga Nāṭya came to be performed at the request of Sri Pārvati during the spring festivities on one of the crests of the Mount Kailās, commanding the pleasure garden. It is followed by an account of the origin of Sthānakas and their originators. The chapter closes with rules for combining hasta mudras with Sthānakas.

XIII chapter describes in detail the various parts of the seven items of dance included in the group called 'Sapta Lāsya', namely, S'uddha Nāṭya, Des'ī Nāṭya, Pēruṇi, Prēṅkhaṇi, Kuṇḍali, Daṇḍika and Kalas'a. The first consists of seven Bhramaṇa Tāṇḍavas. Each Tāṇḍava is combined with a Gati, a Karaṇa and a Cāri. A Gati or gait is a combination of a standing pose, a step and a mudra. A karaṇa is a combination of hand and leg movements. For each of these items, Tālas are prescribed and each Tāla has its own formula in syllables of instrumental sounds. The second, namely, 'Des'i Nāṭya' has five varieties of Tāṇḍavas each having its own gati, karaṇa and cāri and the appropriate Tālas and syllables. It is noteworthy that the S'uddha Nāṭya is said to have been conceived and performed

by Lord Paramaśiva and Dēśi Nāṭya is by Śri Pārvati. The word Tāṇḍava and Lāsya appear to be used in the text indiscriminately for male and female dance. The whole group is called Sapta Lāśya but the constituent elements of the first two varieties are called Tāṇḍavas. The other five items namely Pēruṇi, Prēṅkhaṇi, Kuṇḍali, Daṇḍika and Kalaśa were originally performed by Brahma, Saraswati, Mahāviṣṇu and Mahālakṣmi respectively, the last two by Mahālakṣmi herself. Each of these is combined with Karaṇas and Cāris. A detailed and an orderly account of these is given in chapter XIV. The last chapter deals with Puṣpāñjali or the offering of flowers and the worship of deities, in dances before deities, before kings and before a common audience.

As Bharata's 'Nāṭya Sāstra' is the standard text book for Abhinaya, Bharatārṇava is for Nartana. A careful study of this text and its adoption in practice will appreciably enrich the art of Nartana and make it perfect.

The additional matter that was found in the B. O. R. Institute manuscript consists mainly of Abhinaya and could not be fitted into the main text. It has therefore been printed as an appendix. Bharatārṇava is said to be a work of 4000 verses and it is necessary that the other portions of the work should be diligently sought out and secured. If any such portions become available in future they will be duly incorporated in the next edition.

Saraswati Mahal,
Tanjore, 17—10—56.

K. VASUDEVA SASTRI

# முகவுரை.

நாட்டியம், நர்த்தனம் என்ற இரு சொற்களும் வெவ்வேறு வினைப்பகுதிகளின் இடமாகப் பிறந்தவை. நாட்டியம் என்பது 'நட்' (நடித்தல் அல்லது அபிநயித்தல்) என்ற பகுதியினின்றும் பிறந்தது. நர்த்தனம் என்னும் சொல் 'ந்ருத்' (ஆடுதல்) என்ற பகுதியினின்றும் பிறந்தது. இவ்விரு சொற்களுக்கும் முறையே நடித்தல், ஆடல் என்பது பொருள். ஆடல் நாடகத்திற்கு இன்றியமையாத ஓர் உறுப்பல்ல. ஆனால் அழகுக்காக நாடகத்துடன் இணைக்கப்பட்டிருக்கிறது. இவ்விரு கலைகளும் வெவ்வேறு வகையில் உற்பத்தியாகி வளர்ந்து வந்திருக்கின்றன. இவ்விரு கலைகளையும் ஒன்று சேர்த்த பெருமை நாடகக் கலையின் முதல் நூலாசிரியராகிய பரதமுனியைச் சார்ந்தது.

பரதமுனிவரின் நாட்டிய சாஸ்திரத்தில் கண்டபடி நாடகக் கலை பிரும்மாவினால் ஓர் குற்றமற்ற பொழுது போக்காக ஸிருஷ்டிக்கப்பட்டது. ஒருகாலத்தில் மக்கள் ஒருவரையொருவர் துன்புறுத்துவதனாலேயே சந்தோஷத்தையடைந்து வந்தனர். அப்பொழுது அவர்களுக்குக் குற்றமற்ற வழியில் இன்பத்தைக் கொடுக்கக் கூடிய ஓர் கலையை ஸிருஷ்டிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அதுவே நாட்டியக் கலை. இது த்ரேதா யுகத்தில் நடந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. நாட்டியக் கலை ஏற்படுவதற்கு வெகுகாலத்துக்கு முன்பே நர்த்தனக் கலை உண்டாகியிருக்கிறது. நர்த்தனக் கலை பரமசிவனால் ஆனந்த பரவச நிலையில் உண்டாக்கப்பட்டது. அவரே ஆடலை முதன்முதல் ஆடிக்காட்டியவர். 'ஆடவல்லான்' என்ற பெயர் அவருக்கே தகும். பரமனார் ஆடல் பயனுள்ளதோர் ஆடல். பரமனார் ஆடிய கூத்து பெரும் பயனுடையதாக அமைந்தது. அவ்வாடலினாலேயே உலகை ஆக்கி, அளித்து, நீக்கி, மறைத்து, 'அருளி ஐந்தொழில் புரிந்திருக்கின்றார்.

நடராஜன் கூத்தில் பல இயக்கங்களோடு கூடிய உலகியல்பு யாவும் அடங்கியுள்ளது. உலகத்தின் ஓர் சிற்றுருவமாக அமைந்திருப்பதால் அதில் ஆடல் நிறைந்திருப்பதுபோல் உலக நாடகமும் அமைந்துள்ளது. அதுபற்றியே ஆடவல்ல பரமனை நடிப்பில் வல்ல 'நடராஜன்' என்று அழைக்கிறோம்.

பரமசிவனது முதல் மாணாக்கர் 'தண்டு' என்ற பெயருடைய நந்திகேசுவரர். பார்க்கப்போனால் பரத முனிவருக்கு முதலில் நடிப்புக் கலை மட்டும்தான் தெரியும். அவருக்கு நர்த்தனக் கலையைப் பரமசிவன் உத்தரவுக்கிணங்கத் தண்டுவே கற்றுக்கொடுத்தார்.

பரத முனி நாடகக் கலையைப் பரமசிவன் முன்பாக கைலயங்கிரியில் நடித்துக் காட்டியபோது அதைக் கண்டு மகிழ்ந்த பரமனே நாடகக் கலையுடன் நர்த்தனக் கலையையும் சேர்த்துக்கொள்ளும் யோசனையைக் கூறினார். பரமசிவன் முன் ஆடிக்காட்டிய நாடகம் பரமசிவன் முப்புரமெரித்த நிகழ்ச்சியேயாகும். அப்பொழுது நர்த்தனக் கலையை நாடகத்தின் பூர்வாங்கத்தின் ஓர் பகுதியாகவாவது சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று விரும்பினார். பரதருக்கு ஆடற் கலை புதிதாகையால் தண்டுவைக் கொண்டு பரமசிவன் தான் தேவர்கள் முன் ஆடிக்காட்டிய ஆடலின் பகுதிகளை பரதருக்குக் கற்பித்தார். இக்காரணம் பற்றியே தண்டுவினால் கற்பிக்கப்பட்ட கலைக்குத் 'தாண்டவம்' என்ற பெயர் ஏற்பட்டது. பரமசிவன் ஆக்ஞைப்படி 'லாஸ்யம்' என்ற ஸ்திரீ நர்த்தனத்தையும் பார்வதிதேவியார் தாமே ஆடிக்காட்டிப் பரதர் அதைக் கற்றுக்கொள்ளும்படிச் செய்தார்.

இவ்விதமாக அபிநயத்தோடு லாஸ்யமும், தாண்டவமும் நாடகத்தின் ஓர் பகுதியாகச் சேர்ந்தன. வார்த்தைகள், ஸ்வரங்கள், வாத்திய ஒலிகளாகிய ஜதிகள் என்னும்



சொல்லுக்கட்டுகள் இவைகளாலாகிய சாஹித்தியங்களுக்கு இணங்க நர்த்தனம் செய்யப்பட்டது.

நாடகத்தில் பாத்திரப்பிரவேசத்தின் பொழுதும், முடிவிலும், காட்சிகளுக்கிடையிலும், த்ருவபதம் என்ற பாட்டை பரதர் ஏற்கெனவே அனுமதித்திருந்தார். இவ்வகை உருப்படிகளில் ஐந்து வகைகள் ஏற்பட்டிருந்தன. அவைகளுக்கு ப்ராவேசிகீ, ஆக்ஷேபிகீ, ப்ராஸாதிகீ, அந்தரா, நைஷ்க்ராமிகி என்று பெயர். ஒவ்வொரு வகை த்ருவபதத்திற்குமுரிய சந்தர்ப்பத்தைப் பற்றியும் அதற்கான ராகம், தாளம் பற்றியும் விரிவான விதிகள் ஏற்பட்டிருக்கின்றன. இந்த உருப்படிகளிலுள்ள பொருளுக்கேற்ப அபிநயம் பிடிக்கப்படும். பரமசிவன் விருப்பப்படி நர்த்தனமும் சேர்ந்த பிறகு நர்த்தனத்திற்கென பல தாளப்பிரதானமான சாஹித்தியங்கள் கற்பனை செய்யப்பட்டு அவைகளை உபயோகிக்கவேண்டிய இடங்களும் நிச்சயிக்கப்பட்டன. இவ்விதத் தாளசாஹித்யங்களை உண்டாக்குவதில் பிரும்மாவும் உதவி செய்தார். அந்த சாஹித்யங்கள் கீதி, சந்தம் என்று இருவகையாகவும், ஒவ்வொரு வகையிலும் ஏழு வகை சாஹித்யங்களும் புனையப்பட்டன.

இவ்விதமாக நர்த்தனம் நாடகத்தின் சங்கீதப் பகுதியில் அபிநயத்தோடு சேர்ந்து அதன் உறுப்பாகிவிட்டது. பரதர் நாட்டிய சாஸ்திரத்தில் கீத சாஹித்யம், தாள சாஹித்யம் இவைக்ள் விவரிக்கப்பட்டிருக்கின்றனவேயன்றி அவற்றிற்கேற்ப நர்த்தனம் செய்யும் முறை விவரிக்கப்படவில்லை. நர்த்தனகரணங்கள் என்னும் கைகால் அசைவுகளின் தொகுதிகளை மட்டும் பொதுவாக விவரித்திருக்கிறார். இக் கரணங்கள் 108 ஆக வகுக்கப்பட்டிருக்கின்றன. அவைகளே பரமசிவன் நர்த்தனத்தின் அரிச்சுவடி எனலாம். பல கரணங்களை ஒன்று சேர்த்த தொகுதிக்கு 'அங்கஹாரம்' என்று பெயர். இவைகளுள்

32 அங்கஹாரங்கள் நாட்டிய சாஸ்திரத்தில் விவரிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் எங்கு ப்ரயோகிக்கத்தகுந்தவை என்று சொல்லப்படவில்லை. இந்த விவரம் சுத்த நர்த்தனத்தைப் பற்றிய நூல்களிலிருந்தும் சம்பிரதாயத்திலிருந்தும் தெரிந்துகொள்ளும்படி விடப்பட்டிருக்கிறது. இதைக்கொண்டு நர்த்தன நூல்களின் அவசியமும், உபயோகமும் நமக்கு நன்றாக விளங்கும்.

நர்த்தன நூல்களில் நந்திகேசுவரருடைய நூலே முதன்மையானது. நந்திகேசுவரரால் இயற்றப்பட்டதாக ஐந்து நூல்கள் நமது பழைய இசை நாட்டிய நூல்களில் சொல்லப்படுகிறது. சங்கீத ரத்னாகரத்தின் உரையாசிரியர் ஸிம்ஹபூபாலர் என்பவரால் மேற்கோள் காட்டப்படும் நந்திகேசுவர சம்ஹிதை அவற்றுள் ஒன்று. 4000 ச்லோகங்கள் கொண்டதாகச் சொல்லப்படும் பரதார்ணவம் என்பது இரண்டாவது நூல். பரதார்ணவத்தின் சுருக்கம் என்று கூறப்படும் 'பரதார்ணவ சங்கிரஹம்' என்பது மூன்றாவது. 'குகன் என்று அழைக்கப்படும் முருகப்பெருமானால் எடுத்துச் சொல்லப்பட்ட பரதார்ணவம்' என்று பொருள் படுகிற குஹேச பரதார்ணவம் என்ற பெயருள்ள நூல் நான்காவது. இந்தப் பெயரில் 'ஈச' என்னும் சொல் சேர்ந்திருப்பதைக்கொண்டு இந்த நூலுக்கும் பரமசிவனுக்கும் சம்பந்தம் இருக்கலாம் என்று தோன்றுகிறது. தமிழ் நாட்டில் நாட்டியம், நர்த்தனம், சங்கீதம் இவைகளைப் பற்றிய பழைய நூல்கள் பல்லாயிரம் வருஷங்களாக இருந்து வந்திருப்பதாகத் தெரிகிறது. அவற்றுள் 'பரத சேனாபதீயம்' என்று ஒரு நூல் உளது. அந்தப் பெயர் வடமொழியில் இருப்பதைக்கொண்டு அது சேனாபதி என்னும் ஸ்கந்தரால் ஏற்பட்ட வடமொழி நூலின் தமிழ் மொழி பெயர்ப்போ என்று நினைக்க இடமிருக்கிறது. குஹேச பரதார்ணவம் என்னும் நூலும் தமிழ் நாட்டில் உள்ள மற்ற நாட்டிய நர்த்தன நூல்களின் பாணியில் ஏற்



பட்ட ஒரு நூலாக இருக்கலாம் என்று தோன்றுகிறது. தமிழில் 'பஞ்சபரதம்' என்ற நூலைப்பற்றிப் பேசப்பட்டிருக்கிறது. அது நாரதரால் இயற்றப்பட்டதாக சொல்லப்படுகிறது[1]. சங்கீதத்தின் முதலாசிரியராகிய நாரதர் நர்த்தன நாட்டிய நூல்களுள் ஐந்து சம்பிரதாயத் தொகுதிகளை ஒன்று சேர்த்துப் 'பஞ்ச பரதம்' என்னும் நூலை இயற்றியிருக்கலாம். பரதம் என்ற பெயருடைய ஐந்து நூல்களைப் பற்றிய ஆதாரங்கள் இருக்கின்றன. அவை ஆதிபரதம், நந்தி பரதம், மதங்க பரதம், அர்ஜுன பரதம், ஹனுமத் பரதம் என்பனவாகும்[2].

---

1. இந்த விவரங்கள் சிலப்பதிகாரம் என்னும் பழைய தமிழ் நூலையும் அதன் உரையையும் ஆதாரமாகக்கொண்டு சொல்லப்படுகின்றன.

2. (a) ஆதிபரதமும் அதன் உரைகளும்:—இது நாட்டிய நர்த்தனத்தைப் பற்றிய பழைய நூல்களிலிருந்து பல மேற்கோள்களைச் சேர்த்த ஓர் தொகுதி நூலாகும். இதில் பரமசிவனால் பார்வதிக்கு உபதேசிக்கப்பட்டதாகச் சொல்லப்படும் 'ஆதிபரதம்' என்ற நூலிலிருந்தும் சில பகுதிகள் இருக்கின்றன. முக்கியமான அம்சங்களைச் சுருக்கமாக விவரிக்கிறது. நாட்டியாசாரியார் சபையோரைப்பார்த்து கலையை விவரித்து உரைக்கும் ஓர் சொற்பொழிவு உருவத்தில் இதுவும் இதன் தெலுங்கு உரைகளும் அமைந்திருக்கின்றன.

(b) நந்தி பரதம்:—நமது நூல் இதன் ஒரு பகுதியாகும்.

(c) மதங்க பரதம்:—இந்தப் பெயருடைய ஒரு நூல் இருக்கிறது. ஆனால் அது பிற்காலத்தில் லக்ஷ்மணார்யர் என்பவரால் தொகுக்கப்பட்டிருக்கிறது.

(d) அர்ஜுன பரதம்:—இந்தப் பெயரால் ஓர் பழைய நாட்டிய நூலின் சில பகுதிகள் இப்போது கிடைக்கின்றன. அவற்றில் தாளங்களும் ஹஸ்தங்களும் விவரிக்கப்பட்டிருக்கின்றன.

(e) ஹனுமத் பரதம்:—இந்த நூலைப்பற்றிய விவரம் சங்கீத நாட்டிய வெளியீடுகளில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இப்பொழுது எங்கு கிடைக்கும் என்ற விவரம் தெரியவில்லை. 'ஹனுமன்மதம்' என்ற பெயரில் சில அபிப்பிராயங்கள் சங்கீத நாட்டிய நூல்களில் பிரஸ்தாபிக்கப்படுகின்றன.

இதைக்கொண்டு நர்த்தன நாட்டியம் சேர்ந்த இக்கலை நம் நாட்டில் பல பாகங்களிலும் நன்றாகப் பரவிக் கலையைப்பற்றிய சாஸ்திரங்கள் பல சம்பிரதாயங்களாக நிலைபெற்றிருக்கின்றன என்று தெரிகிறது. சங்கீத ரத்னாகரத்தின் உரையாசிரியராகிய கோஹலர் என்ற பழைய நூலாசிரியர் நூலிலிருந்து எடுத்துக் காட்டியிருக்கும் ஓர் மேற்கோளில் 'பட்டதண்டு' என்ற ஓர் ஆசிரியரைப் பற்றிப் பேசப்பட்டிருக்கிறது. தண்டு என்பவர் நந்திகேசுவரராகவே இருக்கலாம். 'பட்ட' என்ற அடைமொழியைக்கொண்டு அப்பெயருடைய ஓர் அந்தணரையும் குறிக்கலாம்.

பரதார்ணவம் என்னும் நூல் 4000 ச்லோகங்கள் கொண்டதாகப் 'பரதார்ணவ சங்கிரஹம்' என்னும் நூல் கூறுகின்றது. பரதார்ணவ சங்கிரஹத்தின் முகவுரையில் அந்த நூல் உண்டான காரணம் கூறப்பட்டிருக்கிறது. இந்திரன் நந்திகேசுவரரை அணுகி அவரால் இயற்றப்பட்டிருக்கும் பரதார்ணவம் 4000 ச்லோகங்கள் கொண்டதாக இருப்பதால் அவசரமான சந்தர்ப்பங்களில் கற்று ஞாபகத்தில் வைத்துக்கொள்ளக் கூடியதாக இல்லை என்றும், அதைச் சுருக்கமான ஓர் சிறிய நூலாக அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறார். அப்போது ஏற்பட்ட அவசரம் என்னவெனில் சுக்ராசாரியாரால் நாட்டியம் கற்பிக்கப்பட்ட அசுரர்கள் ஓர் நாட்டிய போட்டிக்குத் தேவர்களை அழைத்தார்கள். நந்திகேசுவரர் இந்திரனுடைய வேண்டுகோளுக்கிணங்க சுருக்கமான புதிய நூலை உண்டாக்குகிறார். அதைக் கற்றுக்கொள்வதற்கு இந்திரன் சுமதி என்பவரை நியமிக்கிறார். அக்காரணம் பற்றி அந்த நூலுக்கு 'சுமதி போதகம்' என்ற பெயர் ஏற்பட்டிருக்கிறது.

---

இவற்றுள் a முதல் d வரையிலுள்ள நூல்கள் ஸரஸ்வதி மஹாலில் இருக்கின்றன.



இப்பொழுது வெளியிடப்பட்டுள்ள இந்த நூல் பல இடங்களிலிருந்து சேகரிக்கப்பட்டது. ஸரஸ்வதி மஹாலில் இந்த நூலின் முக்கியமான பகுதியாகிய நாலாவது அத்தியாயம் கடைசி ச்லோகம் முதல் 15வது அத்தியாயம் வரையில் கிடைத்துள்ளது. நாலாவது அத்தியாயம் கடைசி ச்லோகம் 'லலிதம்' என்னும் ஓர் பாத பேதத்தை விவரிக்கிறது. இந்த நூலில் சில அத்தியாயங்களின் கடைசியில் 'நந்திகேச்வர விரசிதே பரதார்ணவே' என்றும், வேறுசில அத்தியாயங்களின் கடைசியில் 'நந்திகேச்வர விரசிதே பரதார்ணவே சுமதி போதகே' என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. நானார்த்த ஹஸ்தத்தைப் பற்றிய பத்தாவது அத்தியாயத்தின் கடைசியில் 'நந்திகேச்வர விரசிதே பரதார்ணவே பார்வதீப்ரயுக்த பரத சந்த்ரிகாயாம் கதித நானார்த்த ஹஸ்த ப்ரகரணம்' என்று கூறப்பட்டிருக்கிறது. இந்த நூலின் முகப்புப் பக்கத்தில் நூலின் பெயர் 'பரதார்ணவக்ரந்த: நந்திகேச்வர விரசித:' என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. முதல் பக்கத்தில் 'பரதார்ணவ: நந்திகேச்வர விரசித:' என்றும் 'குஹேச பரதலக்ஷணம்' என்றும் இரண்டு பெயர்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. நூலின் கடைசியிலும் 'குகேச பரத லக்ஷணம்' என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் இந்த நூலில் பெரும்பாலும் பரதார்ணவம் என்ற பெரிய நூலின் பகுதியாக இருந்தபோதிலும் 'குஹேச பரதலக்ஷணம்', 'ஸுமதி போதக பரதார்ணவம்', 'பார்வதீ ப்ரயுக்த பரதார்த்த சந்த்ரிகா' என்ற மூன்று நூல்களிலிருந்தும் சில பகுதிகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன என்பது தெளிவு. இந்த நூலிலுள்ள அத்தியாயங்களில் பாத பேதங்கள், ஸ்தானகங்கள் அவற்றின் உபயோகங்கள், ஸங்கர ஹஸ்தம் என்னும் முத்திரைகள், 108 தாளங்கள், சாரிகள், அங்கஹாரங்கள், நானார்த்த ஹஸ்தங்கள், ச்ருங்க நாட்டியம், சப்த லாஸ்யம், புஷ்பாஞ்சலி என்னும் விஷயங்

க்ள் அடங்கியிருக்கின்றன. இதில் 101வது ச்லோகம்
முதல் 810வது ச்லோகம் வரையில் இருக்கிறது.

பரதார்ணவம் என்ற பெயருள்ள சுவடிகள் அவை
கிடைக்கக்கூடிய பல இடங்களிலிருந்து தருவிக்கப்பட்
டிருக்கின்றன. பூனா பண்டார்க்கர் கீழ்த்திசை ஆராய்ச்சி
நிலையத்திலிருந்து கிடைத்த சுவடியில் இரு பகுதிகள் இருக்
கின்றன. முதல் பகுதியில் நர்த்தனத்திற்கான பூர்வாங்
கங்களும் தேவர், மானிடர்களைக் குறிப்பிடுவதற்கான
அபிநயங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இரண்டாம்
பகுதி ஸங்கர ஹஸ்தம், நாஞர்த்த ஹஸ்தம் இவைகளோடு
ஆரம்பிக்கிறது. இது நமது ஸரஸ்வதி மஹால் நாலிலுள்ள
ஆறுவது, பத்தாவது அத்தியாயங்களாகின்றன. அதன்
பிறகு ஹஸ்த முத்திரைகளைப்பற்றிய மூன்று அத்தியாயங்
களிருக்கின்றன. இம்மூன்று அத்தியாயங்களுக்கும் பர
தார்ணவத்தின் முதல் மூன்று அத்தியாயங்கள் என்று
பெயரிடப்பட்டிருக்கிறது. பிறகு சிரஸ், பார்வைகள் இவை
களைப்பற்றிய ஓர் அத்தியாயம் இருக்கிறது. ஹஸ்த முத்
திரைகளைப்பற்றிய முதல் மூன்று அத்தியாயங்களும்
ஸரஸ்வதி மஹால் சுவடிகள் சிலவற்றில் தனிப் பகுதியாக
அகப்படுகின்றன. ஆகையால் முதல் மூன்று அத்தியாயங்
களும் பண்டார்க்கர் நிலையச் சுவடி, ஸரஸ்வதி மஹால்
சுவடிகள் இவைகளின் ஒத்தாசையைக்கொண்டு சேர்க்கப்
பட்டிருக்கின்றன. மைசூர் கீழ்த்திசை நிலையம் என்னும்
புத்தகசாலையிலிருந்து 'பரதார்ணவம்' என்ற பெயருடன்
ஓர் சுவடி கிடைத்தது. இதில் முதல் மூன்று அத்தியாயங்
களும் பண்டார்க்கர் நிலையம், ஸரஸ்வதி மஹால் நிலையம்
இவைகளிலுள்ள சுவடிகளைப் போலவேயிருக்கின்றன.
நான்காவது அத்தியாயம் இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்
டிருக்கிறது. முதற் பகுதியில் ப்ருஹஸ்பதி மதத்தின்படி
ஹஸ்த முத்திரைகளின் உபயோகம் கொடுக்கப்பட்டிருக்
கிறது. ஆனால் அது பரதார்ணவத்தின் ஒரு பகுதியாகச்



சொல்லப்பட்டிருக்கிறது. இதே பகுதி ஸரஸ்வதி மஹாலி
லுள்ள ஓர் தொகுப்பு நூலிலும் காணப்படுகிறது. அதி
லும் இது பரதார்ணவத்தின் ஓர் பகுதியாகவே கூறப்பட்
டுள்ளது. ஆனால் அத்தியாய எண் அதில் கொடுக்கப்பட
வில்லை. ஆகையால் இப்பகுதி நாலாவது அத்தியாயத்தின்
முதற் பகுதியாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது. மைசூர்ச்
சுவடியின் இரண்டாவது பகுதியும், பாத பேதங்களும்
ஸரஸ்வதி மஹால் சுவடிகள் சிலவற்றுள் தனியாகக்
கிடைக்கின்றன. ஆகையால் நாலாவது அத்தியாயம்
இரண்டாவது பகுதி பண்டார்க்கர் நிலையச் சுவடி, ஸரஸ்வதி
மஹால் சுவடிகள் இவற்றைக்கொண்டு தயார்செய்து
சேர்க்கப்பட்டிருக்கின்றன. இந்தப் பகுதியில் சிரஸ்,
த்ருஷ்டி, பாத பேதம் மூன்றும் அடங்கியிருக்கிறது.
சென்னை அரசாங்கக் கீழ்த்திசைச் சுவடி நிலையத்திலிருந்து
'பரதார்ணவம்' என்ற பெயரில் விரிவான தெலுங்கு
வியாக்கியானத்துடன் ஓர் சுவடி தருவிக்கப்பட்டது.
ஆனால் அதில் பல நூல்களைக்கொண்டு விவரிக்கப்பட்ட
ஹஸ்த முத்திரைகளைப்பற்றிய அத்தியாயம் மட்டுமே
காணப்படுகிறது. ஆகையால் அந்தச் சுவடி இந்த நூலைப்
பதிப்பிப்பதற்குப் பிரயோசனப்படவில்லை. பரதார்ணவம்
என்ற பெயருள்ள சுவடிகளிலிருந்து கிடைத்த பகுதிகள்
இம்மட்டுமே. இவ்வாறு சேர்ந்த ச்லோகங்கள் 1200.
4000 ச்லோகங்களில் பாக்கியுள்ள பகுதிகள் இன்னும்
தேடிக் கண்டுபிடிக்கப்பட வேண்டியிருக்கின்றன.

இந்த வெளியீட்டில் ஒன்று முதல் நான்கு அத்தியா
யங்களில் ஹஸ்தங்கள், த்ருஷ்டிகள், சிரஸ், பாதங்கள்
இவை அடங்கியிருக்கின்றன. ஐந்தாவது அத்தியாயத்தில்
ஸ்தானகங்கள் என்னும் நிற்கும் நிலைகள் 31 சொல்லப்பட்
டிருக்கின்றன. பரதர் நாட்டிய சாஸ்திரத்தில் 6 ஆடவர்
நிலைகளும், 3 மகளிர் நிலைகளும் கூறப்பட்டிருக்கின்றன.
பொதுநிலைகள் கூறப்படவில்லை. 1200ம் வருஷம் சார்ங்க

தேவர் எழுதிய சங்கீத ரத்னாகரம் என்னும் நூலில் பழைய நூல்களிலுள்ள விவரங்கள் யாவும் சேகரிக்கப்பட்டு அவற்றுள் முக்கியமான அம்சங்கள் நன்றாகத் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கின்றன. அதில், நிற்கும் நிலைகள் 13 மார்க்கநிலைகள் என்றும், 23 தேசீ நிலைகள் என்றும் பிரிக்கப்பட்டிருக்கின்றன. மார்க்கநிலைகள் ஆடவர்நிலை 6 மகளிர்நிலை 7 என்று இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. இதன்வழி நாட்டிய சாஸ்திரத்தைக்காட்டிலும் பரதார்ணவத்தை ஒத்திருக்கிறது. எனினும் பரதார்ணவத்தில் உள்ள பிரிவினை அதில் பிற்பகுதிகளில் 9வது அத்தியாயம் முதல் விவரிக்கப்பட்டிருக்கும் நர்த்தன வகைகளுக்காகவே ஏற்பட்டது. நிற்கும் நிலைகளின் வரிசையும் அந்த நர்த்தனங்களில் உள்ள வரிசையையே பின்பற்றியிருக்கிறது.

6-வது அத்தியாயத்தின் முதல் பகுதியில் ஸ்தானகங்களின் உபயோகங்கள் விவரிக்கப்பட்டிருக்கின்றன. இரண்டாவது பகுதியில் ஸங்கரஹஸ்தம் அல்லது புதிய வழியில் முத்திரைகளை இணைத்து உபயோகிக்கும் முறை விளக்கப்பட்டிருக்கிறது.

7-வது அத்தியாயத்தில் 108 தாளங்களின் விவரம் அடங்கியிருக்கிறது. இதிலுள்ள தாளங்களின் அங்கங்கள் ஆதிபரதம் என்னும் நூலிலும் தாளசமுத்திரம், சச்சபுடவெண்பா, பரதசங்கிரஹம் என்னும் தமிழ் நூல்களிலும் சொல்லப்பட்டிருக்கும் அங்கங்களை ஒத்திருக்கிறது. இந்த 108 தாளங்களும் பரதர் நாட்டிய சாஸ்திரத்தில் கூறப்படவில்லை என்பது கவனிக்கத்தக்கது. நாடகத்தையும், அபிநயத்தையும் விவரிப்பதே நாட்டிய சாஸ்திரத்தின் முக்கிய நோக்கம். ஆகையால் தாளங்கள் நாடக, அபிநயங்களுக்கு உபயோகப்படக்கூடிய கீதம், வாத்தியங்களுக்கு அவசியமான அளவே விவரிக்கப்பட்டிருக்கின்றன. 108 தாளங்கள் ஆதியில் முக்கியமாக நர்த்தனத்திற்காக ஏற்பட்டவைகளே யன்றி வாய்ப்பாட்டு, வாத்தியங்களுக்காக ஏற்பட்டவைகள் அல்ல. வாய்ப்பாட்டு வாத்தியங்களுக்கு ஆதியில் ஏற்பட்ட சச்சத்புடம், சாசபுடம், ஷட்பிதாபுத்ரகம், சம்பக்வேஷ்டாகம், உத்கட்டம் என்ற ஐந்து தாளங்களையும் அவைகளின் கலைகளை 2, 4, 8, முதலிய மடங்குகளாக விருத்திசெய்து உண்டான தாள உருவங்களையுமே உபயோகப்படுத்தி வந்தனர். அதனாலேயே 108 தாளங்களைப் பற்றிய விவரங்கள் பெரும்பாலும் நர்த்தன நூல்களிலேயே காணப்படுகின்றன.



ஒவ்வொரு தாளத்தையும் ஜதிகள் என்னும் சொல்லுக்கட்டுக்களைக்கொண்டு விஸ்தாரம் செய்யும் முறை நமது நூலில் தாள அத்தியாயத்தில் சொல்லப்படவில்லை. ஆனால் தாண்டவம், லாஸ்யங்களாலாகிய நர்த்தனப் பகுதிகளில் ஆங்காங்கு உபயோகப்படும் தாளங்களுக்குச் சொல்லுக்கட்டுக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஜதி வரிசைகள் நாட்டியாசாரியர்களால் நூற்றுக்கணக்காகக் கற்பனை செய்யப்பட்டிருக்கின்றன. அவை நர்த்தனத்தையும், தாளத்தையும் பற்றிய பழைய தமிழ் நூல்களிலும், ஜதிச் சுவடிகளிலும் கிடைக்கின்றன. இந்தச் சுவடிகளில் சில ஸரஸ்வதி மஹாலில் இருக்கின்றன.

8-வது அத்தியாயத்தில் சாரிகள் விவரிக்கப்பட்டிருக்கின்றன. சாரிகள் அல்லது கால்களின் அசைவுகளில் பூமி சாரிகள் 16ம் ஆகாச சாரிகள் 16ம் நாட்டிய சாஸ்திரம் முதலிய நூல்களில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. சங்கீத ரத்னாகரத்தில் இவைகளோடு தேசீ சாரிகள் என்று வேறு சில சாரிகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இந்த நூலில் பூமி சாரிகளில் 16ம் ஆகாச சாரிகளில் 9 மட்டுமே கொடுக்கப்பட்டிருக்கின்றன. இதற்குக் காரணம் பிற்பகுதிகளில் கொடுக்கப்பட்டிருக்கும் நர்த்தன வகைகளில் இந்த ஒன்பது சாரிகளே உபயோகப்படுகின்றன.

9வது அத்தியாயம் முதல் நர்த்தனங்கள் விவரிக்கப்படுகின்றன. இந்த நர்த்தனங்கள் வேறு நூல்களில் சொல்லப்படவில்லை. இந்த அத்தியாயத்தில் உள்ள நர்த்தனத்தின் ஒவ்வொரு பகுதிக்கும் அங்கஹாரம் என்று பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த அங்கஹாரங்கள் ஒவ்வொன்றும் நவரஸங்களில் ஒவ்வொரு ரஸத்திற்கு உரிய தாக அமைக்கப்பட்டிருக்கிறது. அதற்கிணங்கப் பெயர்களும் இடப்பட்டிருக்கின்றன. ச்ருங்காரரஸத்திற்குரிய அங்கஹாரங்களில் 'லலிதம்' என்ற பெயரால் 5 வகைகள் ஏற்பட்டிருக்கின்றன. இதேவிதமாக 'விக்ரமம்' என்ற பெயரில் வீர ரஸத்திற்குரிய மூன்று வகைகளும், 'காருணிகம்' என்ற பெயரில் கருண ரஸத்திற்குரிய 4 வகைகளும், 'விசித்ரம்' என்ற பெயரால் அத்புத ரஸத்திற்குரிய 2 வகைகளும் 'விகலம்' என்ற பெயரால் ஹாஸ்ய ரஸத்திற்குரிய 2 வகைகளும், 'விக்ருதம்' என்ற பெயரால் பீபத்ஸ ரஸத்திற்குரிய 2 வகைகளும், 'உக்ரதரம்' என்ற பெயரால் ரௌத்ர ரஸத்திற்குரிய 2 வகைகளும், 'சாந்திஜம்' என்ற பெயரில் சாந்த ரஸத்திற்குரிய 2 வகைகளும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த அங்கஹார நர்த்தனங்களிலுள்ள அசைவுகளும் முத்திரைகளும் மிகவும் சுலபமாக அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் ஒவ்வொரு அங்கஹாரத்திலும் அதற்குரிய ரஸம் ஜீவனுடன் விளங்குகிறது. ஒவ்வொரு அங்கஹாரத்திலும் பார்வைக்கும், நிலைகளிலுள்ள பாணிக்கும் அதிக முக்கியத்வம் கொடுக்கப்படுகிறது.

நாட்டிய சாஸ்திரத்தில் அங்கஹாரம் என்னும் சொல் 108 நர்த்தன கரணங்களுள் 8, 9, 10 அல்லது அதிகமான கரணங்களை ஒன்று சேர்த்த நர்த்தனத் தொகுப்புக்குப் பெயராக உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு கரணத்திலும் கைகள், கால்கள் இவைகளின் முத்திரைகளும் அசைவுகளும் அவற்றிற்குப் பொருத்தமான தலை முதலிய அங்கங்களின் அசைவுகளும் சேர்ந்திருக்கின்றன,



பல கரணங்கள் சேர்ந்த அங்கஹாரங்களை அப்பியசிப்பது மிகவும் கடினமான காரியம் என்பது சொல்லாமலே விளங்கும். கரணங்களே தற்கால சம்பிரதாயத்தில் பெரும்பாலும் புதிதாகச் சேர்க்கப்பட வேண்டியனவாக இருக்கின்றன. ஆனால் அதிர்ஷ்டவசமாக அவைகளின் அங்க நிலைகள் நமது தேவாலயங்கள் பலவற்றுள் உள்ள சிற்பங்களில் அமைத்துக் காப்பாற்றப்பட்டிருக்கின்றன. இவ்விதச் சிற்பங்களில் சிதம்பரம் கோயிலிலும், தஞ்சைப் பெரியகோயிலிலும் உள்ளவை விசேஷமானவை [1].

நாட்டிய சாஸ்திரத்தில் விவரிக்கப்பட்டிருக்கும் 32 அங்கஹாரங்களுள் 16 அங்கஹாரங்கள் த்ரியச்ரதாளங்கள் அதாவது மும்மூன்றான உள்நடையுள்ள தாளங்களிலும், மற்ற 16, சதுரச்ர தாளங்களிலும் அதாவது நான்கு நான்கான உள் நடையுள்ள தாளங்களிலும் நர்த்தனம் செய்யப்படவேண்டியவை என்று சொல்லப்பட்டிருக்

---

1. சிதம்பரம் கோயிலில் கரணங்கள் நடராஜர் ஆலயத்தின் கிழக் கோபுரம், மேலக் கோபுரம் இரண்டிலும் கருங்கல்லில் செதுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கரணத்தின் அடியிலும் அதை விவரிக்கும் நாட்டிய சாஸ்திர ச்லோகம் எழுதப்பட்டுள்ளது. தஞ்சைப் பெரியகோயிலின் கர்ப்பகிருஹத்திற்குமேல் மற்றொரு கர்ப்பகிருஹம் கட்டப்பட்டுக் காலியாக இருக்கிறது. அதன்மீதுதான் ப்ரும்மாண்ட கோபுரம் கூடுபோன்ற அமைப்பாகக் கட்டப்பட்டுள்ளது. மேலே உள்ள கர்ப்பகிருஹத்தைச் சுற்றி வெளிப்புறத்தில் கரணங்கள் 108ல் 81 கரணங்கள் கல்லில் செதுக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு உருவமும் நான்கு கைகளுடன் விளங்குகிறது. இது சிவ தாண்டவத்தின் பகுதி என்பதை இக்கைகள் விளம்பரப்படுத்துகின்றன. ஒவ்வொரு உருவமும் சுமார் 3 அடிச் சதுர அளவுள்ளது. இந்த உருவங்கள் சிதம்பரம் கோயிலிலுள்ள உருவங்களைக்காட்டிலும் அதிக ஜீவகளையுடனும் நாட்டிய சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருப்பதை நன்றாக அனுசரித்தும் செதுக்கப்பட்டிருக்கின்றன. 108 கரணங்களில் பாக்கியுள்ள 27 கரணங்களுக்கும் இடம் வகுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் உருவங்கள் செதுக்கப்படவில்லை. அந்தக் கரணங்கள் பூர்த்திசெய்யப்படாமலேயே இன்றுவரை இருந்துவருகின்றன,

கிறது. ஒவ்வொரு அங்கஹாரத்திற்கும் உரிய தாளமும் அதற்கான சொல்லுக்கட்டும் நாட்டிய சாஸ்திரத்தில் சொல்லப்படவில்லை. ஆனால் அதிர்ஷ்டவசமாக ஸரஸ்வதி மஹாலில் உள்ள ‘சங்கீத முக்தாவளி’ என்னும் நூலில் இவை காணப்படுகின்றன. இந்த நூல் தேவேந்திராசாரியார் என்பவரால் இயற்றப்பட்டதாகத் தெரிகிறது [2].

பரதார்ணவத்தில் சொல்லப்பட்டிருக்கும் அங்கஹாரங்கள் இவைகளினின்றும் முற்றிலும் வேறுபட்டவை. முதலாவதாக, இவை நர்த்தன கரணங்களால் தொகுக்கப்பட்டவைகளல்ல. இரண்டாவதாக இவை ஒவ்வொன்றும் ஒவ்வொருவகை ரஸபாவத்தைப் போஷிக்கக்கூடியதாகவும் அமைக்கப்பட்டவை. இவ்விரு அங்கஹாரங்களும் சிவபிரானாலேயே ஆடப்பட்டவையாக இரு நூல்களும் கூறியபோதிலும் நாட்டிய சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கும் அங்கஹாரங்கள் சிவபார்வதி நர்த்தனத்தில் சிவபிரானால் ஆடப்பட்ட பகுதியாகவும், பரதார்ணவத்தில் சொல்லப்பட்டிருக்கும் அங்கஹாரங்கள் பார்வதிதேவியின் ஆடற்பகுதியாகவும் இருக்கலாமோ என்று சந்தேகிக்க இடமிருக்கிறது.

10வது அத்தியாயத்தில் நானார்த்த ஹஸ்தங்கள் அதாவது ஒரே முத்திரையைப் பல பொருள்களைக் குறிப்பிட உபயோகிக்கும் முறை விவரிக்கப்பட்டுள்ளது. 11வது அத்தியாயத்தில் ஏற்கெனவே 9வது அத்தியாயத்தில் விவரிக்கப்பட்ட அங்கஹாரங்களுடன் வேறு நர்த்தனப் பகுதி

2. ‘சங்கீத முக்தாவளி’ என்ற பெயரில் இரண்டு நூல்கள் இருக்கின்றன. இரண்டின் ஆசிரியர் பெயரும் ஒன்றாகவே இருக்கிறது. ஒன்று ஓலைச்சுவடி. அதில் அக்கால சம்பிரதாயத்திலுள்ள நாட்டிய நர்த்தன சாஸ்திரம் தெளிவாக எழுதப்பட்டிருக்கிறது. இரண்டாவது காகிதச் சுவடி. இதில் சம்பிரதாயம் விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது. இரண்டாவதாகக் கூறப்பட்ட நூலிலேயே ஒவ்வொரு அங்கஹாரத்திற்கும் உரிய தாளமும் சொல்லுக்கட்டும் காணப்படுகின்றது.



களையும் சேர்த்து ஆடும் முறை சொல்லப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு அங்கஹாரத்தோடும் ஓர் ஸ்தானகம் இணைக்கப்பட்டு இவ்விணைப்புக்கு முன்பு ஓர் ஸ்தானகத்தோடுகூடிய ஆகாசசாரியும், பின்பு மற்றொரு ஸ்தானகத்தோடுகூடிய பூமி சாரியும் சேர்த்துத் தொகுக்கப்பட்டுள்ளது. இவ்விதமாக ஒவ்வொரு தொகுப்பிலும் ஆறு உறுப்புக்கள் இருக்கின்றன. இந்தத் தொகுப்புக்கு ‘ச்ருங்கநாட்டியம்’ என்று பெயர். பரமசிவன் கைலாசகிரியில் உத்தியான வனத்தை எதிர்நோக்கிய சிகரத்தில் இந்த நர்த்தனத்தை ஆடிக்காட்டியதால் இதற்கு இப்பெயர் ஏற்பட்டது. இந்த அத்தியாயத்தில் 9 வகை ச்ருங்க நாட்டியங்கள் விவரிக்கப்பட்டு இருக்கின்றன.

12-வது அத்தியாயத்தில் ச்ருங்க நாட்டியம் வஸந்தோற்சவத்தில் பார்வதி தேவியின் விருப்பப்படி எவ்வாறு கைலயங்கிரியின் சிகரத்தில் நடைபெற்றது என்பது விவரிக்கப்பட்டிருக்கிறது. பிறகு ஸ்தானகங்களை உண்டாக்கிய தேவர்களைப்பற்றிய விவரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஸ்தானகங்களோடு சேரக்கூடிய முத்திரைகளைப்பற்றிய விவரத்தோடு இந்த அத்தியாயம் முடிகிறது.

13-வது அத்தியாயத்தில் ‘ஸப்த லாஸ்யம்’ என்ற பெயருடைய ஏழு வகை நர்த்தனங்களும் விவரிக்கப்படுகின்றன. சுத்த நாட்டியம், தேசீ நாட்டியம், பேருணி, ப்ரேங்கணி, குண்டலி, தண்டிகா, கலசம் என்பவை அந்த ஏழு நாட்டியங்களாகும். இவற்றுள் முதலாவதான சுத்த நாட்டியம் ஏழு வகை ப்ரமண தாண்டவங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு தாண்டவத்தோடும் ஒரு கதி, ஒரு கரணம், ஒரு சாரி இவை சேர்க்கப்படுகின்றன. கதி அல்லது நடை என்பது ஓர் ஸ்தானகமும், ஓர் நடையும், ஓர் முத்திரையும் சேர்ந்தது. இவை ஒவ்வொன்றுக்கும் தாளங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு தாளத்திற்கும் அதற்குரிய சொல்லுக்கட்டு ஏற்பட்டிருக்

கிறது. இரண்டாவதான தேசீ நாட்டியம் ஐந்து வகைத் தாண்டவங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொன்றோடும் ஒரு கதி, கரணம், சாரி சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொன்றுக்கும் அதற்கான தாளமும் சொல்லுக்கட்டும் கொடுக்கப்பட்டிருக்கிறது. சுத்த நாட்டியம் பரமசிவனாலும், தேசீ நாட்டியம் பார்வதிதேவியாலும் ஆடிக்காட்டப்பட்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இதை விவரிக்கையில் தாண்டவம் லாஸ்யம் என்னும் சொற்கள் ஆடவர் நர்த்தனம், மகளிர் நர்த்தனம் இரண்டிற்கும் வித்தியாசமின்றிப் பொதுவாக உபயோகப்படுத்தப்பட்டிருக்கின்றன. ஏழு வகை ஆடலுக்கும் 'ஸப்த லாஸ்யம்' என்ற பெயர் ஏற்பட்டிருந்தபோதிலும் அதன் முதல் இரண்டு வகையிலுமுள்ள உறுப்புகளுக்குத் தாண்டவங்கள் என்ற பெயர் ஏற்பட்டிருக்கிறது.

மற்ற ஐந்து வகை நர்த்தனங்களில் பேருணி, ப்ரேங்கணி, குண்டலி என்பவை ஆதியில் முறையே ப்ரும்மா, ஸரஸ்வதி, மஹாவிஷ்ணு இவர்களால் ஆடிக் காட்டப்பட்டன. தண்டிகா, கலசம் இரண்டையும் மஹாலக்ஷ்மியே ஆடிக்காட்டினார். இவை ஒவ்வொன்றோடும் அதற்குரிய கரணமும், சாரியும் சேர்க்கப்பட்டிருக்கிறது. இவைகள் வரிசைக்கிரமமாகவும் விஸ்தாரமாகவும் 14-வது அத்தியாயத்தில் விவரிக்கப்படுகின்றன.

கடைசி அத்தியாயமாகிய 15-வது அத்தியாயத்தில் புஷ்பாஞ்சலி என்னும் அலாரிப்பு நர்த்தனத்தின் விதிகள் கூறப்படுகின்றன. தேவசபை, அரச சபை, மக்கள் சபை இவை ஒவ்வொன்றுக்கும் விதிகள் வெவ்வேறாக ஏற்பட்டிருக்கின்றன.

அபிநயத்திற்குப் பரதர் 'நாட்டிய சாஸ்திரம்' எவ்வாறு ஆதார நூலாக விளங்குகிறதோ அவ்வாறே பரதார்ணவம் நர்த்தனத்திற்கு ஆதார நூலாக உள்ளது. இந்த



நூலைக் கவனமாகக் கற்று அதைச் சம்பிரதாயத்தில் சேர்த்துக்கொண்டால் நமது நர்த்தனக் கலையில் பல புதிய அம்சங்கள் சேர்ந்து பூரணமாக விளங்கும்.

உபயோகம்:— இரண்டு கிளிகள் பறப்பதைக் குறிப்பிடுவதற்கும், ப்ரளயத்தைக் குறிப்பிடுவதற்கும் இந்த ஹஸ்தம் உபயோகப்படுகிறது.



### १८. पार्श्वमण्डलहस्तः ।

एतौ हि पार्श्वद्वितयं पर्यायात्समुपागतौ ।
पार्श्वमण्डलिनौ ज्ञेयौ करकर्मविशारदैः ॥ १२८ ॥

कपोतानां च गमने भुजगास्त्रे विशेषतः ।
पार्श्वमण्डलिनौ ज्ञेयौ पुरा भरतकोविदैः ॥ १२९ ॥

### 18. PĀRS'VAMAṆḌALI HASTA.

(128–129) If the hands in Ūrdhvamaṇḍali are taken to either side alternately then it is called 'Pārs'vamaṇḍali'.

*Uses*:— It is used to denote the gait of doves, and in denoting the miraculous weapon called Nāga Astra (the serpent-weapon).

### 18. பார்ச்வமண்டலி ஹஸ்தம்.

*(128–129)* ஊர்த்வமண்டலி ஹஸ்தத்தை மாற்றி மாற்றி இரு பக்கங்களிலும் வைத்துக்கொண்டால் அது 'பார்ச்வமண்டலி' ஹஸ்தமாகும்.

உபயோகம்:— இது புறுக்கள் செல்வதைக் காட்டுவதற்கும், நாகாஸ்திரத்தைக் குறிப்பிடவும் உபயோகப்படுகிறது.

### १९. उरोमण्डलहस्तः ।

एतौ तु चलितौ वक्षस्संमुखेन पुनः पुनः ।
उरोमण्डलिनौ ज्ञेयौ हस्तकर्मविशारदैः ॥ १३० ॥
क्रौञ्चानां गमने चापि खंजरीटगतिक्रमे ।
एतौ नियोजितौ पूर्वैरुरोमण्डलिनौ करौ ॥ १३१ ॥

## 19. URŌMAṆḌALI HASTA.

(130–131) If the hands in 'Pārśvamaṇḍali' are again and again shaken in front of the chest, then they are called 'Urōmaṇḍali'.

*Uses* :— It is used to denote the flight of *krounca* bird or of robins.

## 19. உரோமண்டலி ஹஸ்தம்.

*(130–131)* பார்ச்வ மண்டலி ஹஸ்தங்களை மார்புக்கு நேராகத் திரும்பத்திரும்ப அசைத்தால் அது 'உரோமண்டலி' ஹஸ்தமாகும்.

உபயோகம் :— இந்த முத்திரை க்ரௌஞ்ச பக்ஷிகள் அல்லது சிட்டுக் குருவிகள் பறப்பதைக் குறிப்பிட உபயோகப்படுகிறது.

## २०. नलिनीपद्मकोशहस्तः ।

पद्मकोशाभिधौ हस्तौ उरोदेशसमाश्रितौ ।
व्यावृत्तौ चलिताकारौ नलिनीपद्मकोशकौ । १३२ ॥
सनालपद्मयुगले मर्मोक्त्यां च विशेषतः ।
मूकनाट्यानुयोगेऽपि नलिनीपद्मकः कृतः ॥ १३३ ॥

## 20. NALINĪ PADMAKŌŚA HASTA

(132–133) If hands holding 'Padmakōśa' (Asamyuta Hasta No. 14) start from the region of the chest, are given a winding movement outward and are held with a slight shake, then it is called 'Nalinī Padmakōśa'.

*Uses* :— It is used to show a pair of lotus with stalks, when using words with a hidden meaning, and in dumb-show.



## 20. நளினீ பத்மகோச ஹஸ்தம்.

*(132–133)* பத்மகோச முத்திரை (அஸம்யுத ஹஸ்தம் நெ. 14) களோடு கூடிய இரு கைகளும் மார்பின் உயரத்திலிருந்து ஆரம்பித்து வ்யாவர்த்தனமாக அதாவது சுண்டு விரல் முதலில் செல்லும்படியாகப் பக்கங்களில் சுழற்றப்பட்டு சிறிது அசைக்கப்பட்டால் அது 'நளினீ பத்மகோச' முத்திரையாகும்.

உபயோகம் :—தண்டுடன் கூடிய இரு மலர்ந்த தாமரைகளைக் குறிப்பிடுவதற்கும், மறைமுகமான பொருளுடன் பேசும்பொழுதும், ஊமை ஜாடை காட்டுவதற்கும் இந்த முத்திரை பயன்படும்.

## २१. कपोतहस्तः ।

दक्षिणाख्यकरः पूर्वं सर्पशीर्षाकृतिः स्थितः ।
अस्य पृष्ठे तु मिलितः पूर्ववद्वामहस्तकः ॥ १३४ ॥
प्रसृतोऽग्रे कपोतश्च कीर्तितो नाट्यवेदिभिः ।
कपोतद्वन्द्वभावेऽपि सर्पयोर्मिलनेऽपि च । १३५ ॥
कपोतोऽयं समाख्यातः करयोगविशारदैः ।

## 21. KAPŌTA HASTA

(134–135) When the right hand holds the Sarpaśīrṣa mudra (Asamyuta Hasta No. 16) and the left hand is joined to it back to back, and extended forward, then it is called 'Kapōta Hasta'.

*Uses* :— It is used to denote a pair of pigeons and the pairing of serpents.

## 21. கபோத ஹஸ்தம்.

*(134–135)* வலது கையில் ஸர்ப்பசீர்ஷ முத்திரை

(அஸம்யுத ஹஸ்தம் நெ. 16) யோடு இடது கையின்பின் புறத்தை அதன் முதுகுப்புறத்தில் சேர்த்து வைத்துக் கொண்டால் 'கபோத ஹஸ்த' மாகும்.

உபயோகம்:—ஜோடிப் புருக்களைக் குறிப்பிடுவதற்கும், பாம்புகள் பிணைதலைக் காட்டுவதற்கும் இந்த முத்திரை உபயோகப்படுகிறது.

## २२. मकरहस्तः ।

एतावेव चलांगुष्ठयुगलौ मकरः करः ॥
मकराख्यौ समाख्यातौ मत्स्यभावे विशेषतः ॥ १३६ ॥

## 22. MAKARA HASTA.

(136) When Sarpaśirṣa hands (Asamyuta Hasta No. 16) are placed one over the other, and the thumbs are shaken up and down then it is called Makara Hasta.

*Uses*:— It is used to denote the fish.

## 22. மகர ஹஸ்தம்.

(136) ஸர்ப்பசிர்ஷ முத்திரை (அஸம்யுத ஹஸ்தம் நெ. 16) களோடு கூடிய இரு கைகளையும் ஒன்றின் மேலொன்றாக வைத்துக்கொண்டு கட்டைவிரல்களை மாத்திரம் மேலும் கீழும் ஆட்டினால் 'மகர ஹஸ்த' மாகும்.

உபயோகம்:— இது மீன்களைக் குறிப்பிட உபயோகப்படுகிறது.

---



# चतुर्थोऽध्यायः ।

## ॥ हस्तविनियोगे बृहस्पतिमतम् ॥

नन्दिकेश्वरसंप्रोक्तभरतार्णववेदिना ।
उच्यते देवगुरुणा हस्तानां निर्णयक्रमः ॥ १३७ ॥

# CHAPTER 4.

## THE USE OF HASTAS ACCORDING TO BṚHASPATI.

(137) The following is the use of the Hastas according to Bṛhaspati, well-versed in Bharatārṇava of Nandikēśvara.

## அத்தியாயம் 4

## ஹஸ்தங்களின் உபயோகத்தில் பிருஹஸ்பதி மதம்.

(137) நந்திகேசுவரர் அருளிச்செய்த பரதார்ணவத்தை நன்குணர்ந்தவரான பிருஹஸ்பதியின் அபிப்பிராயப்படி ஹஸ்தங்களின் உபயோகங்கள் கூறப்படுகின்றன.

## १. पताकः ।

स्पर्शे देहीतिवचने निस्सङ्गस्य तु दर्शने ।
वीथ्यां प्रवेशभावेऽपि विकारे चाङ्गरागके ॥ १३८ ॥

आत्मार्थे शपथे चापि तूष्णींभावनिदर्शने ।
द्वेष श्रेष्ठस्य भावेऽपि गाढालिङ्गनभावने ॥ १३९ ॥

प्रलापे खङ्गरूपेऽपि पलायनविधिक्रमे ।
मंचार्थे सलिले सिन्धौ क्षीरे च दरकुञ्चिते ॥ १४० ॥

तत्र तत्रेतिवचने तारल्ये स्वीकृतिक्रमे ।
एवं पताकहस्तस्य विनियोगः प्रकीर्तितः ॥ १४१ ॥

## 1. PATĀKA

(138–141) Patāka (Asamyuta No. 1) is used to denote the act of touch, in asking for a gift, to indicate absence of attachment, to denote a street, to indicate an entry, in showing changes of form, to indicate the application of cosmetics, to denote one-self, in declaring a vow, to indicate silence, to denote a bull, to indicate excellence, in showing the act of embracing, in showing the act of wailing, to denote a sword, to show the act of running, to denote a bedstead, to denote water, to indicate the sea, to denote milk, and to indicate slight bending. The mudra is also used for expressing the idea of 'then and there', to indicate a a wavy form, and in receiving something to make it one's own.

## 1. பதாகம்

(138–141) பதாக முத்திரையை (அஸம்யுதம் நெ. 1) அடியிற்கண்டவைகளுக்கு உபயோகிக்கலாம்.

(1) தொடுதல் (2) 'கொடு' என்று கேட்டல் (3) பற்றற்ற தன்மையைக் காட்டுதல் (4) வீதி (5) நுழைதல் (6) மாறுபாடு (7) உடம்பில் பூச்சுக்களால் அலங்கரித்துக் கொள்ளுதல் (8) தன்னைக் குறிப்பிடுதல் (9) சபதம் செய்தல் (10) பேசாமல் வாயை மூடியிருத்தல் (11) காளையைக்குறிப்பிடுதல் (12) உயர்ந்த தன்மையைக் குறிப்பிடல் (13) மார்புறத் தழுவுதல் (14) பிரலாபித்தல் (15) கத்தியைக் குறிப்பிடுதல் (16) ஓடுவதைக் காட்டுதல் (17) கட்டிலைக் குறிப்பிடுதல் (18) நீரைக் குறிப்பிடுதல்



(19) ஸமுத்திரத்தைக் குறிப்பிடுதல் (20) பாலைக் குறிப்பிடுதல் (21) சிறிது வளைந்திருப்பதைக் குறிப்பிடுதல் (22) 'அங்கங்கே' என்பதின் பொருளைக் குறிப்பிடுதல் (23) சஞ்சலம் அல்லது அலையின் தன்மையைக் காட்டுதல் (24) ஒரு பொருளை ஒப்புக்கொண்டு தன்னுடையதாக்கிக் கொள்ளுதல்.

## २. त्रिपताकः ।

कोपे वीरेऽपि माङ्गल्यभावने चेत्तु निश्चयः ।
सन्ताने च प्रसङ्गे च भ्रूमध्ये यदि कुञ्चितः ॥ १४२ ॥

आघ्राणे चिबुकस्थायी किञ्चिन्नासाश्रिताङ्गुलिः ।
नेत्रान्तिके यदि तदा विविधाञ्जनधारणे ॥ १४३ ॥

पत्ररेखाकपोले च ज्ञानार्थे वक्षसि स्थितः ।
ग्रासे चेदाननस्याग्रे कर्णाग्रे तस्य निश्चयः ॥ १४४ ॥

शकुने चापवादेऽपि विधाने परिवर्तकः ।
एवं नानाविधार्थेषु त्रिपताकः प्रयुज्यते ॥ १४५ ॥

## 2. TRIPATĀKA

(142—145) Tripatāka (Asamyuta No. 2) is used for the following purposes:—

(1) in anger (2) in heroism (3) in indicating auspiciousness (4) to denote progeny (5) to denote the context (6) to show the mid-point between the brows (for this last, the Tripatāka has to be bent a little) (7) in smelling something (for this purpose the hand is placed at the chin and reaches the nose) (8) in applying pigment to the eye (9) in applying the hand to the ornamental painting of the cheek (10) to denote the realisation of truth (and for this

purpose, the mudra is placed at the region of the heart) (11) to denote a mouthful (and for this purpose the hand is placed in front of the mouth) (12) to make sure what one has heard (and for this purpose the hand is placed at the ear) (13) in indicating a good omen (14) to denote a bad rumour (15) to denote the planning and arranging anything (and for this purpose, the mudra is given a turning).

## 2. த்ரிபதாகம்

த்ரிபதாக ஹஸ்தம் கோபத்திலும், வீரத்திலும், மங்களத்தைக் குறிப்பிடவும், சந்ததியைக் குறிப்பிடவும், ஒரு சந்தர்ப்பத்தைக் குறிப்பிடவும் உபயோகப்படுகிறது. புருவங்களின் மத்தியைக் குறிப்பிட த்ரிபதாகத்தைச் சிறிது வளைத்துவைக்க வேண்டும். ஒரு பொருளின் வாசனையையறியும்போது த்ரிபதாகத்தை முகவாய்க்கட்டையருகே வைத்து விரலை மூக்கினருகே வைக்கவேண்டும். கண்ணருகே வைத்து மையிடுவதைக் குறிப்பிடவும், கன்னத்தில் வைத்து அதில் கஸ்தூரி முதலியவைகளால் கொடி முதலியவை எழுதி அலங்கரித்தலைக் காட்டவும், மார்பில் வைத்து ஞானத்தைக் குறிப்பிடவும் த்ரிபதாகம் உபயோகப்படும். ஒரு வாய் உணவைக் குறிக்க வாய்க்கெதிரில் பிடிக்க வேண்டும். காதில் கேட்ட ஒரு பொருளை நிச்சயம் செய்து கொள்ளும்போதும், சகுனத்தைக் குறிப்பிடவும், ஒருவரைப்பற்றி அபவாதத்தைக் கேட்கும்போதும் காதில் த்ரிபதாகத்தை வைக்கவேண்டும். ஒரு காரியத்தை ஏற்பாடு செய்வதைக் குறிப்பிட த்ரிபதாக ஹஸ்தத்தைத் திருப்ப வேண்டும். இவ்விதமாக த்ரிபதாக ஹஸ்தம் பல காரியங்களுக்கு உபயோகமாகிறது.



## ३. कर्तरीमुखहस्तः ।

अन्तर्भेदे च चञ्च्वर्थे नक्रास्ये चेदधोमुखः ।
निन्दायां शोधनायाञ्च ललाटाग्रे निवेशितः ॥ १४६ ॥

स्खलने दृग्विकारे च तत्रैवोर्ध्वमुखस्थितः ।
मरणे चेन्मौलिगामी संघर्षे चोर्ध्वरेचितः ॥ १४७ ॥

कौटिल्ये चेन्नाभिगामी वेगे पुंखितभावकः ।
कर्तरीहस्तजानितविनियोगः प्रकीर्तितः ॥ १४८ ॥

## 3. KARTARĪMUKHA HASTA

(146–148) Kartarī mudra (Asamyuta No. 4) is used to point out the difference between the members of the same group among themselves, to denote the beak of a bird and the mouth of a crocodile, and for these purposes the mudra is held pointing downward. It is also used in censure and in examining a proposition. For the latter purpose the mudra is placed at the top of the fore-head. It is used again to denote slipping, and to indicate changes in the look; and in the latter case the mudra is held upward. It is used to denote the rubbing of objects for which purpose the mudra is thrust upward. The mudra is brought towards the navel to denote a bended form. When the mudra is held like an arrow it denotes high speed.

## 3. கர்த்தரீமுக ஹஸ்தம்

(146–148) கர்த்தரீமுக முத்திரை (அஸம்யுதம் நெ. 4) யைக் கீழ்நோக்கிப் பிடித்தால் ஒரே வகையான பொருள்களிடையே ஒன்றுக்கொன்றுள்ள மாறுபாட்டைக் குறிப்

பிடுவதற்கும், பறவையின் அலகைக் குறிப்பிடுவதற்கும் முதலை வாயைக் குறிப்பிடுவதற்கும் உபயோகப்படுகிறது. மேலும் இந்த முத்திரை நிந்திப்பதைக் குறிப்பிடவும் உபயோகப்படும். நெற்றியின் மேல் பாகத்தில் வைத்துக் கொண்டால் ஒரு விஷயத்தைச் சோதித்துப் பார்ப்பதைக் குறிக்கும். அதே இடத்தில் இந்த முத்திரையை மேல் நோக்கிப் பிடித்தால் நழுவுவதையும் பார்வை மாறுவதையும் குறிப்பிட உபயோகப்படும். இந்த முத்திரையை மேல் நோக்கித் தலைவரை உயர்த்தினால் மரணத்தையும், மேலே வேகமாக நீட்டினால் பொருள்கள் ஒன்றோடொன்று உறைந்துகொள்வதையும், நாபிக்கருகே கொண்டுவந்தால் வளைந்த தன்மையையும், அம்பைப்போல் பிடித்தால் அதிவேகத்தையும் குறிக்கும்.

## ४. अर्धचन्द्रहस्तः ।

वलये मणिबन्धे चेदधस्ताच्चेन्मृगादने ।
आत्मार्थे वक्षसि स्थायी कट्यर्थे कटिमाश्रितः ॥ १४९ ॥
प्रयासे कण्ठगामी चेदाश्चर्ये कर्णमाश्रितः ।
रशनायां नाभिगामी ध्याने वक्षसि निश्चलः ॥ १५० ॥
द्वन्द्वभावादसंगश्चेद्गरुद्गरुडभावयोः ।
मुखाग्रे रेचिताकारः कट्यां कलह एव च ॥ १५१ ॥
नासाग्रे निश्चलाकारः प्रतिबिम्बविवेचने ।
अर्धचन्द्राख्यहस्तस्य विनियोगः प्रकीर्तितः ॥ १५२ ॥

## 4. ARDHACANDRA HASTA

(149-152) Ardhacandra mudra (Asamyuta No. 6) when held about the wrist denotes a bangle. For denoting carnivorous beasts it is held low. To denote oneself it is held at the chest. To denote the hip it is placed at the hip. To denote great effort it is raised towards the neck. To denote surprise it is held near the ear. To denote the belt-like ornament it is placed at the navel. To denote contemplation it is placed steadily at the chest. By holding the mudra in both the hands at a distance from each other a pair of wings or a *Garuda* (kite) is denoted. To indicate a quarrel the hands are placed at the hip. When the hand is placed before the face it is used to denote the gallop of a horse. If placed steadily in front of the nose it indicates the examination of one's own reflection.



## 4. அர்த்த சந்திர ஹஸ்தம்

(1491–52) அர்த்த சந்திர ஹஸ்தத்தை (அஸம்யுதம் நெ. 6) மணிக்கட்டைச்சுற்றிப் பிடித்தால் கைக்காப்பையும், கீழே கொண்டுசென்றால் மாமிசபக்ஷிணியையும், மார்புக்கருகே பிடித்தால் 'தன்னை'க் குறிப்பிடவும் உபயோகப்படுகிறது. இடுப்பில் வைத்துக்கொண்டால் இடுப்பைக் குறிக்கும். ஒரு பெரிய முயற்சியைக் குறிப்பிடுவதற்கு இந்த முத்திரையைக் கழுத்தை நோக்கி உயர்த்தவேண்டும். ஆச்சரியத்தைக் குறிப்பிட காதுக்கருகிலும், அரைநூல் மாலையைக் குறிப்பிட நாபிக்கருகிலும், த்யானத்தைக் குறிப்பிட மார்பில் ஸ்திரமாகவும், இந்த முத்திரையை வைத்துக்கொள்ளவேண்டும். மேலும் இரு கைகளிலும் இந்த முத்திரையை ஒன்றுக்கொன்று கொஞ்சதூரத்தில் இருக்கும்படி வைத்துக்கொண்டால் இரு சிறகுகளையோ அல்லது கருடனையோ குறிப்பிட உபயோகப்படும். இந்த முத்திரையோடு கூடிய கைகளை இடுப்பில் வைத்தால் வம்புச் சண்டையையும் முகத்துக்கெதிரில் பிடித்தால் குதிரைப் பாய்ச்சலையும் குறிக்கும். மூக்கிற்கு எதிராக இந்த முத்திரையைப் பிடித்

தால் தன்னுடைய பிரதிபிம்பத்தை ஆழ்ந்து கவனிப்பதைக் குறிப்பிட உபயோகப்படும்.

### ५. अरालहस्तः ।

चक्रवाके तुलायाञ्च कूचिमारे हृदि स्थितः ।
अमायामलिकस्थायी क्षमायां हृदि निश्चलः ॥ १५३ ॥
पैशुन्ये चेत्कर्णगामी नाभौ चेत्सलिलभ्रमे ।
अरालाभिधहस्तोऽयमेनमेवं प्रयोज्यते ॥ १५४ ॥

### 5. ARĀLA HASTA

(153-154) Arāla (Asamyuta No. 7) is placed at the level of the chest to denote chakravāka bird or a weighing instrument or 'Kūchimāra' (a captivating spell). When placed near the forehead (?) it denotes the new-moon. When held steadily at heart it denotes forbearance. Tale-bearing is denoted by taking the mudra to the ear. The mudra is placed at the chest to denote the level of water.

### 5. அராள ஹஸ்தம்

(153-154) அராள முத்திரையை (அஸம்யுதம் நெ.7) மார்புக்கு நேராகப் பிடித்தால் சக்ரவாகப் பக்ஷிகளையோ அல்லது தராசையோ அல்லது 'கூசிமாரம்' என்னும் ஸ்திரீ புருஷ வசியப்பிரயோகத்தையோ குறிப்பிட உபயோகப் படும். நெற்றிக்கருகே இந்த முத்திரையைப் பிடித்தால் அமாவாசையைக் குறிப்பிடவும், மார்பில் ஸ்திரமாகப்பிடித் தால் பொறுமையைக் குறிப்பிடவும், காதுக்கருகே பிடித் தால் கோள் சொல்வதைக் குறிப்பிடவும் உபயோகப்படும். மார்பருகே வைத்தால் தண்ணீர் மட்டத்தைக் குறிப்பிட உபயோகப்படும்.



### ६. शुकतुण्डहस्तः ।

पुंखितो भिण्डिपालार्थे भाव्युदन्ते च निश्चलः ।
भ्रमणे वक्षसि चलः पाञ्चाले तु विनिश्चलः ॥ १५५ ॥
ब्रह्मास्त्रे चेन्मुखस्याग्रे कौटिल्ये परिवर्तकः ।
नाभावूर्ध्वाकृतिर्ज्ञाने प्रेरितश्चेन्महाभये ॥ १५६ ॥
एवं नानाविधार्थेषु शुकतुण्डकरो भवेत् ।

### 6. S'UKATUṆḌA HASTA

(155-156) When the hand holding S'ukatuṇḍa (Asamyuta No. 8) is held like a shooting arrow then it denotes the weapon '*Bhinḍi Pālā*' (a heavy spear-like weapon). If the mudra is held steady it denotes a future happening. If it is shaken near the chest it denotes rotation. If it is held without any motion it denotes the country or citizen of Pāncālā (Punjab). If it is held before the face it denotes the Brahmāstra (the most powerful miraculous missile). If the hand holding the mudra is twisted it shows a bending. If it is held looking upward at the level of the navel it denotes spiritual knowledge. If it is sent forward it denotes great danger.

### 6. சுகதுண்ட ஹஸ்தம்

(155-156) சுகதுண்ட ஹஸ்தத்தை (அஸம்யுதம் நெ. 8) அம்பு செல்வதைப்போல் பிடித்தால், 'பிண்டிபாலம்' என்ற ஆயுதத்தைக் குறிப்பிடும். இந்த முத்ரையை ஸ்திரமாகப் பிடித்தால் நடக்கப்போகும் ஓர் சம்பவத்தை யும், மார்புக்கருகில் இதை அசைத்தால் சுழல்வதையும், அசைக்காமல் வைத்துக்கொண்டால் பாஞ்சால தேசத்தை

யோ தேசவாசியையோ குறிப்பிடவும் உபயோகப்படும். முகத்திற்கு நேராக இந்த முத்திரையைப் பிடித்தால் ப்ரம் மாஸ்திரத்தைக் குறிப்பிடவும் இந்த முத்திரையோடு கூடிய கையைத் திருப்பினுல் வளைந்த தன்மையைக் குறிப்பிடவும், இந்த முத்திரையை நாபிக்கருகே மேல் நோக்கிப் பிடித்தால் ஆத்ம ஞானத்தைக் குறிப்பிடவும் உபயோகப்படும். முன் ஞல் கொண்டு சென்ருல் இது ஒரு பெரிய ஆபத்தைக் குறிப்பிட உபயோகப்படும்.

## ७. मुष्टिहस्तः ।

आलम्बने मध्यभावे छले संकेतभावने ॥ १५७ ॥
राजमन्त्रे साधनेऽपि भद्रार्थे वक्षसि स्थितः ।
फलके खड्गमुष्ट्यां च प्रणामे प्राकृतैः कृते ॥ १५८ ॥
मुष्टिहस्तो हस्तमर्मचतुरैरेवमिष्यते ।

## 7. MUSṬI HASTA

(157-158) Musṭi Hasta (Asamyuta No. 9) is employed to denote hanging from a support, a middle position, act of deception, words or signs with secret meaning, the deliberations of a king, a helpful device and the idea of 'weal'. In all these cases the mudra is held at the chest. It is also used to denoto a plank, a sword, the fist and salutation by common folk.

## 7. முஷ்டி ஹஸ்தம்

(157–158) முஷ்டி ஹஸ்தத்தை (அஸம்யுதம் நெ. 9) மார்புக்கருகே பிடித்தால் தொங்குவதையும், மத்திய பாகத்தையும், ஏமாற்றுவதையும் ரகசிய அர்த்தமுள்ள வார்த்தைகளையும் சைகைகளையும், அரசனது மந்திராலோசனையையும், காரியத்திற்கான சாதனத்தையும், க்ஷேமத்தையும்



குறிப்பிட உபயோகப்படும். மேலும் இந்த முத்திரை ஒரு பலகை, கத்தி, முஷ்டி முதலியவைகளைக் குறிப்பிடவும், சாமானியமக்கள் ஒருவருக்கொருவர் வணக்கம் தெரிவித்துக் கொள்ளும்போதும் உபயோகப்படுகிறது.

## ८. शिखरहस्तः ।

धनुष्मतां भावनासु तिर्यक्चेद्दन्तधावने ॥ १५९ ॥
प्रेरितश्चरमार्थेषु (?) कुन्तानां धारणेऽपि च ।
पितॄणां तर्पणे चापि नाट्यारंभे क्वचिद्भवेद् ॥ १६० ॥
उदात्तनायकार्थे चेदंसदेशमुपाश्रितः ।
सन्दर्भे स्वयमित्युक्ते कृशार्थे केवलेपि च ॥ १६१ ॥
किरातार्थे मुखाग्र चेत्कण्ठे चेन्मन्त्रभावने ।
व्यावृत्तपरिवृत्तश्वेतपोतार्थेषु विशेषतः ॥ १६२ ॥
एवमौचित्यभावेन युज्यते शिखरः करः ।

## 8. S'IKHARA HASTA

(159–162) S'ikhara Hasta (Asamyuta No. 10) is used in representing heroes armed with bows. It is also used when held obliquely to denote the cleaning of teeth. When it is sent forward it means "the end". It is also used when holding the weapon 'Kuntā' (a spear or lance). It is used again for offering sesamum and water to the Pitṛs (the departed souls). It is used among the initial poses of a Dance. It is also used to denote an 'udātta nāyaka' (a hero of great nobility) when the mudra is placed near the shoulder. It is used to denote the idea of 'a context', to denote oneself, and to denote thinness and the idea of 'only'. It is used

again to denote a hunter when the mudra is held at the level of the face and when held at the level of the neck it denotes the contemplation of a 'mantra' (sacred syllables). It denotes a boat when the hand holding the mudra is given a winding motion inward and outward.

### 8. சிகர ஹஸ்தம்

*(159–162)* சிகர முத்திரை (அஸம்யுதம் நெ. 10) வில் வீரர்களைக் குறிப்பிட உபயோகப்படும். இந்த முத்திரையைச் சாய்த்துப் பிடித்தால் பல் துலக்குவதையும், முன்னால் கொண்டு சென்றால் 'கடைசி'யையும், குந்தம் என்னும் ஈட்டியைப் போன்ற ஆயுதத்தையும் குறிப்பிட உபயோகப்படுகிறது. பித்ருக்களுக்குத் தர்ப்பணம் செய்வதைக் குறிப்பிடவும், நாட்டியத்தின் ஆரம்ப நிலைகளிலும் இந்த முத்திரை பயன்படுகிறது. இந்த முத்திரையைத் தோளின் மீது பிடித்தால் 'உதாத்த நாயகனை' அதாவது உயர்ந்த குணமுள்ளவனைக் குறிப்பிட உதவும். மேலும் சந்தர்ப்பத்தைக் குறிப்பிடவும், 'தன்னை'க்குறிப்பிடவும், மெலிந்த தன்மையைக் குறிப்பிடவும், 'அது மாத்திரம்' என்ற பொருளைக் குறிக்கவும், முகத்திற்கு நேராகப் பிடித்தால் வேடனைக் குறிப்பிடவும், கழுத்திற்கருகே பிடித்தால், மந்திர ஜபத்தைக் குறிப்பிடவும், உபயோகப்படுகிறது. மேலும் இந்த முத்திரையோடு கூடிய கையை உட்புறமாகவும், வெளிப்புறமாகவும் சுழற்றினால் ஒரு படகைக் குறிப்பிட இந்த முத்திரை பயன்படுகிறது.

### ९. कपित्थहस्तः ।

आकर्षणे मुखाग्रे चेद्धोमे बाणनिरूपणे ॥ १६३ ॥
वरुणे द्वन्द्वभावश्चेदैक्ये हृदि यदि स्थितः ।
कालार्थे कर्णगामी चेल्लीलाब्जानां च धारणे ॥ १६४ ॥



एवमर्थेषु विज्ञेयः कपित्थः कल्प्यते क्रमात् ।

### 9. KAPITTHA HASTA

(163–164) When Kapittha mudra (Asamyuta No. 11) is held at the level of the face it is used to denote the act of pulling, an oblation, an arrow or Varuṇa. If both hands holding the mudra are joined together, it denotes union. If it is placed near the heart it denotes the idea of time. When placed at the ear it denotes a blue lotus playfully worn in the ear.

### 9. கபித்த ஹஸ்தம்

*(163–164)* கபித்த ஹஸ்தத்தை (அஸம்யுதம் நெ. 11) முகத்திற்கு நேராகப் பிடித்தால் ஒரு பொருளைப் பிடித்திழுப்பதையும், ஹோமம் செய்வதையும், அம்பையும், வருணனையும் குறிப்பிட உபயோகப்படும். இரு கை முத்திரைகளையும் சேர்த்தால் ஒன்றாகச் சேருவதைக் குறிக்கும். ஹ்ருதயத்திற்கருகே பிடித்தால் காலத்தைக் குறிப்பிடவும், காதிற்கருகே பிடித்தால் காதில் அணியும் நீலோத்பலத்தைக் குறிப்பிடவும் உபயோகப்படும்.

### १०. कटकामुखहस्तः ।

नृत्तावसानसमयेऽंसदेशमुपाश्रितः ॥ १६५ ॥
उपवेष्टितरूपश्चेद्देवानामभिषेचने ।
मर्यादायां तिरश्चीनो जानौ चेन्नूपुरार्थके ॥ १६६ ॥
एवं नाट्यप्रयोगेषु विज्ञेयः कटकामुखः ।

### 10. KAṬAKĀMUKHA HASTA

(165–166) Kaṭakāmukha (Asamyuta No. 12) is used at the end of a Dance when the hands hold the

mudra at the level of the shoulders. When the mudra is given a winding motion with the first finger going out first, it is used to denote a sacred bath given to deities. To denote a boundary it is moved horizontally. Held at the knee it denotes the anklet.

### 10. கடகாமுக ஹஸ்தம்

*(165–166)* கடகாமுக முத்திரையை (அஸம்யுதம் நெ. 12) ஓர் நர்த்தன முடிவில் தோள் உயரத்தில் உயர்த்திப் பிரயோகிக்கப்படுகிறது. விக்ரஹங்களுக்கு அபிஷேகம் செய்வதைக் குறிப்பிட இந்த முத்திரையுடன் கூடிய கையை ஆள்காட்டி விரல் முதலில் செல்லும்படி சுழற்ற வேண்டும். எல்லையைக் குறிப்பிட இந்த முத்திரையோடு கூடிய கையை நீளவாட்டத்தில் செலுத்தவேண்டும். பாதச் சிலம்பைக் குறிப்பிட முழங்காலுக்கருகே இந்த முத்திரையைக் கொண்டு செல்லவேண்டும்.

### ११. सूचीमुखहस्तः ।

सायमर्थे पार्श्वगामी किञ्चिदुद्वेष्टिताकृतिः ॥ १६७ ॥

रोमावल्यां कुक्षिगामी नासायामाननान्तिके ।
श्लाघायां सत्यवचने क्रोडदेशे तु निश्चलः ॥ १६८ ॥

पुरोभागे रेचितश्चेद्रथाङ्गस्य निरूपणे ।
उद्वेष्टितप्रभावश्चेदेकच्छत्रार्थभावने ॥ १६९ ॥

कर्णेपि च तथाभूतः कुण्डलार्थे विशेषतः ।
युष्मच्छब्दे पुंखितश्चेत् तच्छब्दे चाप्यधोमुखः ॥ १७० ॥

पूर्णिमायां ललाटाग्रे भ्रमरश्चक्रभावतः ।
नासाग्रे विप्रलम्भार्थे सूचिरेवं प्रयुज्यते ॥ १७१ ॥



## 11. SŪCĪMUKHA HASTA

(167–171) When Sūcīmukha (Asamyuta No. 13) is moved towards the side with a slight winding motion upward, it denotes the evening; if it is taken towards the abdomen it denotes the line of hair above the navel; if it is held near the face it denotes the nose, if held steadily near the stomach it is used to denote an appreciation or a declaration of truth. When it is moved fast forward and backward in front, it is used to denote the wheel of a chariot. When it is given a winding motion upward with the eyes assuming a look of power, it is used to denote the unquestioned authority of an emperor. To denote the ear or more particularly the ear-ring, it is held near the ear. To denote the second person it is extended forward. To denote the third person it is held pointing downward. If it is revolved in a circle before the fore-head it denotes the full moon. To indicate pining alone, it is held near the nose.

### 11. ஸூசீ முக ஹஸ்தம்

*(167–171)* ஸூசீமுக முத்திரையை (அஸம்யுதம் நெ 13) இலேசான சுழற்றலோடு பக்கத்தில் மேலே கொண்டு சென்ருல் சாயங்காலத்தையும், வயிற்றுக்கருகே கொண்டு சென்ருல் நாபிக்கு மேலேயுள்ள ரோமாவளியையும், முகத்திற்கருகே பிடித்தால் மூக்கையும் குறிப்பிட உபயோகப் படும். வயிற்றுக்கருகே பிடித்தால் ஒருவரைச் சிலாகித்துப் பேசுவதையும், உண்மையை உரைப்பதையும், முன்னும் பின்னுமாக அசைத்தால் தேர்ச் சக்கரத்தையும், கம்பீர மான பார்வையோடு இந்த முத்திரையோடு கூடிய கையை மேலே சுழற்றிஞல் ஏகசக்ராதிபத்தியத்தையும் குறிப்பிட

உபயோகப்படுகிறது. காதையோ அல்லது குண்டலங்களையோ குறிப்பிட காதுக்கருகில் பிடிக்கவேண்டும். இந்த முத்திரையை முன்னால் நீட்டினால் முன்னிலையையும், கீழ் நோக்கிப்பிடித்தால் படர்க்கையையும் குறிப்பிட உபயோகப்படும். நெற்றிக்கு நேராகச் சுழற்றினால் பூர்ண சந்திரனைக் குறிப்பிடவும், மூக்கிற்கருகே பிடித்தால் விரஹ தாபத்தைக்குறிப்பிடவும், உபயோகப்படுகிறது.

## १२. पद्मकोशहस्तः ।

अधोमुखस्तु शुण्डायां ऊर्ध्वे चेद्बालवल्यके ।
पुंखितो यदि बिल्वार्थे हेमरूप्यादिभाजने । १७२ ॥
व्यावर्तपरिवर्तश्चेच्चक्रवाकेऽपि कोरके ।
क्वचित्करणभेदेषु पद्मकोशः प्रयुज्यते ॥ १७३ ॥

## 12. PADMAKŌS'A HASTA

(172-173) When held pointing downward Padmakōs'a (Asamyuta No. 14) can be employed to denote the elephant's trunk. When held upward, it is used to denote sparkling brightness. When it is thrust forward it may denote a *Bilva* fruit or a gold or silver ware. Cakravāka birds or their young ones are denoted by a winding motion inward and outward of the mudra.

## 12. பத்மகோச ஹஸ்தம்

*(172-173)* பத்மகோச முத்திரையை (அஸம்யுதம் நெ. 14) கீழ்நோக்கிப் பிடித்தால் யானையின் துதிக்கையையும், மேல்நோக்கிப் பிடித்தால் பளபளவென்று ப்ரகாசிப்பதையும், முன்னால் வேகமாக நீட்டினால் வில்வப் பழத்தையோ, தங்கம் அல்லது வெள்ளிப் பாத்திரத்தையோ குறிக்கும். உட்புறமாகவும், வெளிப்புறமாகவும் இந்த முத்திரையைச் சுழற்றினால் சக்ரவாகப்பக்ஷிகளையும், அவற்றின் குஞ்சுகளையும் குறிப்பிட உபயோகப்படும்.



## १३. बाणहस्तः ।

भृङ्गारे बडिशे स्नानवेद्यां शिरस्स्थभावने ।
बाणाभिधानहस्तोऽयं प्रयुज्यश्शास्त्रवेदिभिः ॥ १७४ ॥

## 13. BĀṆA HASTA

(174) This (Asamyuta No. 15) is used in enacting erotic scenes, in indicating an angling rod, to denote a bathing seat or any object on the head.

## 13. பாண ஹஸ்தம்

*(174)* இந்த முத்திரை (அஸம்யுதம் நெ. 15) ச்ருங்கார அபிநயங்களிலும், தூண்டிலையும், ஸ்நானத்திற்கான ஆஸனத்தையும் தலைமேல் வைத்துக்கொண்டிருக்கும் ஓர் பொருளையும் குறிக்க உபயோகப்படும்.

## १४. सर्पशीर्षहस्तः ।

कुंकुमे पंकभावेऽपि दानवेलाविवेचने ।
यदि स्तनान्तरस्थायी श्मश्रुधारणकर्मणि ॥ १७५ ॥
मुखानां क्षालनविधौ तस्मिन्नेवं प्रचारितः ।
द्वन्द्वभावात् कर्णगामी हन्त हाहेति भाषणे ॥ १७६ ॥
सर्पशीर्षकरस्सोऽयं प्रयोज्यो हस्तवेदिभिः ।

## 14. SARPASĪRṢA HASTA

(175-176) Sarpasīrṣa (Asamyuta No. 16) is used to denote the 'kumkum' mark on the fore-head, to

denote mire, and in indicating the actual act of giving. When held near the middle of the chest, it is used to denote the beard. It is used to indicate the washing of the face when moved about the face. Both the hands are raised towards the ear in exclaiming 'Ah! Alas!'.

### 14. ஸர்ப்பசிர்ஷ ஹஸ்தம்.

(175—176) நெற்றியில் குங்குமம் இட்டுக்கொள்வதைக் குறிப்பிடவும், சேற்றைக் குறிப்பிடவும், தானம் கொடுப்பதைக் குறிப்பிடவும், இந்த முத்திரை 'அஸம்யுதம் நெ. 16) உபயோகப்படும். மார்புக்கருகே வைத்துக்கொண்டால் தாடியைக் குறிக்கும். முகத்திற்கருகே அசைத்தால் முகம் கழுவுவதையும், காதினருகே இந்த முத்திரையோடு கூடிய இருகைகளையும் கொண்டு சென்றால் 'ஐயோ!' என்று அலறுவதையும் குறிப்பிடும்.

### १५. सर्पचतुरहस्तः ।

अस्मिन्ननामिकामूलमिश्रितोऽङ्गुष्ठ एव च ॥ १७७ ॥
नाम्नायं सर्पचतुरो विद्वद्भिः परिकीर्तितः ।
मधुद्रवे च कर्पूरे भुजङ्गचतुरो भवेत् ॥ १७८ ॥

### 15. SARPA CATURA HASTA

(177–178) If in Sarpaśīrṣa Hasta (Asamyuta No. 16) the thumb is placed at the foot of the ring-finger, it is called 'Sarpa Catura' (Hood-like catura). It is used to indicate honey or camphor.

### 15. ஸர்ப்பசதுர ஹஸ்தம்

(177–178) ஸர்ப்பசிர (அஸம்யுதம் நெ. 16) ஹஸ்தத்தில் மோதிரவிரலின் அடிப்பாகத்தில் கட்டை விரலை வைத்தால் அதற்கு 'ஸர்ப்ப சதுரம்' என்று பெயர்.



உபயோகம்:—தேன், கற்பூரம் இவைகளைக் குறிப்பிட இந்த முத்திரை பயன்படுகிறது.

### १६. चलसर्पकरः ।

तर्जन्यादिकनिष्ठान्तमिश्रितोऽङ्गुलिषु क्रमात् ।
शनैः प्रसारितोऽङ्गुष्ठश्चलसर्पकरो भवेत् ॥ १७९ ॥
कलाभेदे वैद्यपाकशोधनायां च सिद्रुके ।
अलक्तके प्रयोज्यः स्याच्चलसर्पकराभिधः ॥ १८० ॥

### 16. CALASARPA KARA.

(179–180) If in Sarpaśīrṣa Hasta, the thumb is made to move touching all the fingers from the first finger to the little finger, then it is called 'Calasarpa' Hasta (The moving serpent).

*Uses*:—It is used to indicate the separation of units of tāla into Kalas (parts), in examining the consistency of a pharmaceutical preparation, to denote the sāla tree, and in applying ornamental red paint to the feet.

### 16. சலஸர்ப்ப கரம்

(179-180) ஸர்ப்ப சிர்ஷஹஸ்தத்தில் கட்டைவிரலை, ஆள் காட்டி விரல் முதல் சுண்டுவிரல் வரையில் எல்லா விரல்களையும் தொட்டுக் கொண்டு நகர்த்தினால் அதற்கு 'சலஸர்ப்பகரம்' என்று பெயர்.

உபயோகம்:—ஒரு தாளத்தின் அங்கத்தைக் 'கலை' களாகப் பிரித்தலைக் காட்டுவதற்கும், சூரணம், லேகியம் முதலிய மருந்துவகைகளைத் தொட்டுப் பார்த்துப் பக்குவம் சரியாக இருக்கிறதா என்று சோதனை செய்யும் போதும், மராமரத்தைக் குறிப்பிடவும், காலுக்கு மருதோன்றி, செம்பஞ்சுக்குழம்பு முதலியவை இடும்போதும் இந்த ஹஸ்தம் உபயோகப்படுகிறது.

## १७. मृगशीर्षहस्तः ।

ललाटेंऽसे क्रोडसीम्नि कुक्षेरग्रे च निश्चलः ।
हस्तिन्यामपि शंखिन्यां चित्रिण्यां च विशेषतः । १८१ ॥
पद्मिन्यां च क्रमेण स्यात्तिर्यक्चेद्यौवने भवेत् ।
स्तनान्तरे निश्चलश्चेच्छिवलिंगस्य धारणे ॥ १८२ ॥
यदि नेत्रान्तरस्थायी लज्जायाश्च निवारणे ।
नाभौ चेद्बालकार्थेऽपि प्रयोज्यो मृगशीर्षकः ॥ १८३ ॥

## 17. MṚGASĪRṢA HASTA.

(181–183) When Mṛgasīrṣa Hasta (Asamyuta No. 17) is held steadily at the fore-head, near the shoulders, near the chest, and before the abdomen, they indicate respectively the four classes of women, namely the Padmini, Citrini, S'ankhini and Hastini according to their sexual and other characteristics.

## 17. ம்ருகசீர்ஷ ஹஸ்தம்

*(181–183)* ம்ருகசீர்ஷ ஹஸ்தத்தை (அஸம்யுதம் நெ. 17) நெற்றியில் வைத்தால் 'பத்மினி' என்னும் ஸ்திரீ ஜாதியையும், தோளுக்கு சமீபமாக வைத்தால் 'சித்ரிணி' என்னும் ஸ்திரீ ஜாதியையும், மார்புக்கருகே வைத்தால் 'சங்கினி' என்னும் ஸ்திரீ ஜாதியையும், வயிற்றுக்கருகே வைத்தால் 'ஹஸ்தினி' என்னும் ஸ்திரீ ஜாதியையும் குறிக்கும். யௌவனத்தைக் குறிப்பதற்கு இந்த ஹஸ்தத்தைக் குறுக்காகப் பிடிக்கவேண்டும். மார்பெதிரே அசைக்காமல் பிடித்தால் வெட்கத்தை விட முயற்சிப்பதையும், நாபியின் உயரத்தில் பிடித்தால் குழந்தையையும் குறிக்கும்.



## १८. सिंहमुखहस्तः ।

वृषभार्थे पुंखितश्चेन्मोक्षार्थे चेद्धृदि स्थितः ।
नासिकाग्रे तिरश्चीनस्संघर्षे कटुदर्शने ॥ १८४ ॥
आकर्णने श्रुतिस्थायी सिंहास्योऽयं प्रकल्प्यते ।

## 18. SIMHAMUKHA HASTA.

(184) Simhamukha mudra (Asamyuta No. 18), if held like an arrow, denotes a bull; held near the heart it denotes salvation; held across near the nose it denotes rubbing or excited appearance, and at the ear it indicates the act of hearing.

## 18. ஸிம்ஹமுக ஹஸ்தம்

*(184)* ஸிம்ஹமுக முத்திரையை (அஸம்யுதம் நெ. 18) ஒரு அம்பைப் போல வைத்துக் கொண்டால் அது விருஷபத்தைக் குறிக்கும். மோக்ஷத்தைக் குறிக்க மார்புக்கருகிலும், உறைதலையும், கடுமையான பார்வையையும் குறிப்பிட மூக்கிற்கருகே குறுக்காகவும், இந்த முத்திரையைப் பிடிக்க வேண்டும். காதுக்கருகே பிடித்தால் கேட்பதைக் குறிக்கும்.

## १९. कांगूलहस्तः ।

तिर्यग्जंबूफलार्थेऽपि स्तनोद्भेदे स्तनाग्रतः ॥ १८५ ॥
मुखस्थाने यदि स्थायी द्राक्षाबिम्बफलादिषु ।
करणेऽधोमुखीभूतः कांगूलश्चैवमिष्यते ॥ १८६ ॥

## 19. KĀṄGŪLA HASTA.

(185–186) To denote the jambu fruit, Kāṅgūla Hasta (Asamyuta No. 19) is held across. When held

in front of the bosom, it denotes the bust. To denote the vine fruits and 'Bimba' fruit (fruit of red colour of a creeper) it is held in front of the mouth. It is employed in certain Karanas (combinations of hand and leg movements), when the mudra is held pointing downward.

### 19. காங்கூல ஹஸ்தம்

*(185–186)* நாவற்பழத்தைக் குறிப்பிட காங்கூல ஹஸ்தத்தை (அஸம்யுதம் நெ. 19) குறுக்காகவும், ஸ்தனங்களைக் குறிப்பிட அதற்கு எதிராகவும், திராக்ஷைப் பழத்தையும், கோவைப் பழத்தையும் குறிப்பிட வாய்க்கருகேயும் பிடிக்கவேண்டும். இந்த முத்திரையை கீழ்நோக்கிப் பிடித்து சில கரணங்கள் என்னும் நர்த்தனப்பகுதிகளிலும் உபயோகிக்கிறார்கள்.

### २०. अलपद्महस्तः ।

विकारे विरहे चापि नाभेरुद्वेष्टितो यदि ।
अंसोपरि यदि स्थायी माधुर्ये विनये क्वचित् ॥ १८७ ॥
हैयंगवीने वक्त्राग्रे यदि मोदकभावने ।
उद्वेष्टितो मस्तकोर्ध्वे मौलौ पद्मकिरीटयोः ॥ १८८ ॥
कुक्षौ चेच्चित्तपद्मार्थेष्वलपद्मकरः कृतः ।

### 20. ALAPADMA HASTA.

(187–188) To denote changes in features, or the pangs of separation, the hands holding Alapadma mudra (Asamyuta No. 20) starts from the navel and is given a winding movement of Udvēṣṭita (the hands going upward, the first finger going out first). To indicate sweetness or courtesy, this mudra is held above the shoulders. To denote ghee clarified from fresh butter



the mudra is held near the mouth, and if a winding movement upward is added, it denotes the sweet condiment called Mōdaka. When held above the head it is used to denote a lotus or a crown, and when held near the abdomen it denotes the lotus of the plexus near the navel.

### 20. அலபத்ம ஹஸ்தம்

*(187–188)* முகம் முதலிய அங்கங்களின் மாறுபாட்டையும், விரஹதாபத்தையும் குறிப்பிட அலபத்ம முத்திரையை (அஸம்யுதம் நெ. 20) நாபியிலிருந்து ஆரம்பித்து உத்வேஷ்டித கரணத்துடன் பிடிக்க வேண்டும். அதாவது ஆள் காட்டி விரல் முதலில் செல்லும்படிக் கையை மேலே சுழற்ற வேண்டும். இனிமையையும், மரியாதையையும் குறிப்பிட, தோள்களுக்கு மேலேயும், புத்துருக்கு நெய்யைக் குறிப்பிட இந்த முத்திரையை வாய்க்கருகிலும், மோதகத்தைக் குறிப்பிட இந்த முத்திரையை உத்வேஷ்டித கரணத்துடனும் உபயோகிக்க வேண்டும். தாமரையையோ அல்லது கிரீடத்தையோ குறிப்பிட இந்த முத்திரையைத் தலைக்கு மேலும், நாபி கமலத்தைக் குறிப்பிட இந்த முத்திரையை வயிற்றுக்கருகிலும் பிடிக்க வேண்டும்.

### २१. चतुरहस्तः ।

अपाङ्गस्थो लोचनार्थे शर्करायां मुखाग्रतः ॥ १८९ ॥
चित्तावधाने क्रोधे च ताटङ्कार्थे श्रुतिस्थितः ।
फालेऽपि लतिकार्थेऽपि नाभौ चेन्नाभिभावने ॥ १९० ॥
चिबुके चाटुवागर्थे चतुरस्संप्रयुज्यते ।

### 21. CATURA HASTA.

(189–190) To denote the eyes, the Catura Hasta (Asamyuta No. 21) is held at the corners of the eyes,

To denote sugar it is held near the mouth. When held at the ear it is used to denote attention, anger or the ear-ornament. To denote a creeper it is held near the fore-head. To denote the navel it is held at the navel. To denote a stroke of witticism it is held near the chin.

## 21. சதுர ஹஸ்தம்

*(189–190)* கண்களைக் குறிப்பிட சதுர ஹஸ்தத்தை (அஸம்யுதம் நெ. 21) கண்களின் ஓரத்திலும், சர்க்கரையைக் குறிப்பிட வாய்க்கருகிலும் பிடிக்க வேண்டும். கவனிப்பதையோ, கோபத்தையோ அல்லது காதணியையோ குறிப்பிட இந்த முத்திரையைக் காதுக்கருகிலும், கொடியின் வளர்ச்சியைக் குறிப்பிட நெற்றிக்கருகிலும், நாபியைக் குறிப்பிட நாபிக்கருகிலும், சாமர்த்தியமாகப் பேசுவதைக் குறிப்பிட முகவாய்க் கட்டைக்கருகிலும் இந்த முத்திரையைப் பிடிக்க வேண்டும்.

## २२. खण्डचतुरहस्तः ।

अस्मिन्प्रदेशिनीं त्यक्त्वा कनिष्ठामिश्रिता यदि ॥ १९१ ॥
नाम्नायं खण्डचतुरो विनियोगोऽस्य कल्प्यते ।
गोरोचनायां वक्त्राग्रे धूल्यामुद्वेष्टितो यदि ॥ १९२ ॥
कर्णान्तिके यदि स्थायी कर्णामृतमितीरिते ।
अंसस्थो यन्त्रभावेपि पुंखितो रुदितार्थके ॥ १९३ ॥
व्यावर्तो भंगभावेपि खण्डाख्यश्चतुरो भवेत् ।

## 22. KHAṆḌACATURA HASTA.

(191–193) If in 'Catura Hasta' the first finger is left off and the little finger is added it is called 'Khaṇḍacatura' Hasta.



*Uses:*—To denote gōrōcana it is held before the mouth. To denote dust, the hand is given a winding movement. To indicate something which can be called Karṇāmṛta (sweet like nectar to the ear) it is held near the ear. To denote a machine, it is held near the shoulder. When both hands are stretched out it is used to denote wailing. When the hands are given a winding movement towards the sides, with the little fingers going out first, it denotes breaking.

## 22. கண்ட சதுர ஹஸ்தம்

*(191–193)* சதுர ஹஸ்தத்தில் சுண்டுவிரலைச் சேர்த்துக் கொண்டு ஆள்காட்டி விரலை விலக்கி நீட்டினால் அதற்குக் 'கண்ட சதுர ஹஸ்தம்' என்று பெயர்.

உபயோகம் :—வாய்க்கருகே இந்த முத்திரையைப் பிடித்தால் கோரோசனையைக் குறிப்பிட உபயோகப்படும். தூசியைக் குறிப்பிட இந்த முத்திரையை வெளிப் புறமாகச் சுழற்றியும், 'கர்ணாம்ருதம்' என்ற பொருளைக் குறிப்பிட காதுக்கருகில் வைத்தும், ஓர் இயந்திரத்தைக் குறிப்பிடத் தோள்களுக்கருகில் வைத்தும், இந்த முத்திரையை உபயோகிக்கவேண்டும். இரண்டு கைகளையும் நீட்டினால் அழுவதைக் குறிப்பிட உபயோகப்படும். கைகளைப் பக்கங்களில் ஆள்காட்டிவிரல் முதலில் போகும்படிச் சுழற்றினால் ஒரு பொருள் முறிந்து போவதைக்குறிப்பிடப் பயன்படும்.

## २३. हंसास्यहस्तः ।

सिह्माभिधानहस्ते तु तर्जनी च कनिष्ठिका ॥ १९४ ॥
कुंचिते यदि हंसास्यकरस्सोऽयं प्रकीर्तितः ।
अजार्थे तर्जनार्थेपि विटंके पुंखितो यदि ॥ १९५ ॥

हंसानने यदि मुखे श्रोत्रे पैशुन्यभावने ।
एवं हंसास्यहस्तोऽयं प्रयोज्यो भरतादिभिः ॥ १९६ ॥

## 23. HAMSĀSYA HASTA

(194-196) When in Simhamukha Hasta (Asamyuta No. 18) the first finger and the little finger are bent it is called 'Hamsāsya Hasta'[1] (Asamyuta No. 23).

*Uses:*—It is used to denote a goat or a reprimand. If it is held as if holding an arrow, it may be used to indicate a dove-cot. If it is held at the level of the mouth it can be used to denote the mouth of a swan and if held near the ear it may denote tale-bearing.

## 23. ஹம்ஸாஸ்ய ஹஸ்தம்

*(194-196) ஸிம்ஹமுக ஹஸ்தத்தில் (அஸம்யுதம் நெ. 18) ஆள் காட்டிவிரலையும் சுண்டுவிரலையும் மடக்கினுல் 'ஹம்ஸாஸ்ய' ஹஸ்தமாகும். (அஸம்யுதம் நெ. 23)*

*உபயோகம்:—வெள்ளாட்டைக் குறிப்பிடுவதற்கும், அதட்டுவதைக் குறிப்பிடுவதற்கும் இந்த முத்திரை உபயோகப்படும். இந்த முத்திரையை அம்பைப் பிடிப்பதுபோல் பிடித்தால் புருக்கூண்டைக் குறிப்பிடுவதற்கும், வாய்க்கருகே பிடித்தால் அன்னத்தின் வாயைக் குறிப்பிடுவதற்கும், காதுக்கருகில் வைத்துக்கொண்டால் கோள் சொல்வதைக் குறிப்பிடவும் உபயோகப்படும்.*

## २४. हंसपक्षहस्तः ।

मुखाग्रे चेन्मोहचूर्णे क्रोडे यदि विवेचने ।
वारितश्चातपार्थेऽपि कपाले मकरिक्रमे ॥ १९७ ॥

1. Hamsasya mudra is defined in a slightly different manner in the body of Bhartarnava (Vide page 23.)



हंसपक्षाभिधो हस्तः कीर्तितो नृत्तकोविदैः ।

## 24. HAMSAPAKṢA HASTA

(197) When Hamsapakṣa (Asamyuta No. 24) is held at the edge of the mouth it will denote hypnotic powder, when held near the abdomen it denotes the act of separating. If the mudra is held so as to ward off heat it will mean the sun's heat. If it is held over the head it may denote the bracket-like ornament above the fore-head.

## 24. ஹம்ஸபக்ஷ ஹஸ்தம்

*(197) ஹம்ஸபக்ஷஹஸ்தத்தை (அஸம்யுதம் நெ. 24) வாய்க்கு முன்னுல் வைத்தால் வசியமருந்தைக் குறிப்பிடுவதற்கும், வயிற்றுக்கருகே பிடித்தால் வஸ்துக்களைப் பிரிப்பதைக்குறிப்பிடுவதற்கும் உபயோகப்படுகிறது. வெயிலை மறைப்பதைப் போல நெற்றிக்கு நேரே இந்த முத்திரையை வைத்துக் கொண்டால் சூரிய வெப்பத்தையும், தலைக்கு மேலே பிடித்தால் தலையில் அணிந்து கொள்ளும் தலை ஜோடிப்பையும் குறிக்கும்.*

## २५. सन्दंशहस्तः ।

संभाषणे वर्णनायां भस्मार्थे रजतेऽपि च ॥ १९८ ॥
सौरभ्ये नासिकाग्रे चेद्यदि वक्षसि चिन्तके ।
क्वचित्करणभेदेषु संदंशो योजितः क्रमात् ॥ १९९ ॥

## 25. SANDAMS'A HASTA

(198-199) Sandams'a (Asamyuta No. 25) is used during conversation, in describing things, to denote sacred ashes, and to denote silver. To denote a sweet

smell it is held before the nose. To denote deep thinking, it is held before the chest. In addition to these, it is also employed in certain Karaṇas (combinations of hand and leg movements).

### 25. ஸந்தம்ச ஹஸ்தம்

(198–199) ஸந்தம்ச ஹஸ்தம் (அஸம்யுதம் நெ. 25) சம்பாஷணையின்போதும், ஒரு பொருளை வர்ணிக்கையிலும், திருநீற்றைக் குறிப்பிடுவதற்கும், வெள்ளியைக் குறிப்பிடுவதற்கும், உபயோகப்படும். இனிய நறுமணத்தைக் குறிப்பிட மூக்கிற்கருகேயும், ஆழ்ந்த சிந்தனையைக் குறிப்பிட மார்புக்கு நேராகவும் பிடிக்க வேண்டும். சில கரணங்களிலும் இந்த முத்திரை உபயோகப்படுகிறது.

### २६. मुकुलहस्तः ।

जपेऽपि ब्रह्मरन्ध्रेऽपि तत्रैव स्यादधोमुखः ।
सौजन्यार्थे कुक्षिदेशात् किञ्चित्फुल्लोपवेष्टितः ॥ २०० ॥

तिर्यक् चेत्त्वथ निष्ठायां स्वाद्वर्थेऽथ विनिश्चलः ।
शुकादीनां च कवलदाने चेत्कुञ्चिताकृतिः ॥ २०१ ॥

एवं नानाविधार्थेषु प्रयोज्यो मुकुलः करः ।

### 26. MUKULA HASTA

(200–201) Mukula Hasta (Asamyuta No. 26) is used in repeating mantras. To denote the vertical capillary passage from the top of the head to the back of the tongue, which is called 'Brahmarandhra' (concentration at which leads to spiritual knowledge), the mukula mudra is held over the head pointing downward. It is also used to denote a friendly attitude, for which purpose, the hand is slightly opened and given a winding motion outward, starting from the region of the abdomen. To denote contemplation it is held horizontally. If it is held steadily it may be used to denote sweet taste. If it is held with pointed fingers it may be used to denote feeding of parrots with mouthfuls.



### 26. முகுள ஹஸ்தம்

(200–201) முகுள ஹஸ்தம் (அஸம்யுதம் நெ. 26) ஜபம் செய்வதைக் குறிப்பிட உபயோகப்படுகிறது. தலையிலிருந்து அடிநாக்கு வரை செல்லும் 'ப்ரம்மரந்த்ரம்' என்னும் நாடியைக் குறிப்பிட முகுள முத்திரையைத் தலைமேல் கீழ் நோக்கிப் பிடிக்க வேண்டும். சிநேக மனப்பான்மையைக் குறிப்பிட இந்த முத்திரையை இலேசாக விரித்து வயிற்றுப் பக்கத்திலிருந்து ஆரம்பித்து வெளிப்புறமாகக் கைகளைச் சுழற்ற வேண்டும். யோக நிஷ்டையைக் குறிப்பிடுவதற்கு இந்த முத்திரையைக் குறுக்காகவும், தித்திப்புச் சுவையைக் குறிப்பிட இதை ஸ்திரமாகவும், விரல்களை நீட்டிப் பிடித்தால் கிளிகளுக்கு உணவு கொடுப்பதைக் குறிப்பிடவும் உபயோகப்படும்.

### २७. ताम्रचूडहस्तः ।

त्रिकूटशिखरार्थेऽपि त्रिमूर्तीनां च दर्शने ॥ २०२ ॥
अरुणे चेत्तिरश्चीनस्ताम्रचूडः प्रयुज्यते ॥ २०३ ॥

इति हस्तविनियोगे बृहस्पतिमतं समाप्तम् ।

### 27. TĀMRACŪḌA HASTA

(202) Tāmracūḍa (Asamyuta No. 27) is used to denote a peak with three crests or the three God-heads

Brahma, Viṣṇu and S'iva. To denote red colour it is held across.

Thus ends the 'use of Hands' according to Brahaspati.

### 27. தாம்ரசூட ஹஸ்தம்

தாம்ரசூட ஹஸ்தம் (அஸம்யுதம் நெ. 27) மூன்று சிகரமுள்ள திரிகூட மலையைக் குறிப்பிடுவதற்கும், ப்ரும்மா, விஷ்ணு, சிவன் ஆகிய மூவரையும் குறிப்பிடவும் உபயோகப்படும். சிவப்பு வர்ணத்தைக் குறிப்பிட இந்த முத்திரையைக் குறுக்காகப் பிடிக்க வேண்டும்.

கைகளை உபயோகிக்கும் முறையில் ப்ருஹஸ்பதி மதம் முற்றிற்று.

## शिरोभेदाः—१४+५.

धुतं विधुतमाधूतमवधूतं च कम्पितम् ।
आकम्पितोद्वाहिते च परिवाहितमंचितम् ॥ २०४ ॥
निहंचितं परावृत्तमुत्क्षिप्ताधोमुखे तथा ।
लोलितं चेति विज्ञेयं चतुर्दशविधं शिरः ॥ २०५ ॥
तिर्यङ्नतोन्नतं स्कन्धानतमारात्रिकं समम् ।
पार्श्वाभिमुखमित्यन्यान्भेदान्पंचापरे जगुः ॥ २०६ ॥

## MOVEMENTS OF THE HEAD–14+5

(204–206) The movements and postures of the head are of 14 kinds. They are:— (1) Dhuta (2) Vidhuta (3) Ādhūta (4) Avadhūta (5) Kampita (6) Ākampita (7) Udvāhita (8) Parivāhita (9) Añcita (10) Nihañcita (11) Parāvṛtta (12) Utkṣipta (13) Adhōmukha and (14) Lōlita.



Five more varieties are also mentioned by others. They are:— (1) Tiryaṅnatonnata (2) Skandhānata (3) Ārātrika (4) Sama and (5) Pārs'vābhimukha.

### தலையின் அசைவுகள்—14+5.

(204–206) தலையின் அசைவுகளும் நிலைகளும் 14, அவையாவன:—(1) துதம் (2) விதுதம் (3) ஆதூதம் (4) அவதூதம் (5) கம்பிதம் (6) ஆகம்பிதம் (7) உத்வாஹிதம் (8) பரிவாஹிதம் (9) அஞ்சிதம் (10) நிஹஞ்சிதம் (11) பராவ்ருத்தம் (12) உத்க்ஷிப்தம் (13) அதோமுகம் (14) லோலிதம்.

(1) திர்யங்நதோன்னதம் (2) ஸ்கந்தாநதம் (3) ஆராத்ரிகம் (4) ஸமம் (5) பார்ச்வாபிமுகம் என ஐந்து அசைவு நிலைகளும் சிரஸிற்கு உண்டென்று சிலர் கூறுகின்றனர்.

### १. धुतम् ।

पर्यायेण शनैस्तिर्यग्गतमुक्तं धुतं शिरः ।
शून्यस्थानस्थितस्यैव पार्श्वदेशावलोकने ॥ २०७ ॥
अनाश्वासे विस्मये च विषादेऽनीप्सिते तथा ।
प्रतिषेधे च तस्योक्तः प्रयोगो भरतादिभिः ॥ २०८ ॥

### 1. DHUTA

(207–208) When the head is turned slowly from side to side, it is called 'Dhuta'. Its use is in turning from a position of stillness to look at the sides, in restlessness, in surprise, in sorrow, to say that something is not wanted, and when asking not to do a thing.

### 1. துதம்

(207–208) தலையை மெதுவாக இரு பக்கங்களிலும்

திருப்புவதற்கு ‘துதம்’ என்று பெயர். ஓர் நிலையிலிருந்து கொண்டு பக்கங்களிலுள்ளதைப் பார்க்கையிலும், அமைதியின்மையிலும், வியப்பு, வருத்தம், விருப்பமின்மை ஆகியவற்றிலும், ஒரு காரியத்தைச் செய்ய வேண்டாமென்கையிலும் ‘துத’ சிரஸ்ஸை உபயோகிக்க வேண்டும்.

## २. विधुतम् ।

द्रुतगत्या तदेव स्याद्विधुतं तत्प्रयुज्यते ।
शीतार्ते ज्वरिते भीते सद्यः पीतासवे तथा ॥ २०९ ॥

## 2. VIDHUTA

(209) When the head is turned from side to side rather swiftly then it is called ‘Vidhuta’. It is used for indicating shivering with cold, fever, terror-stricken state and first phase of drunkenness.

### 2. விதுதம்

(209) பக்கங்களில் தலையைத் துரிதமாக அசைப்பதற்கு ‘விதுதம்’ என்று பெயர். குளிரினால் அவதியுறுவதையும், ஜ்வரத்தையும், அச்சத்தையும், குடிமயக்கத்தின் முதல் நிலையையும் குறிக்க ‘விதுத’ சிரஸ்ஸை உபயோகிக்க வேண்டும்.

## ३. आधूतम् ।

आधूतं तु सकृत्तिर्यगूर्ध्वं नीतं शिरो मतम् ।
गर्वेण स्वाङ्गवीक्षायां पार्श्वस्थोर्ध्वनिरीक्षणे ॥ २१० ॥
शक्तोऽस्मीत्यभिमाने च प्रयोगस्तत्प्रकीर्तितः ।

## 3. ĀDHŪTA

(210–211) When the head is raised up towards the side, then it is called ‘Ādhūta’. It is used when



proudly looking at one's own features, looking at an object at a height by the side, and for indicating self-confident elation at one's own abilities.

### 3. ஆதூதம்

(210–211) தலையை ஒரு பக்கமாக உயர்த்துவதற்கு ‘ஆதூதம்’ என்று பெயர். தனது உடல் வனப்பைத் தானே கர்வத்துடன் பார்க்கையிலும், பக்கத்தில் உயரத்திலுள்ளதோர் பொருளைப் பார்க்கையிலும், தனது திறமையைப் பற்றித் தானே பெருமைப் படுத்திக் கொள்கையிலும் தலை ‘ஆதூத’ நிலையிலிருக்க வேண்டும்.

## ४. अवधूतम् ।

यदधस्सकृदानीतमवधूतं तदुच्यते ॥ २११ ॥
स्थित्यर्थे देशनिर्देशे संज्ञाऽऽह्वानयोरपि ।
आलापे च प्रयोक्तव्यमिदमाहुर्मनीषिणः ॥ २१२ ॥

## 4. AVADHŪTA

(211–212) When the head is lowered once, then it is called ‘Avadhūta’. It is used to denote the state of a thing, to point out a place, to refer to a hidden meaning, to ask somebody to sit and in the course of conversation.

### 4. அவதூதம்

(211–212) ஒருமுறை தலையைக் கீழே தாழ்த்துவதற்கு ‘அவதூதம்’ என்று பெயர். ஓர் பொருளின் நிலையைக் குறிப்பிடவும், ஓர் இடத்தைக் குறிப்பிடவும், பரிபாஷையாக ஒன்றைக் குறிப்பிடுவதற்கும், ஒருவரை அமரும்படி சொல்வதற்கும், ஸம்பாஷிக்கையிலும் இதை உபயோகிக்க வேண்டும்.

## ५. कंपितम् ।

बहुशो द्रुतमूर्ध्वाधः कम्पनात्काम्पितं शिरः ।
ज्ञानेऽभ्युपगमे रोषे वितर्के तर्जने तथा ॥ २१३ ॥
त्वरितप्रश्नवाक्ये च प्रयोक्तव्यमिदं शिरः ।

### 5. KAMPITA

(213–214) 'Kampita' is the name given to the shaking of the head up and down in quick succession. It is used to express comprehension, consent, anger, reasoning, chiding with authority and questioning in haste.

### 5. கம்பிதம்

(213–214) பலமுறை கீழும் மேலும் வேகமாகத் தலையை அசைப்பதற்கு 'கம்பிதசிரஸ்' என்று பெயர். இதனை ஒன்றைப் புரிந்து கொள்கையிலும், ஒப்புக் கொள்கையிலும், கோபத்திலும், ஊஹிப்பதிலும், பிறரை அதட்டுவதிலும், அவசரமாகக் கேள்விகள் கேட்கையிலும் பிரயோகிக்க வேண்டும்.

## ६. आकम्पितम् ।

आकम्पितं तदेव स्याद्द्विःप्रयुक्तं शनैर्यदि ॥ २१४ ॥
एतत्स्वारस्यनिर्देशे प्रश्ने संज्ञोपदेशयोः ।
आवाहने स्वचित्तस्थकथने च प्रयुज्यते ॥ २१५ ॥

### 6. ĀKAMPITA

(214–215) 'Ākampita' is the name given to the shaking of the head leisurely twice. It is used in expressing æsthetic appreciation, in questioning, in



making a hint, in giving instructions, in offering a seat, and in speaking out one's mind.

### 6. ஆகம்பிதம்

(214–215) தலையை இருமுறை மேலும் கீழும் நிதானமாய் அசைப்பதற்கு 'ஆகம்பிதம்' என்று பெயர். ஸ்வாரஸ்யத்தைத் தெரிவிக்கையிலும், கேள்வி கேட்கையிலும், குறிப்பாகத் தெரிவிக்கையிலும், பிறருக்கு உபதேசிக்கையிலும், ஒருவரை அமரும்படிச் சொல்லும்போதும், தன் மனதிலுள்ளதைப் பிறருக்கு அறிவிக்கையிலும் ஆகம்பித சிரஸை உபயோகிக்க வேண்டும்.

## ७. उद्वाहितम् ।

सकृदूर्ध्वं शिरो नीतमुद्वाहितमुदीरितम् ।
शक्तोऽहमिह कार्येऽस्मीत्यभिमाने प्रयुज्यते ॥ २१६ ॥

### 7. UDVĀHITA

(216) 'Udvāhita' is the name given to the raising of the head once. It is used to denote one's confidence in one's own abilities.

### 7. உத்வாஹிதம்

(216) ஒரு முறை தலையை மேலே நிமிர்த்துவதற்கு 'உத்வாஹிதசிரம்' என்று பெயர். தன்னால் ஒரு காரியத்தை சாதிக்கக்கூடும் என்பதை அறிவிப்பதற்கு உத்வாஹிதசிரத்தை உபயோகிக்க வேண்டும்.

## ८. परिवाहितम् ।

परिमण्डलिताकारभ्रमितं परिवाहितम् ।
लज्जाभरोद्भवे मौने वल्लभानुगतौ तथा ॥ २१७ ॥

विस्मये च स्मिते हर्षामर्षयोरनुमोदने ।
विचारे च विचारज्ञाः कार्यमाहुरिदं शिरः ॥ २१८ ॥

## 8. PARIVĀHITA

(217–218) 'Parivāhita' (revolving in all directions) is the name given to the revolving of the head on all sides in a circle. It is used for indicating dumbfounded shyness, at the pursuit of the lover, to express wonder, in laughter, in joy, in losing one's patience, in expressing approbation and in considering the pros and cons.

## 8. பரிவாஹிதம்

(217–218) தலையை நாற்புறங்களிலும் மண்டலாகாரமாய் (வட்டமாய்)ச் சுற்றுவதற்குப் 'பரிவாஹிதம்' என்று பெயர். லஜ்ஜை மிகுதியால் மௌனமுற்றிருக்கையிலும், நாயகன் பின்தொடரும் போதும், வியப்புற்றிருக்கையிலும், சிரிக்கையிலும், சந்தோஷத்துடனிருக்கையிலும், கோபமுற்றிருக்கையிலும், பிறரைச் சிலாகிக்கையிலும், யோசனையிலிருக்கையிலும், 'பரிவாஹிதம்' எனும் சிரத்தைப் பிரயோகிக்க வேண்டும்.

## ९. अञ्चितम् ।

शिरः स्यादञ्चितं किंचित्पार्श्वतो नतकंधरम् ।
रुक्चिन्तामोहमूर्च्छासु तत्कार्यं हनुधारणे ॥ २१९ ॥

## 9. AÑCITA

(219) 'Añcita' is the name given to the head when it is slightly bent towards one side. It is used to indicate pain, anxious thought, half-unconscious state, loss of consciousness, and while holding the chin.



## 9. அஞ்சிதம்

(219) பக்கத்தில் சிறிது வளைக்கப்பட்ட கழுத்துடன் கூடிய சிரஸிற்கு 'அஞ்சித சிரம்' என்று பெயர். இதனைப் பிணியுற்றிருக்கையிலும், கவலையுற்றிருக்கையிலும், அறிவு இழந்திருக்கையிலும், மயக்கமுற்றிருக்கையிலும், முகவாய்க்கட்டையைப் பிடித்திருக்கையிலும் பிரயோகிக்க வேண்டும்.

## १०. निहञ्चितम् ।

उत्क्षिप्तबाहुशिखरं मग्नग्रीवं निहाञ्चितम् ।
विलासे ललिते गर्वे बिब्बोके किलकिञ्चिते ॥ २२० ॥

मोट्टायिते कुट्टमिते माने स्तम्भे च तद्भवेत् ।
विलासो गमनादिः स्याच्चेष्टाऽश्लिष्टाङ्गया कृता ॥ २२१ ॥

कुत्सायां सुकुमाराङ्गोपाङ्गत्वं ललितं विदुः ।
बिब्बोकस्त्विष्टलाभेन जाताद्गर्वादनादरः ॥ २२२ ॥

हर्षाद्रोदनहासादि प्रोच्यते किलकिञ्चितम् ।
मोट्टायितं प्रियकथादृष्ट्यादौ तन्मयात्मता ॥ २२३ ॥

केशादिग्रहजे हर्षे दुःखिवद्भवनं तु यत् ।
स्यात्तत्कुट्टमितं मानो रोषः प्रणयसम्भवः ॥ २२४ ॥

स्यात्तु निष्क्रियता स्तम्भो नवोढाप्रियसंगमे ।

## 10. NIHAÑCITA

(220–225) 'Nihañcita' is the name given to that posture in which the shoulder-tops are raised and the neck sinks down. It is used to indicate the self-taught tricks and grace of movements (calculated to induce amour) like Vilāsa, Lalita, Garva, Bimbōka, Kila-

kiñcita, Moṭṭāyita, Kuṭṭamita, Māna and Stambha which are explained below:—

'Vilāsa' consists of the graceful movements when being embraced.

'Lalita' is the attractive delicacy and softness of limbs.

'Bimvoka' is the attitude of indifference born of pride and self-satisfaction in having secured the desired object.

'Kilakiñcita' is laughter and weeping with excessive joy.

'Moṭṭāyita' is losing one-self in the contemplation of the lover at the mere sight of him or hearing about him.

'Kuṭṭamita' is the pretence of pain while experiencing joy at such acts of contact as holding fast the locks.

'Māna' is the feeling of wounded pride during a quarrel in amour.

'Stambha' is shy stillness of a newly-wedded maiden at the first approach of her lover.

### 10. நிஹஞ்சிதம்

(220–225) இரு புஜங்களையும் உயர்த்திக் கழுத்தை வளைப்பதற்கு (இருத்துவதற்கு?) 'நிஹஞ்சிதசிரம்' என்று பெயர். விலாஸம், லலிதம், கர்வம், பிம்ப்வோகம், கிலகிஞ்சிதம், மொட்டாயிதம், குட்டமிதம், மானம், ஸ்தம்பம் முதலியவைகளில் நிஹஞ்சித சிரத்தை உபயோகிக்க வேண்டும்.



N844:21, 2
N57

மேற்சொன்ன விலாஸம், லலிதம், கர்வம் முதலியவற்றை விளக்குவோம்:—

1. நாயகன் அணையும்போது செய்யப்படும் சேஷ்டைகளுக்கு 'விலாஸம்' என்று பெயர்.

2. ஏற்கனவே கூறப்பட்டுள்ள அங்கோபாங்கங்களின் கோமளமான தன்மையே 'லலிதம்' எனப்படும்.

3. நினைத்த எண்ணம் ஈடேறியதால் கர்வமுற்றுப் பிறரை மதியாதிருக்கும் நிலையைப் 'பிம்ப்வோகம்' என்பார்கள்.

4. ஸந்தோஷத்தின் மிகுதியால் உண்டாகும் சிரிப்பிற்கும், அழுகைக்கும் 'கிலகிஞ்சிதம்' என்று பெயர்.

5. நாயகனின் வரலாற்றைக் கேட்பதிலும் நாயகனையே பார்த்துக் கொண்டிருப்பதிலும் ஈடுபட்டு மெய்மறந்திருக்கும் தன்மைக்கு 'மொட்டாயிதம்' என்று பெயர்.

6. கூந்தலைப் பிடித்தல் முதலிய காரியங்களால் மனதில் சந்தோஷங்கொண்ட போதிலும் வலியுண்டாவது போல் பாவனைகாட்டும் தன்மைக்குக் 'குட்டமிதம்' என்று பெயர்.

7. அன்போடு கோபிக்கும் தன்மை 'மானம்' எனப்படும்.

8. புதிதாக மணம் செய்யப்பட்ட 'நவோடா' இனத்தைச் சேர்ந்த மாது தன் நாயகனுடன் கூடுகையில் திகைத்து நிற்கும் தன்மையே 'ஸ்தம்பம்' எனப்படும்.

### ११. परावृत्तम्

पराङ्मुखीकृतं शीर्षं परावृत्तमुदीरितम् ॥ २२५ ॥
तत्कार्ये कोपलज्जादिकृते वक्त्रापसारणे ।
परावृत्तानुकरणे पृष्ठतः प्रेक्षणे तथा ॥ २२६ ॥

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 21554
EGMORE, MADRAS-600 008

## 11. PARĀVṚTTA

(225-226) 'Parāvṛtta' is the name given to the head when it is turned back. It is used in anger, shyness, turning the head to avoid the sight of anything, in showing how a person turns back his head, and in looking back.

## 11. பராவ்ருத்தம்

(225-226) தலையைப் பின்புறம் திருப்புவதற்கு 'பராவ்ருத்தசிரம்' எனப்பெயர். ஒரு காரியத்தைச் செய்கையில் ஏற்படக்கூடிய கோபத்திலும், நாணம் முதலியவற்றால் முகத்தைத் திருப்பும்பொழுதும், இப்படித் திரும்பினான் என்று சொல்லுகையிலும், பின்புறமாகப் பார்க்கையிலும், பராவ்ருத்த சிரத்துடன் இருக்கவேண்டும்.

## १२. उत्क्षिप्तम् ।

ऊर्ध्ववक्त्रं शिरो ज्ञेयमुत्क्षिप्तं च प्रयुज्यते ।
दर्शने तुङ्गवस्तूनां चन्द्रादिव्योमगामिनाम् । २२७ ॥

## 12. UTKṢIPTA

(227) 'Utkṣipta' is the name given to the head when the face is raised up. It is used for looking at objects far above like the sun, the moon and the stars in the sky.

## 12. உத்க்ஷிப்தம்

(227) முகம் உயரும் வண்ணம் தலையைப் பின்புறம் சாய்ப்பதற்கு 'உத்க்ஷிப்த சிரம்' என்று பெயர். உயரத்திலுள்ள பொருள்களையும், ஆகாயத்தையும், ஆகாயத்திலுள்ள விண்மீன்களையும் பார்ப்பதற்கு உத்க்ஷிப்தசிரத்தை உபயோகிக்கவேண்டும்.



## १३. अधोमुखम् ।

लज्जादुःखप्रणामेषु स्यादन्वर्थमधोमुखम् ।

## 13. ADHŌMUKHA

(228) 'Adhōmukha' (face looking down) is the name given to the head when the face is turned down. It is used in shyness, sorrow and in making obeisance.

## 13. அதோமுகம்

(228) நாணமுற்றிருக்கையிலும், வருத்தமுற்றிருக்கையிலும், பிறரை வணங்குகையிலும் முகம் கீழ்நோக்கத் தலையைக் குனியவைப்பதற்கு 'அதோமுக சிரம்' என்று பெயர்.

## १४. लोलितम् ।

शिरः स्याल्लोलितं सर्वदिक्कैः शिथिललोचनैः ॥ २२८ ॥
निद्रागदग्रहावेशमदमूर्च्छासु तन्मतम् ।

## 14. LŌLITA

(228-29) 'Lōlita' is the name given to the head when it is turned in several directions with languid eyes. The Lōlita head indicates sleep, illness, being possessed by spirits, drunkenness and fainting.

## 14. லோலிதம்

(228-229) நாற்புறங்களிலும் தலையைத் திருப்பும் தன்மைக்கு 'லோலிதசிரம்' என்று பெயர். உறங்குகையிலும், பிணியுற்றிருக்கையிலும், பூதபிசாசங்களின் பாதை ஏற்பட்டிருக்கையிலும், போதையிலிருக்கையிலும், மயக்

கம் மேலிட்டிருக்கையிலும் சிரம் லோலிதமாக இருக்க வேண்டும்.

## १५. तिर्यङ्नतोन्नतम् ।

तिर्यङ्नतोन्नति प्राह शिरस्तिर्यङ्नतोन्नतम् ॥ २२९ ॥
बिब्बोकादिषु कान्तानां तत्प्रयोगं प्रचक्षते ।

### 15. TIRYAṄNATŌNNATA

(229-230) 'Tiryaṅnatōnnata' is the name given to the bending of the head obliquely and raising it. It is used for showing Bimbvōka or the attitude of exaltation and indifference of ladies who have won their object.

### 15. திர்யங்நதோன்னதம்

*(229-230)* தலையைக் கோணலாக வளைத்து நிமிர்த்துவதற்கு 'திர்யங்நதோன்னதசிரம்' என்று பெயர். நினைத்த காரியம் ஈடேறியதால் மமதையுற்றுப் பிறரை மதியாதிருக்கும் தன்மையாகிய 'பிம்ப்வோகம்' எனும் நிலையில் காதலிகள் இருக்கும்போது அவர்களுடைய தலை திர்யங்நதோன்னதமாக இருக்கவேண்டும்.

## १६. स्कन्धानतम् ।

स्कन्धानतं तदाख्यातं स्कन्धे यन्निहितं शिरः ॥ २३० ॥
तन्निद्रामदमूर्च्छासु चिन्तायां च प्रयुज्यते ।

### 16. SKANDHĀNATA

(230-31) 'Skandhānata' is the name given to the head when it reclines on the shoulder. It is used to indicate sleep, drunkenness, fainting and excessive grief.



### 16. ஸ்கந்தாநதம்

*(230-231)* புஜத்தின் மீது தலையைச் சாய்த்து வைப்பதற்கு 'ஸ்கந்தாநத சிரம்' என்று பெயர். தூங்குகையிலும், போதையிலிருக்கையிலும், மயக்கத்திலும், கவலை மிகுதியிலும் ஸ்கந்தாநத சிரம் இருக்கவேண்டும்.

## १७. आरात्रिकम् ।

स्कन्धौ तु किंचिदाश्लिष्य भ्रान्तमारात्रिकं मतम् ॥ २३१ ॥
विस्मये दृश्यते तच्च पराभिप्रायवेदने ।

### 17. ĀRĀTRIKA

(231-232) 'Ārātrika' is the name given to the rotation of the head keeping the neck close to the shoulders.

### 17. ஆராத்ரிகம்

*(231-232)* தோள்களை ஒட்டினாற்போல கழுத்தை வைத்துக்கொண்டு தலையைச் சுற்றுவதற்கு 'ஆராத்ரிகம்' என்று பெயர். இதனை வியப்பிலும் பிறர் கருத்தை அறியும் போதும் உபயோகிக்கவேண்டும்.

## १८. समम् ।

स्वाभाविकं समं शीर्षं स्वभावाभिनये मतम् ॥ २३२ ॥

### 18. SAMAM

(232) 'Sama' is the name given to the head in its normal posture, and it is used to indicate a normal state.

### 18. ஸமம்

*(232)* இயற்கையான நிலையில் இருக்கும் தன்மைக்கு 'ஸமசிரம்' என்று பெயர். ஸ்வபாவாபிநயம் செய்கையில் ஸமசிரம் இருக்கவேண்டும்.

## १९. पार्श्वाभिमुखम् ।

पार्श्वाभिमुखमन्वर्थं पार्श्वस्थस्यावलोकने ।

इति शिरोभेदाः ।

## 19. PĀRS'VĀBHIMUKHA

(233) 'Pārs'vābhimukha' is the name given to the head when it is turned to one side and it is used when looking at a person or thing at the side.

Here ends the movements of the head.

## 19. பார்ச்வாபிமுகம்

(233) முகத்தை ஒரு பக்கத்தில் திருப்புவதற்குப் 'பார்ச்வாபிமுகம்' என்று பெயர். பக்கத்திலுள்ளவர்களைப் பார்க்கையில் பார்ச்வாபிமுகசிரம் இருக்கவேண்டும்.

சிரோ பேதங்கள் முற்றுப்பெற்றன.

---

## ॥ दृष्टयः ॥

## १. रसदृष्टयः ।

कान्ता हास्या च करुणा रौद्री वीरा भयानका ॥ २३३ ॥
बीभत्सा चाद्भुतेत्यष्टौ दृष्टच्या रसदृष्टयः ।



# DṚṢṬI (Look)

## 1. RASA DṚṢṬIS

(Looks calculated to yield Aesthetic enjoyment)

(233–234) The eight kinds of look capable of producing aesthetic enjoyment are (1) Kāntā (2) Hāsyā (3) Karuṇā (4) Roudrī (5) Vīrā (6) Bhayānakā (7) Bībhatsā and (8) Adbhutā.

## த்ருஷ்டி அல்லது பார்வை

## 1. ரஸத்ருஷ்டி

(233–234) (நவரஸங்களில் 'சாந்த ரஸம்' தவிர மற்ற ரஸங்கள் நிறைந்த பார்வைகள்) ரஸத்ருஷ்டி எட்டு வகைப்படும். அவையாவன :—

(1) காந்தாத்ருஷ்டி (2) ஹாஸ்யத்ருஷ்டி (3) கருணாத்ருஷ்டி (4) ரௌத்ரீத்ருஷ்டி (5) வீராத்ருஷ்டி (6) பயாநகாத்ருஷ்டி (7) பீபத்ஸாத்ருஷ்டி (8) அத்புதாத்ருஷ்டி.

## २. स्थायिभावदृष्टयः ।

स्निग्धा हृष्टा तथा दीना क्रुद्धा दृप्ता भयान्विता ॥ २३४ ॥
जुगुप्सिता विस्मितेति दशोऽष्टौ स्थायिभावजाः ।
स्थायिष्वव्यभिचारित्वं प्राप्तेषु रसदृष्टयः ॥ २३५ ॥

## 2. STHĀYĪ BHĀVA DṚṢṬIS

(Looks indicative of heights of emotion)

(234–235) The different kinds of look indicative of 'Sthāyī Bhāvas' or heights of emotion which if allowed to develop without interruption in the neces-

sary atmosphere, lead to aestheic enjoyment are eight in number, namely, (1) Snigdhā (2) Hṛṣṭā (3) Dīnā (4) Kruddhā (5) Dṛptā (6) Bhayānvitā (7) Jugupsitā and (8) Vismitā.

### 2. ஸ்தாயீபாவ த்ருஷ்டி

(மனோவிகாரத்தை அறிவிக்கக்கூடிய பார்வை)

(234–235) ஸ்தாயீபாவத்ருஷ்டி எட்டு வகைப்படும். அவையாவன :—

(1) ஸ்நிக்தா (2) ஹ்ருஷ்டா (3) தீநா (4) க்ருத்தா (5) த்ருப்தா (6) பயாந்விதா (7) ஜுகுப்ஸிதா (8) விஸ்மிதா.

ஸ்தாயீபாவங்கள் இடையூறில்லாமல் முடிவடையு மானல் 'ஸ்தாயீபாவத்ருஷ்டி' யே 'ரஸத்ருஷ்டி' யாகும்.

### ३. व्यभिचारिदृष्टयः ।

शून्या च मलिना श्रान्ता लज्जिता शङ्किता तथा ।
मुकुला चार्धमुकुला ग्लाना जिह्मा च कुञ्चिता ॥ २३६ ॥
वितर्किताऽभितप्ता च विषण्णा ललिताभिधा ।
आकेकरा विकोशा च विभ्रान्ता विप्लुता परा ॥ २३७ ॥
त्रस्ता च मदिरेत्येता व्यभिचारिषु विंशतिः ।
सर्वास्ता मिलिताः सत्यः षट्त्रिंशद्दृष्टयो मताः ॥ २३८ ॥

### 3. VYABHICHĀRI DṚṢṬIS

(Looks indicative of various states of mind)

(236–238) The different kinds of look indicative of Vyabhichāri Bhāvās or various states of mind are twenty in number, namely (1) S'ūnyā (2) Malinā



(3) S'rāntā (4) Lajjitā (5) S'aṅkitā (6) Mukulā (7) Ardha mukulā (8) Glānā (9) Jimbā (10) Kuñcitā (11) Vitarkitā (12) Abhitaptā (13) Viṣaṇṇā (14) Lalitā (15) Ākēkarā (16) Vikosa (17) Vibhrāntā (18) Viplutā (19) Trastā and (20) Madirā.

The total number of looks therefore come to 36. They are described below.

### 3. வ்யபிசாரி த்ருஷ்டி

(பலவகையான மனோநிலைமைகளை உணர்த்தும் பார்வை)

(236–238) வ்யபிசாரித்ருஷ்டி இருபது வகைப்படும். அவையாவன :– (1) சூன்யா, (2) மலிநா, (3) ச்ராந்தா, (4) லஜ்ஜிதா, (5) சங்கிதா, (6) முகுளா, (7) அர்த்த முகுளா, (8) க்லாநா, (9) ஜிம்ஹா, (10) குஞ்சிதா, (11) விதர்க்கிதா, (12) அபிதப்தா, (13) விஷண்ணு, (14) லலிதா, (15) ஆகேகரா, (16) விகோசா, (17) விப்ராந்தா, (18) விப்லுதா, (19) த்ரஸ்தா, (20) மதிரா. த்ருஷ்டி பேதங்கள் மூன்று பிரிவுகளிலுமாகச் சேர்ந்து 36. இவற்றின் லக்ஷணங்களும் விநியோகமும் வருமாறு:—

### ॥ रसदृष्टयः ॥

### १. कान्ता दृष्टिः ।

आपिबन्तीव दृश्यं या सविकासाऽतिनिर्मला ।
सभ्रूक्षेपकटाक्षा सा कान्ता मन्मथवर्धिनी ॥ २३९ ॥
यद्गतागतविश्रान्तिवैचित्र्येण विवर्तनम् ।
तारकायाः कलाभिज्ञास्तं कटाक्षं प्रचक्षते ॥ २४० ॥

### RASADṚṢṬIS

1. KĀNTĀ (Amourous Look)

(239–240) When the look seems to drink in the

object with eyes fully open and clear, the eye-brows being moved significantly, and is accompanied by 'Kaṭākṣa (side-long glance) it is called 'Kāntā Dṛṣṭi' or amourous look. It is calculated to induce amour.

When the eye-ball inconstantly goes this side and that, and is, in the next minute, stationary, it is called 'Kaṭākṣa'.

ரஸத்ருஷ்டி லக்ஷணங்கள்

1. காந்தா

(239–240) இப்பார்வை ச்ருங்கார ரஸம் நிறைந்தது. காம்விகாரத்தோடு புருவங்களை உயர்த்திக் கடைக்கண்ணால் பார்த்து மற்றவரைக் கவரக்கூடிய பார்வைக்குக் 'காந்தா த்ருஷ்டி' என்று பெயர்.

२. हास्या दृष्टिः ।

किंचिदन्तः समाविष्टविचित्रभ्रान्ततारका ।
आकुञ्चितपुटा मन्दमध्यतीव्रतया क्रमात् ॥ २४१ ॥
विस्मापनेऽभिनेतव्ये हास्या दृष्टिः प्रशस्यते ।

2. HĀSYĀ (Humorous Look)

(241–242) When the eye-ball slightly goes into the eye accompanied by varied wandering movements of the pupils, and the eye-lids are slightly contracted in different degrees to suit the intensity of laughter, is called 'Hāsyā Dṛṣṭi'.

Its use is in situations exciting laughter.

2. ஹாஸ்யா

(241–242) இப்பார்வையில் புன்முறுவல் நன்கு விளங்கும். கண்ணிமைகள் சிறிது மூடப்பட்டுக் கருவிழிகள் உட்புறம் செலுத்தப்பட்டுப் பலவகையாகச் சுழற்றப்படுமாஞல் 'ஹாஸ்யத்ருஷடி' யாகும். சந்தோஷச் சிரிப்பைக் குறிக்க இதை உபயோகிக்க வேண்டும்.



३. करुणा दृष्टिः ।

पतितोर्ध्वपुटा सास्रा शोकमन्थरतारका ॥ २४२ ॥
नासाग्रमेत्रानुगता करुणादृष्टिरुच्यते ।

3. KARUṆĀ (Pathetic Look)

(242–243) When the upper eye-lid droops down, and the pupils agitated with grief are directed towards the edge of the nose, and tears are present, the look is called 'Karuṇā Dṛṣṭi'.

3. கருணா

(242–243) இது இரக்கம் நிறைந்த பார்வை. நீர் ததும்பக் கண்களை மூடி மூக்கின் நுனியைப் பார்த்த வண்ணமிருக்கும் பார்வைக்குக் 'கருணா த்ருஷ்டி' என்று பெயர்.

४. रौद्री दृष्टिः ।

चकितद्विपुटा स्तब्धतारकाऽत्यन्तलोहिता ॥ २४३ ॥
रूक्षा भ्रुकुटिभीमोग्रा रौद्री दृष्टिरुदाहृता ।

4. ROUDRI (Look of fury)

(243–244) When both the eye-lids tremble, the pupils are motionless, the eyes are highly ruddy and dry and the look is fierce and furious with the straining of eye-brows, then it is called 'Roudrī Dṛṣṭi'.

### 4. ரௌத்ரீ

(243–244) இது கோபம் நிறைந்த பார்வை. புருவங்களை நெறித்துக் கண்கள் சிவந்து அசைவற்ற விழிகளுடனும் இமைகளை மட்டில் அசைத்துக்கொண்டும் பார்க்கும் பார்வைக்கு 'ரௌத்ரீ த்ருஷ்டி' என்று பெயர்.

### ५. वीरा दृष्टिः ।

अचञ्चला विकसिता गम्भीरा समतारका ॥ २४४ ॥
दीप्ता संकुचितापाङ्गा वीरा धीरैरुदाहृता ।
औदार्यधैर्यगाम्भीर्यमाधुर्यललितान्यपि ॥ २४५ ॥
तेजःशोभाविलासांश्च सप्त भेदान्विवृण्वती ।

### 5. VĪRĀ (Look of Heroism)

(244–246) When the pupils are steady, fully open, majestic and in their normal position, the ends of the eye are contracted and the eyes glow with brightness the look is called 'Vīrā' or Heroic.

This look expresses a variety of qualities, namely, liberality, courage, majesty, sweetness, affability, halo that inspires awe, lustre and grace.

### 5. வீரா

(244–246) இது கம்பீரமான பார்வை. நன்ருகத் திறக்கப்பட்ட கண்களுடன் அசைவில்லாது விழிகள் சமமாக இருக்க, கடைக்கண்கள் குறுகி கம்பீரமாகப் பார்க்கும் பார்வையே 'வீர த்ருஷ்டி' யாகும்

உதார குணத்தையும், தைர்யத்தையும், கம்பீரமான தோற்றத்தையும், மதுரமான தன்மையையும், லலிதத்தையும், பிரகாசிக்கும் தன்மையையும், அழகான அங்க அசைவுகளையும் இந்தப் பார்வை குறிக்கும்.



### ६. भयानकदृष्टिः ।

स्तब्धोद्वृत्तपुटाऽत्यन्तचञ्चलोद्वृत्ततारका ॥ २४६ ॥
दृश्यात्पलायमाने च भीत्या दृष्टिर्भयानका ।

### 6. BHAYĀNAKĀ (Look of fear)

(246–247) When the eye-lids are raised and held motionless, the pupils are raised and are very restless, and the person flees in fear from the object that is seen, then the look is called 'Bhayānakā'.

### 6. பயாநகா.

(246–247) இது பயத்தோடு கூடிய பார்வை. கண்களின் மேல் இமைகளை அசையாமல் உயர்த்தி, விழிகளைக் கண்ணின்மேல் பாகத்தில் சுழற்றி எதிரிலுள்ளதைக்கண்டு அஞ்சி ஓடப்பார்க்கும் அறிகுறியோடு கூடிய பார்வைக்குப் 'பயாநக த்ருஷ்டி' என்று பெயர்.

### ७. बीभत्सा दृष्टिः ।

बीभत्सा स्यान्मिलल्लोलपक्ष्मा तरलतारका ॥ २४७ ॥
दृश्योद्वेगादपाङ्गौ च निकुञ्चितपुटौ श्रिता ।

### 7. BĪBHATSĀ (Look of disgust)

(247–248) When the eyelids restlessly tend to come together, and the pupils are unsteady, and the eye-balls at the corners of the eye are driven by the repulsion caused by the object seen, to take shelter behind the contracted eye-lids, then the look is called 'Bibhatsā Dṛṣṭi'.

### 7. பீபத்ஸா.

(247–248) இது அருவருப்போடு கூடிய பார்வை.

கண்ணிமைகள் இரண்டையும் அடிக்கடி சேர்த்தும், கண் மூலைகளை நெருக்கியும், விழிகளை ஸ்திரமில்லாமல் இங்குமங்கும் செலுத்தியும் எதிரிலுள்ள பொருளின் மேல் உள்ள வெறுப்பினால் கடைக்கண்கள் இமைகளுக்குள் ஒளிந்தும் பார்க்கும் பார்வைக்குப் 'பீபத்ஸ த்ருஷ்டி' என்று பெயர்.

## ८. अद्भुता दृष्टिः ।

प्रसन्ना स्निग्धशुक्लांशान्तर्बहिर्गामितारका ॥ २४८ ॥
ईषत्कुञ्चितपक्ष्माग्राऽद्भुतापाङ्गविकासिनी ।
रसेष्वष्टसु शृङ्गारप्रमुखेषु क्रमादिमाः ॥ २४९ ॥

इत्यष्टौ रसदृष्टयः ।

## 8. ADBHUTĀ (Look of surprise)

(248–249) When the eyes are wide open, the white screen of the eye is moist, the pupils go into the white screen and come out alternately, the eye-lashes are slightly contracted, and the corners of the eye are bright with surprise, then the look is called 'Adbhutā Dṛṣṭi'.

The looks corresponding to the eight rasas (varieties of aesthetic enjoyment) have thus been described.

Here ends the eight Rasa Dṛṣṭis.

## 8. அத்புதா

(248–249) இது அதிசயிக்கும் பார்வை. இமைகளின் ஓரங்களைச் சிறிது வளைத்து விழிகள் நன்றாகத்தெரியும் வண்ணம் பிரகாசமாக்கிக் கருவிழியோடும் கருவிழியில்லாமலும், ஆச்சரியத்தினால் பிரகாசிக்கும் கடைக்கண் அமைந்த பார்வைக்கு 'அத்புத த்ருஷ்டி' என்று பெயர்.



ச்ருங்காரம் முதலிய எட்டு ரஸங்களைக்காட்டும் அபிநயங்களில் க்ரமமாக இந்த எட்டு த்ருஷ்டிகளையும் விநியோகிக்கவேண்டும்.

எட்டு ரஸத்ருஷ்டிகள் முற்றுப்பெற்றன.

## ॥ स्थायिभावदृष्टयः ॥

## १. स्निग्धा दृष्टिः ।

रसदृष्टिर्भवेद्भावदृष्टिर्भावैरनुल्बणैः ।
विकासिस्निग्धमधुरा चतुरे बिभ्रती भ्रुवौ ॥ २५० ॥
कटाक्षिणी साभिलाषा दृष्टिः स्निग्धाऽभिधीयते ।

## STHĀYĪ BHĀVA DṚṢṬIS

## 1. SNIGDHĀ (Loving look)

(250–251) When the looks pertaining to the rasas are accompanied by emotions of moderate intensity they become 'Bhāva Dṛṣṭis' or looks of emotion.

When the eyes are fully open and full of love and sweetness, the eye-brows are smartly held up, and the look through the corners of the eye is indulged in, bespeaking longing, then the look is called 'Snigdhā'.

## ஸ்தாயிபாவ த்ருஷ்டி லக்ஷணங்கள்

## 1. ஸ்நிக்தா

(250–251) இது ஸ்நேகம் அல்லது பிரியத்தோடு கூடிய பார்வையாகும். தனது உட்கருத்தைப் பிறர் அறியும் வண்ணம் மலர்ந்ததும், அழகானதுமான இமைகளுடன் கூடிய மனோகரமான கடைக்கண் பார்வைக்கு 'ஸ்நிக்த த்ருஷ்டி' என்று பெயர்.

## २. हृष्टा दृष्टिः ।

फुल्लगल्लविशत्तारा किंचिदाकुञ्चिता चला ॥ २५१ ॥
निमेषिणी स्मिताकारा हृष्टा दृष्टिरुदाहृता ।

### 2. HṚṢṬĀ (Look of delight)

(251–252) When the upper parts of the cheek are blown up, the pupils which seem to sink into them are somewhat contracted and restless, and the eye-lids tend to close with laughter, then the look is called 'Hṛṣṭā Dṛṣṭi'.

### 2. ஹ்ருஷ்டா

*(251–52)* இது களிப்பு மிகுந்த பார்வை. கன்னங்கள் பருத்துக்கண்கள் சிறிது மூடி, விழிகள் உள்ளிழுக்கப்பட்டு, இமைகளை அடித்துக்கொண்டு சிரிப்பை வெளியிடக்கூடிய பார்வைக்கு 'ஹ்ருஷ்ட த்ருஷ்டி' என்று பெயர்.

## ३. दीना दृष्टिः ।

या त्वर्धपतितोर्ध्वस्थपुटेषद्द्रुद्धतारका ॥ २५२ ॥
सबाष्पा मन्दसंचारा दीना दृष्टिरसौ मता ।

### 3. DĪNĀ (Look of low spirits)

(252–253) When the upper eye-lid is half-drooping, the pupils are somewhat restrained in their movements and tears are present, then the look is called 'Dīnā Dṛṣṭi'.

### 3. தீநா

*(252–253)* இது நலிந்த பார்வை. கண்களைப்பாதியளவு மூடித்திகைத்து நின்று, இமைகளில் விழிகளைச்



சொருகிக் கண்களில் நீர் ததும்ப மந்தமாகப் பார்த்தால் அதற்கு 'தீன த்ருஷ்டி' என்று பெயர்.

## ४. क्रुद्धा दृष्टिः ।

स्थिरोद्वृत्तपुटां रूक्षां किंचित्तरलतारकाम् ॥ २५३ ॥
भ्रुकुटीकुटिलां दृष्टिं क्रुद्धां ब्रूते हरप्रियः ।

### 4. KRUDDHĀ (Look of anger)

(253–254) When the eye-lids are raised and held motionless, the eyes are dry, the pupils are somewhat agitated, and the eye-brows are bent up to their highest pitch, then the look is called 'Kruddhā Dṛṣṭi'.

### 4. க்ருத்தா

*(253–254)* இது சினத்தோடு கூடிய பார்வையாகும். கண்ணிமைகளை அசைக்காமல், புருவங்களை உயர்த்தி, கண்களைப்பிறர் அஞ்சும் வண்ணம் உற்று நோக்கினால் அந்தப் பார்வைக்கு 'க்ருத்த த்ருஷ்டி' என்று பெயர்.

## ५. दृप्ता दृष्टिः ।

सत्त्वमुद्गिरती दृष्टिर्दृप्ता विकसिता स्थिरा ॥ २५४ ॥

### 5. DṚPTĀ (Look of pride)

(254) When the look bespeaks valour and the eyes are fully open, the look is called 'Dṛptā Dṛṣṭi'.

### 5. த்ருப்தா

*(254)* இது கர்வம் மிகுந்த பார்வை. நன்றாக மலர்ந்த கண்களுடன் தன் சாமர்த்தியத்தை வெளியிடும் வகையில் உற்று நோக்குவதற்குத் 'த்ருப்த த்ருஷ்டி' என்று பெயர்.

### ६. भयान्विता दृष्टिः ।

मध्यान्निर्गमनोद्युक्तं भीतिविस्फारितौ पुटौ ।
तारके कम्पिते यस्याः सा स्याद्दृष्टिर्भयान्विता ॥ २५५ ॥

### 6. BHAYĀNVITĀ (Look of fear)

(255) When the eye-balls appear to be ready to emerge, the eyelids are extended by the intensity of fear, and the pupils are agitated, then the look is called 'Bhayānvitā Dṛṣṭi'.

### 6. பயாந்விதா

*(255) இது பயத்தோடு கூடிய பார்வை. விழிகள் வெளிவரத்தயாராக இருப்பதுபோல் தோற்றமளிக்கும்படி பயத்தால் கண்ணிமைகளை நன்றாகத்திறந்து விழிகள், சுழற்றப் படுமேயானால், அதற்கு 'பயாந்வித த்ருஷ்டி' என்று பெயர்.*

### ७. जुगुप्सिता दृष्टिः ।

अस्पष्टालोकिनी मीलत्तारका संकुचत्पुटा ।
दृश्यं दृष्ट्वा समुद्विग्ना दृष्टिरुक्ता जुगुप्सिता ॥ २५६ ॥

### 7. JUGUPSITĀ (Look of Disgust)

(256) When the look is indefinite with pupils tending to come together, the eye-lids are contracted and indicate vexation at the object seen, then the look is called 'Jugupsitā Dṛṣṭi'.

### 7. ஜுகுப்ஸிதா

*(256) இது வெறுப்பு மிகுந்த பார்வை. இமைகளை வளைத்து விழிகளை மூடி நன்றாகப்பார்க்காமல் அரைகுறையாய்ப்பார்ப்பதற்கு 'ஜுகுப்ஸித த்ருஷ்டி' என்று பெயர்.*



### ८. विस्मिता दृष्टिः ।

दूरविस्फारिताकारपुटद्वंद्वविकासिनी ।
निश्चला दृष्टिरुद्वृत्ततारका विस्मिता स्मृता ॥ २५७ ॥

दृष्टयोऽष्टासु रत्यादिस्थायिभावेष्विमाः क्रमात् ॥ २५८ ॥

इत्यष्टौ स्थायिभावदृष्टयः ॥

### 8. VISMITĀ (Look of surpise)

(257–258) When the eye-lids are fully open with a steady look penetrating to a distance and the pupils are held up, the look is called 'Vismitā Dṛṣṭi'.

The looks pertaining to the heights of emotion beginning with that of love have just been described.

### 8. விஸ்மிதா

*(257–258) இது ஆச்சரியம் மிகுந்த பார்வை. இமைகளை நன்றாகத்திறந்து விழிகளைக்கண்களின் மேல் பாகத்தில் நிறுத்திச் சுற்றிலும் உற்றுப்பார்ப்பதற்கு 'விஸ்மித த்ருஷ்டி' என்று பெயர்.*

*ரதி முதலிய ஸ்தாயிபாவங்களுக்குரிய மேற்சொன்ன பாவத்ருஷ்டிகள் இதுவரை விவரிக்கப்பட்டன.*

## व्यभिचारिदृष्टयः ॥

### १. शून्या दृष्टिः ।

समतारापुटा दृश्यदृष्टिशून्या विलोकिनी ।
निष्कम्पा धूसरा शून्या चिन्तायां दृष्टिरिष्यते ॥ २५९ ॥

## VYABHICHĀRI DṚṢṬIS

(Looks indicative of particular states of mind that variously accompany heights of emotion)

### 1. S'ŪNYĀ (The vacant look)

(259) When the eye-lids are held in their normal position, the eyes are steady but not clear, and look vacantly without seeing any object in particular as in anxious thought, then the look is called 'S'ūnyā Dṛṣṭi'.

## வியபிசாரி த்ருஷ்டி லக்ஷணங்கள்

(பலவித மனோநிலைமைகளில் ஏற்படும் பார்வைகள்)

### 1. சூன்யா

(259) இது நோக்கமற்ற பார்வை. கண்ணிமைகளும் விழிகளும் இயற்கை நிலையில் இருக்க ஒன்றையும் குறிப்பிட்டுப் பார்க்காமல் அசைவற்றுத் தெளிவின்றி மலங்க விழிக்கும் பார்வைக்கு 'சூன்ய த்ருஷ்டி' என்று பெயர். கவலையைக் குறிப்பிட இப் பார்வை பயன்படும்.

### २. मलिना ।

दृश्यादपसृते तारे किंचिन्मुकुलितौ पुटौ ।
दधत्यपाङ्गौ विच्छायौ पक्ष्माग्रस्पन्दनं तथा ॥ २६० ॥
दृष्टिः स्यान्मलिना स्त्रीणां विहृतौ सा प्रयुज्यते ।
प्राप्ते कालेऽप्यसंलापः प्रियेण विहृतं मतम् ॥ २६१ ॥

### 2. MALINĀ (Look of low spirits)

(260-261) When the pupils are directed away from the object seen, the eye-lids are slightly closed,



the corners of the eye are devoid of colour and the eye-lashes are throbbing, then the look is called 'Malinā Dṛṣṭi'.

It is specially applicable to women characters for indicating a particular attitude towards the lover, called 'Vihṛti'. In this attitude the lady-love abstains from conversation with the lover even when there is an opportunity for so doing.

### 2. மலினா

(260-261) பார்க்க வேண்டிய பொருளினின்றும் விழிகளைத்திருப்பி, இமைகளைச்சிறிது மூடி இமையோரங்களை அசைத்துக்கொண்டு இருக்கின்ற கண்களின் பிரகாசமற்ற பார்வைக்கு 'மலின த்ருஷ்டி' என்று பெயர்.

இது மாதர்களின் விஹ்ருதியைக்குறிக்கும். நாயகன் வந்து பேசுங்கால் அவனுடன் பேசாமலிருப்பதற்கு 'விஹ்ருதி' என்று பெயர்.

### ३. श्रान्ता दृष्टिः ।

अदूरालोकिनी म्लानपुटाऽप्यलसचारिणी ।
पतत्तारा मनाक् कुञ्चत्प्रान्ता श्रान्ता श्रमे मता ॥ २६२ ॥

### 3 S'RĀNTĀ (Tired look)

(262) When the look is limited to a short distance, the eye-lids are languid, the eye-balls move lazily, the pupils are depressed and the corners are slightly contracted, then the look is called 'S'rāntā Dṛṣṭi'.

Its use is to indicate a tired state.

### 3. ச்ராந்தா

(262) இது களைப்பு மிகுந்த பார்வை. கண் இமை

கணையும் கருவிழிகளையும் தளரச்செய்து, இமையோரங்களை குறுக்கிக்கொண்டு ஆலஸ்யத்தோடு பார்ப்பதற்கு 'ச்ராந்த த்ருஷ்டி' என்று பெயர்.

இது களைப்புற்றிருப்பதைக் குறிக்கும்.

### ४. लज्जिता दृष्टिः ।

मिथोऽभिगामिपक्ष्माग्राऽप्यधस्ताद्गततारका ।
पतितोर्ध्वपुटा दृष्टिर्लज्जायां लज्जिता मता ॥ २६३ ॥

### 4. LAJJITĀ (Look of shyness)

(263) When the eye-lashes tend to come together, the pupils are depressed, and the upper eye-lids are drooping, the look is called 'Lajjitā Dṛṣṭi'.

Its use is to indicate shyness.

#### 4. லஜ்ஜிதா

(263) இது நாணத்தோடுகூடிய பார்வை. இரு கண்ணிமைகளின் நுனிகள் ஒன்றுக்கொன்று தொடுவதுபோலவும், கருவிழிகளைத் தாழ்த்தியும் பார்ப்பதற்கு 'லஜ்ஜிதா த்ருஷ்டி' என்று பெயர்.

இது நாணத்தைக் குறிக்கும்.

### ५. शङ्किता दृष्टिः ।

मुहुश्चलस्थिरा पार्श्वालोकिनी बहिरुन्मुखी ।
गूढावलोकिनी शीघ्रं विनिवृत्तविलोकनात् ॥ २६४ ॥
शङ्कायां शङ्किता दृष्टिरुक्ता नर्तनवेदिभिः ।

### 5. S'ANKITĀ (Suspecting look)

(264-265) When the eyes are alternately steady



and restless, turn towards the sides outward and upward, indulge in covert looks, and then suddenly turn away and desist from looking, then the look is called 'S'ankitā Dṛṣṭi'.

Its use is to indicate a suspecting mood.

#### 5. சங்கிதா

(264-265) இது சந்தேகம் நிறைந்த பார்வை. கண நேரம் சஞ்சலமாகவும், சிறிது நேரம் உற்று நோக்கியும், கடைக்கண்ணாலும், பிரகடமாயும், பிறர் அறியாமல் மறைவாகவும், பிறர் பார்த்தவுடன் அதிசீக்கிரமாய்த்தன் பார்வையை மாற்றியும் பார்க்கும் பார்வைக்கு 'சங்கித த்ருஷ்டி' என்று பெயர்.

இது சந்தேகம் கொண்டிருப்பதைக் குறிக்கும்.

### ६. मुकुला दृष्टिः ।

स्फुरत्संश्लिष्टपक्ष्माग्रा सुखविश्रान्ततारका ॥ २६५ ॥
मुकुला दृष्टिरानन्दे हृद्ययोः स्पर्शगन्धयोः ।

### 6. MUKULĀ (Well-closed look)

(265-266) When the eye-lashes are united and throbbing, and the pupils rest in a leisurely manner, the look is called 'Mukulā Dṛṣṭi'.

Its use is to indicate the pleasure due to enjoyable touch or smell.

#### 6. முகுளா

(265-266) இது இன்பப்பண்பு ததும்பும் பார்வை. துடிதுடிக்கும் இமைகளின் நுனிகளைச்சேர்த்து சுக அனுபவத்தினுல் அசைவற்றுக்கிடக்கும் விழிகளுடன் பார்க்கும் பார்வைக்கு 'முகுள த்ருஷ்டி' என்று பெயர்.

இது இன்பகரமான ஸ்பரிசத்தாலும் நறுமணத்தாலும் ஏற்படும் ஆநந்தத்தைக் குறிக்கும்.

## ७. अर्धमुकुला दृष्टिः ।

अर्धव्याकोशिते किंचिद्भ्रमन्त्यौ तारके पुटौ ॥ २६६ ॥
यत्रार्धमिलितौ साऽर्धमुकुलार्थे सुखप्रदे ।

7. ARDHAMUKULĀ (Half open look)

(266–267) When the eyes are half-open, the pupils are slightly throbbing, and the eye-lids are half closed, then the look is called 'Ardhamukulā Dṛṣṭi'.

Its use is to indicate the presence of enjoyable objects.

7. அர்த்தமுகுளா

*(266–267)* இது சுகத்தை அறிவிக்கும் பார்வை. கண்கள் திறந்ததும் திறவாததுமாக இருக்க, இமைகளை யொட்டிக் கருவிழி சுற்றிக்கொண்டிருக்குமானால் 'அர்த்த முகுள த்ருஷ்டி' என்று பெயர்.

இது சுகத்தைக் குறிக்கும்.

## ८. ग्लाना दृष्टिः ।

मज्जत्तारा मन्दचारा शिथिला विकलैरिव ॥ २६७ ॥
पक्ष्माग्रभ्रूपुटैर्युक्ता ग्लाना ग्लानौ विधीयते ।

8. GLĀNĀ (Languid look)

(267–268) When the pupils have sunk deep and move very slowly and languidly, and the eye-lashes, eye-brows and eye-lids appear like those of a blind person, then the look is called 'Glānā Dṛṣṭi'.



Its use is to indicate languor.

8. க்லாநா

*(267–268)* இது சோர்வு மிகுந்த பார்வை. கண்ணிழந்தவர்களைப்போல் இமைகளையும் புருவத்தையும் அசைவற்றதாக நிமிர்த்தி விழிகளைச் சொருகி அயர்வினல் மெதுவாக அசையும்படிசெய்து அயர்வோடு பார்க்கும் பார்வைக்கு 'க்லான த்ருஷ்டி' என்று பெயர்.

இது சோர்வுற்றிருப்பதைக் குறிக்கும்.

## ९. जिह्मा दृष्टिः ।

किंचित्कुञ्चत्पुटा गूढपतत्तारा विलोकने ॥ २६८ ॥
शनैस्तिर्यङ्निगूढं या सा जिह्मा विनियुज्यते ।
असूयायां निगूढेऽर्थे जडतालस्ययोरपि ॥ २६९ ॥

9. JIMHĀ (Looking askance)

(268–269) When the eye-lids are slightly contracted and the pupils are depressed and concealed and then the eyes slowly and stealthily look askance, such a look is called 'Jimhā Dṛṣṭi'.

Its use is to indicate envy, a concealed meaning, numbness, or lazy mood.

9. ஜிம்ஹா

*(268–269)* இமைகளைச்சிறிதளவு மூடி விழிகளை அடிப்பக்கத்தில் சொருகி மெதுவாகவும், பிறர் அறியாம லும் கடைக்கண்ணால் பார்ப்பதற்கு 'ஜிஹ்ம த்ருஷ்டி' என்று பெயர்.

இது பொறாமையையும், மறைபொருளையும், மந்தமான தன்மையையும், சோம்பலையும் குறிக்கும்.

## १०. कुञ्चिता दृष्टिः ।

किंचिच्चेत्कुञ्चितानि स्युः पक्ष्माग्राणि पुटावपि ।
सम्यक्च कुञ्चिता तारा तदा दृक्कुञ्चितोच्यते ॥ २७० ॥
अनिष्टे सूचिते तेजोदुष्प्रेक्ष्येऽक्षिव्यथासु सा ।

### 10. KUÑCITĀ (Contracted look)

(270–271) When the eye-lids and eye-lashes are slightly contracted, and the pupils are well contracted, then the look is called 'Kuñcitā Dṛṣṭi'.

It is used to indicate the presence of an unwanted object, too bright a light, an object repugnant to sight and sore eyes.

### 10. குஞ்சிதா

*(270–271)* இமைகளையும் இமை நுனிகளையும் சிறிது வளைத்து விழிகளை நன்றாகத்தாழ்த்திப் பார்ப்பதற்குக் 'குஞ்சித த்ருஷ்டி' என்று பெயர்.

வேண்டாப்பொருளைப் பார்க்கும் போதும், கண்ணைக் கூசும் பிரகாசத்திலும், கண்ரோகத்திலும் இது பிரயோகிக் கப்படும்.

## ११. वितर्किता दृष्टिः ।

उन्नामितपुटोत्फुल्लताराऽधः संचरन्त्यपि ॥ २७१ ॥
वितर्कितोदिता दृष्टिर्वितर्के साऽभिधीयते ।

### 11. VITARKITĀ ( Look of indecision )

(271–272) When the eye-lids are raised up, and the pupils are flushed but move downward, then the look is 'Vitarkitā Dṛṣṭi'.

Its use is in uncertain moods.



### 11. விதர்கிதா

*(271–272)* இமைகளை மேல்பக்கமாகத் தூக்கி விழிகளை மலரச்செய்து கீழே பார்ப்பதற்கு 'விதர்க்கித த்ருஷ்டி' என்று பெயர்.

இது நிச்சயமற்ற மனோ நிலைமையைக் குறிப்பிட உபயோகப்படும்.

## १२. अभितप्ता दृष्टिः ।

विलोकनालसे तारे व्यथाप्रचालितौ पुटौ ॥ २७२ ॥
यस्याः संतप्तवङ्गान्ति साऽभितप्ताऽभिधीयते ।
निर्वेदे वेदितव्या साऽप्यभितापोपतापयोः ॥ २७३ ॥

### 12. ABHITAPTĀ (painful Look)

(272–273) When the pupils would fain keep without looking, the eye-lids are moved up and down on acount of pain, and all the parts of the eye indicate severe pain, then the look is called 'Abhitaptā Dṛṣṭi'.

Its use is in despair, in severe injury and pain.

### 12. அபிதப்தா

*(272–273)* நிர்ப்பந்தத்தோடு பார்த்து, வலியினால் இமைகளை அசைத்து அதிக வேதனையுடன் பார்க்கும் பார்வைக்கு 'அபிதப்த த்ருஷ்டி' என்று பெயர்.

இது மனது தளர்வுற்றிருப்பதையும், அடிபட்டதையும், தாபத்தையும் குறிக்கும்.

## १३. विषण्णा दृष्टिः ।

या दृष्टिः पतितापाङ्गा विस्तारितपुटद्वया ।
निमेषिणी स्तब्धतारा विषण्णा सा विषादिनी ॥ २७४ ॥

### 13. VIṢAṆṆĀ (Look of grief)

(274) When the corners of the eye have sunk, the eye-lids are wide apart, and close frequently, and the pupils are motionless, then the look is called 'Viṣaṇṇā Dṛṣṭi'.

Its use is to indicate sorrow.

### 13. விஷண்ணா

*(274) இது துக்கமான பார்வை. இரு இமைகளையும் அகற்றி, விழிகளை அசைக்காமல் இமைகளை மூடி மூடிக் கொண்டு குழிவிழுந்த கடைக்கண்களோடு பார்ப்பதற்கு 'விஷண்ண த்ருஷ்டி' என்று பெயர்.*

*இது சோகம் மேலிட்டிருப்பதைக் குறிக்கும்.*

### १४. ललिता दृष्टिः ।

मधुरा कुञ्चितापाङ्गा सभ्रूक्षेपा स्मितान्विता ।
मन्मथोन्मथिता दृष्टिर्ललिता ललिते मता ॥ २७५ ॥

### 14. LALITĀ (Sporting look)

(275) When the look bespeaks sweetness, the corners of the eye are contracted, the eye-brows go up and down accompanied by smile, and the look indicates an amorous mood, then the look is called 'Lalitā Dṛṣṭi'.

Its use is in sportful amorous moods.

### 14. லலிதா

*(275) இது கோமளமான பார்வை. புருவங்களை உயர்த்தியும், தாழ்த்தியும், மன்மதவிகாரத்துடனும் மதுர*



*மான சிரிப்புடனும் கூடிய பார்வைக்கு 'லலித த்ருஷ்டி' என்று பெயர்.*

*இது சாதாரணமாக சிருங்கார ரஸத்தைக் குறிக்கும்.*

### १५. आकेकरा दृष्टिः ।

किंचित्कुञ्चपुटापाङ्गा दृष्टिरर्धनिमेषिणी ।
पृथक्पक्षे चान्यनेत्रान्मुहुस्तारा विवर्तिनी ॥ २७६ ॥
आकेकरा दरालोके स्याद्विच्छन्दे च वस्तुनि ।

### 15. ĀKĒKARĀ
(Half closed look through the corners of the eye.)

(276–277) When the eye-lids at the corner of the eye are slightly contracted, the look is half-closed, and the pupil of the other eye is revolved every now and then, the look is called 'Ākēkarā Dṛṣṭi'.

Its use is in half-closed look and in the presence of objects not to one's taste.

### 15. ஆகேகரா

*(276–277) இமைகளை நன்றாகத் திறந்து பார்க்காமலும், கடைக்கண்ணால் பார்க்காமலும் கண்களைப் பாதி மூடி தன் எண்ணத்தைத் தெரிவிக்கும் வண்ணம் மற்றோர் கண்ணின் கருவிழியைச் சுற்றிக்கொண்டே பார்ப்பதற்கு 'ஆகேகரா திருஷ்டி' என்று பெயர்.*

*விரும்பாத பொருளைப் பார்க்கும்போதும் அரைப் பார்வையாகப் பார்க்கும்போதும் இந்தப் பார்வை உபயோகிக்கப்படுகிறது.*

### १६. विकोशा दृष्टिः ।

विकासितपुटद्वंद्वा विकासिन्यनिमेषिणी ॥ २७७ ॥

अनवस्थिततारा च विकोशा कीर्तिता बुधैः ।
ज्ञानविज्ञानगर्वे सा स्यादमर्षोग्रदर्शने ॥ २७८ ॥

### 16. VIKŌS'Ā (wide-open look)

(277–278) When the eye-lids are fully open and do not close for once, and the pupils are unsteady, then the look is called 'Vikōs'ā Dṛṣṭi'.

Its use is to indicate conceit with one's own learning or wisdom and in impatient or grim look.

### 16. விகோசா

*(277–278) இது மமதை மிகுந்த பார்வை. இமைகளை ஒன்றோடொன்று சேர்க்காமல் கண்களை நன்கு திறந்து விழி ஓரிடத்திலேயே நில்லாமல் சுழற்றிக்கொண்டு பார்ப்பதற்கு 'விகோச த்ருஷ்டி' என்று பெயர்.*

*இது படிப்பு அல்லது ஞானத்தினால் கொண்ட கர்வத்தையும், உக்ரமான பார்வையையும் குறிக்கும்.*

### १७. विभ्रान्ता दृष्टिः ।

या तु क्वचिदविश्रान्तमविस्रब्धं विलोकते ।
विस्तीर्णा चञ्चलोत्फुल्लतारा सा दृष्टिरुच्यते ॥ २७९ ॥
विभ्रान्ता विभ्रमे वेगे संभ्रमे च भवेदसौ ।

### 17. VIBHRĀNTĀ (Distracted look)

(279–280) When the look occasionally returns from distraction to a spirited and undisturbed manner, and the eyes are wide open with the pupils moving about and flushed, then the look is called 'Vibhrāntā Dṛṣṭi'.

Its use is in distracted, hurried and excited moods.



### 17. விப்ராந்தா

*(279–280) இது அவசரத்தோடு கூடிய பார்வை. கண்களில் விழிகளை நாற்புறமும் சுழற்றிக்கொண்டும், பரபரப்போடும் சிலசமயம் பரபரப்பு இல்லாமலும் பார்க்கும் பார்வைக்கு 'விப்ராந்த த்ருஷ்டி' என்று பெயர்.*

*இது திகைப்பையும், வேகத்தையும், பரபரப்பையும் குறிக்கும்.*

### १८. विप्लुता दृष्टिः ।

पुटौ विस्फुरितौ स्तब्धौ यस्याः स्तः पतितौ क्रमात् ॥ २८० ॥
सा विप्लुताऽऽर्तिदुःखादावुन्मादे चापले तथा ।

### 18. VIPLUTĀ (floating look)

(280–281) When the eye-lids are shaky, steady and drooping in succession, then the look is called 'Viplutā Dṛṣṭi'.

Its use is in pain, sorrow, madness and restlessness.

### 18. விப்லுதா

*(280–281) இது மிதந்த பார்வை. இமைகள் மாறி மாறித் துடித்தும், அசைவற்றும், தளர்ந்து விழுந்தும் இருக்குமானால் அந்தப் பார்வைக்கு 'விப்லுதத்ருஷ்டி' என்று பெயர்.*

*வலியையும், துக்கத்தையும், பயித்தியத்தையும், ஸ்திர புத்தியின்மையையும் குறிக்க இது உபயோகப்படும்.*

### १९. त्रस्ता दृष्टिः ।

उत्कम्पोत्फुल्लतारा स्यात्त्रासे त्रस्तोद्भ्रमत्पुटा ॥ २८१ ॥

## 19. TRASTĀ (look of fear)

(281) When the pupils are severely shaky and flushed and the eye-lids move quickly up and down on account of fear, then the look is called 'Trastā Dṛṣṭi'.

Its use is in situations causing fear.

## 19. த்ரஸ்தா

*(281) இது பயந்த பார்வை. விழிகளைக் கடுமையாகச் சுழற்றி பயத்தினால் கண்ணிமைகளை மேலும் கீழும் வேகமாக இமைத்துப் பார்ப்பதற்கு 'த்ரஸ்தா த்ருஷ்டி' என்று பெயர்.*

*இது பயத்தைக் குறிப்பிட உபயோகப்படும்.*

## २०. मदिरा दृष्टिः । (त्रिविधा)

मदिरा त्रिविधा प्रोक्ता तरुणे मध्यमेऽधमे ।
मदे प्रयोगमर्हन्ती तत्तल्लक्ष्मसमन्विता ॥ २८२ ॥
तीव्रो मदोऽधमोऽत्र स्यादधमे पुरुषे स्थितः ।
दृष्टिर्विकासितापाङ्गा क्षामीभूतविलोचना ॥ २८३ ॥
आघूर्णमानतारा स्यान्मदिरा तरुणे मदे ।
किंचित्कुञ्चत्पुटा किंचिदनवस्थितचारिणी ॥ २८४ ॥
दृष्टिः किंचिद्भ्रमत्तारा मदिरा मध्यमे मदे ।
अधोभागचरी किंचिद्दृष्टतारा निमेषिणी ॥ २८५ ॥
यत्नेऽप्यसिद्ध्यदुन्मेषा मदिरा चाधमे मदे ।
प्रदर्शनार्थमित्युक्ताः षट्त्रिंशद्दृष्टयो मया ॥ २८६ ॥
अनन्ताः सन्ति संदर्भाद्भ्रूतारापुटकर्मणाम् ।
दृष्टयस्ता विरिञ्चोऽपि प्रत्येकं वक्तुमक्षमः ॥ २८७ ॥

इति दृष्टि प्रकरणम् ॥



## 20. MADIRĀ (Intoxicated look)

(282–287) Intoxication is classified into three kinds viz., the early stage, the middle stage, and the worst stage, and the symptoms pertaining to each stage have to be carefully observed in dramatic representation.

The highly intoxicated state suits the lowest characters.

### 1. EARLY STAGE

In this stage the corners of the eye are flushed while the rest of the eye is languid, and the pupils move about in a circle.

### 2. MIDDLE STAGE

In the middle stage the eye-lids are slightly contracted, the look is somewhat unsteady, and the pupils are wandering.

### 3. WORST STAGE

In this stage the pupils move about low and down in the eyes and the eye-lids are almost closed.

These thirty-six kinds of look have been described by way of illustration. But the varieties of look in particular situations are really innumerable each with its peculiarity regarding the pupils and the lids. It may well be said that these varieties cannot all be exhausted by Brahma, the creator himself.

## 20. மதிரா

*(282–87) இது போதையுள்ள பார்வை. போதை மயக்கத்தை மூன்று வகையாகப் பிரித்திருக்கிறார்கள்:— 1. ஆரம்பஸ்திதி 2. நடுத்தரஸ்திதி 3. கடுமையானபோதை*

யின் ஸ்திதி. கடுமையான போதை மிகவும் கீழ்த்தரமுள்ள பாத்திரங்களுக்கே பொருந்தும்.

### 1. ஆரம்ப ஸ்திதி

இதில் கடைக்கண்கள் சிவந்து கண்களில் வாட்டம் தோன்றிக் கருவிழிகள் சுழலும்.

### 2. நடுத்தர ஸ்திதி

இதில் இமைகள் சிறிது நெருக்கப்பட்டு நிலையற்ற பார்வையுடன், கருவிழிகள் ஓரிடத்தில் நில்லாமலிருக்கும்.

### 3. கடுமையான போதை

இதில் கருவிழிகள் தாழ்ந்து, இமைகள் அநேகமாய் மூடியிருக்கும்.

மேற்கூறிய 36 வகைப்பார்வைகளும் உதாரணத்திற்காக விளக்கப்பட்டுள்ளன. ஆனால் விசேஷ சந்தர்ப்பங்களில் விழிகளும், இமைகளும் பற்பல விதங்களிலும் உபயோகிக்கப்படுவதால் த்ருஷ்டியின் வகைகள் எண்ணிறந்தவை. அவற்றைக் கணக்கிட சிருஷ்டிகர்த்தாவாகிய நான்முகனாலும் இயலாது.

## पादभेदाः—७[1].

आदौ तु चलनं प्रोक्तं पश्चात्संक्रमणं तथा ।
सरणं तु ततः प्राज्ञैः कुट्टनं परिकीर्तितम् ॥ २८८ ॥
लुठितं लोलितं पश्चात्ततो विषमसंचरः ।
पादचारा इमे सप्त प्रोक्तास्तल्लक्ष्म कथ्यते ॥ २८९ ॥

1. There are 3 lists of 'pāda bhēdas' given in the text, one after the other. They consist of 7, 22 and 5 bhēdas respectively. They are printed accordingly.



## MOVEMENTS OF THE FEET. 7.

(288–289) The seven kinds of the foot movements are:—1. Calanam (shaking) 2. Sankramaṇam (stepping over) 3. Saraṇam (moving) 4. Kuṭṭanam (the stamping) 5. Luṭhitam (wallowing) 6. Lōlitam (Oscillating) 7. Viṣama sañçara (walking unevenly).

### பாத வகைகள் 7.

(288–289) பாத வகைகள் ஏழு வருமாறு:—1. சலனம் (அசைத்தல்) 2. சங்க்ரமணம் (தூக்கி வைத்தல்) 3. ஸரணம் (நகர்தல்) 4. குட்டனம் (மிதித்தல்) 5. லுடிதம் (நெளிதல்) 6. லோலிதம் (ஆடுதல்) 7. விஷமசஞ்சரம் (தள்ளாடுவது போல் நடத்தல்).

## १. चलनम् ।

स्वस्थानस्थस्य पादस्य चलनाच्चलनं भवेत् ।
भूचार्यामंगहारेऽपि चालयस्य नृतिक्रमे ॥ २९० ॥
झंकारनाट्ये प्रथमे चलनं युज्यते क्रमात् ।

## 1. CALANAM

(290–291) When the feet are shaken in their position the movement is called Calanam.

*Uses:*—It is used in the folk dance of Pūjāris of village temples. It is also used in Angahāra or a well-defined part of S'iva Tāṇḍava, in the initial movements, in the dance called Cālaya Nāṭya and in the dance called Jhankāra Naṭya.

### 1. சலனம்

(290–291) பாதங்களை அதன் இருப்பிடத்திலேயே அசைத்தால் அதற்குச் 'சலனம்' என்று பெயர்,

உபயோகம் :— இது பூசாரி நடனத்திலும், சிவனுடைய தாண்டவத்தின் ஓர் பகுதியாகிய 'அங்கஹார'த்திலும், 'முகசாலி' என்ற ஆரம்ப நர்த்தனத்திலும் ஆரம்ப அடவுகளிலும், ஐங்கார நாட்டியத்திலும் உபயோகப்படுகிறது.

### २. संक्रमणम् ।

उत्क्षिप्योत्क्षिप्य गमनात्पादः संक्रमणाभिधः ॥ २९१ ॥
सर्वनाट्यावसानेपि पादशिक्षाविधिक्रमे ।
पादः संक्रमणस्सोऽयं नाट्यवेगेपि युज्यते ॥ २९२ ॥

### 2. SANKRAMAṆAM

(291–292) If the steps are taken with the feet well raised it is called Sankramana.

*Uses* :—This is used at the close of all the items of dance, in the course of instruction in foot work and in fast movements.

### 2. சங்க்ரமணம்

(291–292) பாதங்களை உயர்த்தி உயர்த்தித்தூக்கி வைத்து நடப்பதற்கு 'சங்க்ரமணம்' என்று பெயர்.

உபயோகம் :— நாட்டியத்தின் இறுதியிலும், கால் அடவுகளைக் கற்பிக்கையிலும், துரிதகால நர்த்தனத்திலும் இது உபயோகப்படுகிறது.

### ३. सरणम् ।

अपरित्यक्तभूभागः पादश्चेत्संचरेद्द्रुतम् ।
सरणं नाम संज्ञोयं नटनोदयभाविभिः ॥ २९३ ॥
नदीनां वेगगमने नाट्यानामवसानके ।
सप्तलास्ये च शृङ्गारे नटने सरणं भवेत् ॥ २९४ ॥



### 3. SARAṆAM

(293–294) If the feet are moved forward without taking them off the ground it is called Saraṇam.

*Uses* :— It is used to indicate the force of the current in a river, at the end of a dance, in Lāsya or female dance which is divided into seven parts, and in erotic dances.

### 3. சரணம்

(293–294) கால்களைத் தரையிலிருந்து எடுக்காமலே நகருவதற்குச் 'சரணம்' என்று பெயர்.

உபயோகம் :— ஆற்றின் வேகத்தைக் காட்டுவதற்கும் நாட்டியத்தின் இறுதியிலும், ஏழுவித 'லாஸ்யம்' என்னும் ஸ்திரீ நர்த்தனத்திலும், சிருங்கார நாட்டியத்திலும் இது உபயோகப்படுகிறது.

### ४. कुट्टनम् ।

पार्ष्णिना वा पदाग्रेण समस्तेन तलेन वा ।
यदा स्यात् त्राटनं भूमेर्नाम्ना तत्कुट्टनं तदा ॥ २९५ ॥
अहमार्गस्य[1] भावे च चारिनाट्यक्रमेऽपि च ।
कुट्टनाभिधपादोऽयं कल्पितं कर्मवेदिभिः ॥

### 4. KUṬṬAṆAM

(295–296) If the dancer stamps the ground with the heel or with the fore-foot or with the entire foot, then it is called 'Kuṭṭana'.

*Uses* :— It is used in depicting scenes relating to

---

1. See foot note in page 34 regarding the Tamil origin of the expression 'Ahamarga'.

love, and in the dance called ‘Cāri Nāṭya’ or dances involving a variety of foot movements.

### 4. குட்டனம்

*(295-296)* குதிகாலால் அல்லது முன்னங்காலால் அல்லது பாதம் முழுவதால் பூமியைத் தட்டுவதற்குக் ‘குட்டனம்’ என்றுபெயர்.

உபயோகம் :—‘அகத்துறை’ என்னும் காதல் பற்றிய நடனங்களிலும், ‘சாரி நாட்டியம்’ என்னும் அடவுகள் நிறைந்த நர்த்தனத்திலும் இது உபயோகப்படும்.

### ५. लुठितं ।

स्वस्तिकस्थितपादस्य लोलनाल्लुठितं भवेत् ।
आकाशचार्यां स्थाने च प्रान्तेऽपि लुठनं भवेत् ॥ २९७ ॥

### 5. LUṬHITAM

(297) When the legs are crossed, and in that posture made to undergo a wallowing motion this side and that, then it is called ‘Luṭhitam’.

*Uses* :— Its us is in ‘Ākāsa Caris’ (movements of the leg in space) and in dances called ‘Prāntha Nṛtta’ or border dances.

### 5. லுடிதம்

*(297)* கால்களை ஒன்றுக்கொன்று குறுக்காக வைத்துக்கொண்டு இரு பக்கங்களிலும் நெளிந்தால் அதற்கு ‘லுடிதம்’ என்று பெயர்.

உபயோகம் :— ஆகாச சாரியிலும், பிராந்திய நடனங்களிலும் இது உபயோகப்படுகிறது.



### ६. लोलनं ।

डोलवच्चलिताकारमेयुषः पार्श्वयोर्द्वयोः ।
आवेष्ट्य भूमौ पादस्य वेष्टितं लोलनं भवेत् ॥ २९८ ॥
भ्रमर्यां नटनाभ्यासे करणानां नृतिक्रमे ।
युज्यते लोलनं पूर्वशास्त्रमर्मार्थवेदिभिः ॥ २९९ ॥

### 6. LŌLANAM

(298–299) When the feet are made to move this way and that in an oscillating manner and each encircling other, then it is called ‘Lōlanam’

*Uses* :— It is used in ‘Bhramarīs’ or rotatory movements, in the course of dance practice, and in the dance units called Karaṇas.

### 6. லோலனம்

*(298–299)* பாதங்களை ஒன்றையொன்று சுற்றி வளைத்து இருபக்கங்களிலும் ஊசலாடுவது போல் அசைத்தால் அதற்கு ‘லோலனம்’ என்று பெயர்.

உபயோகம் :—‘ப்ரமரி’ என்னும் சுற்றடவுகளிலும், நாட்டியப் பயிற்சியிலும், கரணங்கள் என்னும் நர்த்தனப் பகுதிகளிலும் இது உபயோகப்படுகிறது.

### ७. विषमसञ्चरः ।

चरणस्यैकदेशेन गतिर्विषमसञ्चरः ।
अद्भुताख्ये रसे देशिनाट्ये चालिनृतिक्रमे ॥ ३०० ॥

### 7. VIṢAMA SAÑCARA

(300) When steps are taken resting on a part of the foot, then it is called ‘Viṣama Sañcara’.

*Uses* :— This is used in situations of wonder, in provincial dances and in the dance called 'Mukha Cāli'.

### 7. விஷம சஞ்சரம்

*(300) பாதத்தின் ஓர் பகுதியை மட்டும் பூமியில் வைத்து நடப்பதற்கு 'விஷம சஞ்சரம்' என்று பெயர்.*

*உபயோகம் :— ஆச்சரியத்தைக் குறிப்பிடுவதிலும், தேசிய நடனங்களிலும், 'முகசாலி' என்னும் ஆரம்ப நாட்டியத்திலும் இது உபயோகப்படுகிறது.*

### अन्ये पादभेदाः—२२.

अंचितं कुंचितं सूची तथाग्रतलसंचरः ।
उद्घाट्टितस्समस्तद्वत्सारिकाऽर्धपुराटिका ॥ ३०१ ॥

स्वास्तिकः स्फुरिका चान्या तथैव स्यान्निकुट्टका ।
तलोत्क्षेपस्तथा पृष्ठोत्क्षेपो वेष्टनमित्यपि ॥ ३०२ ॥

अर्धस्खलतिका खुत्ता पुराटी प्रावृतं तथा ।
उद्वेष्टनमथोल्लोलं समस्खलतिका परा ॥ ३०३ ॥

लताक्षेप इति प्रोक्ता ह्यधिका विंशतिः क्रमात् ।
पादक्रियाणामेतासां लक्षणं प्रतिपाद्यते ॥ ३०४ ॥

### FURTHER MOVEMENTS OF THE FEET — 22

(301–304) The following are further movements of the feet:- 1. Añcitam (bent) 2. Kuñcitam (contracted) 3. Sūci (needle-shaped) 4 Agratalasancara (walking on tip toe) 5. Udghaṭṭitam (stamping) 6. Sama (normal pose) 7. Sārikā (moving forward) 8. Ardhapurāṭikā (back of the foot employed on one side)



9. Swastika (crossed) 10. Sphurikā (throbbing) 11. Nikuṭṭakā (pressing with the toes) 12. Talōtkṣepa (waving the fore-part of the feet) 13. Pṛṣṭthotkṣēpa (waving at the back) 14. Vēṣṭanam (encircling) 15. Ardhaskhalatikā (slipping of one side) 16. Khuttā (stamping with fore-foot) 17. Purāṭikā (back of the toes) 18. Prāvṛtam (turning back) 19. Udvēṣṭanam (encircling upward) 20. Ullōlam (swinging) 21. Samaskhalatikā (slipping of both feet) 22. Latākṣepa (waving of the foot).

### வேறு பாத பேதங்கள்—22

*(301–304) மற்றும் பாத பேதங்கள் 22. அவை யாவன :— 1. அஞ்சிதம் (வளைக்கப்பட்டது) 2. குஞ்சிதம் (குறுக்கப்பட்டது) 3. ஸூசி (ஊசி முனையைப்போன்றது) 4. அக்ரதல சஞ்சரம் (முன்னங்காலால் நடப்பது) 5. உத்கட்டிதம் (தட்டுதல்) 6. சமம் (சமநிலை) 7. ஸாரிகா (ஒரு காலை நகர்த்துதல்) 8. அர்த்தபுராடிகா (ஒருபுறம் புறங்காலை ஊன்றல்) 9. ஸ்வஸ்திகா (குறுக்காகவைத்துக் கொள்ளுதல்) 10. ஸ்புரிகா (முன்னும்பின்னும் அசைத்தல்) 11. நிகுட்டகா (கால் விரல்களால் அழுத்துதல்) 12. தலோத்க்ஷேபம் (முன்னும் பின்னும் வீசுதல்) 13. ப்ருஷ்டோத்க்ஷேபம் (பின்பக்கம் வீசுதல்) 14. வேஷ்டனம் (சுற்றி வளைத்துக்கொள்ளுதல்) 15. அர்த்த ஸ்கலதிகா (ஒருபுறம் வழுக்குதல்) 16. குத்தா (முன்பாதத்தால் தட்டுதல்) 17. புராடிகா (புறங்காலால் தட்டுதல்) 18. ப்ராவ்ருதம் (திரும்புதல்) 19. உத்வேஷ்டனம் (மேற்புறமாகச் சுற்றி வளைத்துக்கொள்ளுதல்) 20. உல்லோலம் (ஊசலாடுதல்) 21. ஸமஸ்கலதிகா (இருபாதங்களும் வழுக்குதல்) 22. லதாக்ஷேபம் (பாதங்களை முன்னும் பின்னும் அசைத்தல்).*

## १. अञ्चितम् ।

अङ्गुल्यः कुञ्चितोत्क्षिप्ताः पार्ष्णिर्भूभागसंस्थितः ।
ऊर्ध्वांगुष्ठो यदि भवेत् स पादोऽञ्चितसंज्ञकः ॥
करणे चालिकारंभे युज्यतेऽञ्चितसंज्ञकः ॥ ३०५ ॥

## 1. AÑCITAM

(305) When the toes are bent and held up, the heels rest on the ground and the big toe is held erect, then the foot is called 'Añcita'.

*Uses*:—It is used in karaṇas or combinations of leg and hand movements, and in the beginning of the dance called 'Mukha Cāli'.

## 1. அஞ்சிதம்

*(305)* குதிகால் பூமியில் படிந்திருக்கக் கால்விரல்களை மடக்கி மேலே உயர்த்திக் கட்டைவிரலை நேராக நிமிர்த்தி ஞல் அதற்கு 'அஞ்சிதம்' என்று பெயர்.

உபயோகம் :— இது கரணங்களிலும், ஆரம்பநர்த்தன மாகிய 'முகசாலி' நாட்டியத்திலும் உபயோகப்படுகிறது.

## २. कुञ्चितम् ।

अंगुल्यः पृष्ठसंस्पृष्टा भुवः पार्ष्णिरुदाञ्चितः ।
आभुग्नो मध्यभागश्चेत् स पादः कुञ्चितो मतः ॥ ३०६ ॥
शकुन्तोत्संजने चापि करणोत्प्लुतिभावने ।
संधिनृत्तविधानेऽपि युज्यते कुञ्चिताभिधः ॥ ३०७ ॥

## 2. KUÑCITAM

(306–307) When the toes touch the ground with



their backs, the heels are raised up from the ground, and the sole of the foot is bent within, it is called 'Kuñchita'.

*Uses*:—It is used in letting fly a bird, in 'Utpluti karaṇa' or jumping movements, and in the dances called 'Nava Sandhi Nṛttas' or dances to propitiate the *Dikpālas*.

## 2. குஞ்சிதம்

*(306–307)* கால்விரல்களின் மேற்புறம் பூமியில் படிந் திருக்கக் குதிகாலைத்தூக்கி உள்ளங்காலை உட்புறமாக வளைத்தால் 'குஞ்சித' மாகும்.

உபயோகம்:—இது பக்ஷியைப் பறக்கவிடும்போதும் 'உத்ப்லுதி' கரணம் என்ற குதித்த அடவுகளிலும், 'நவ சந்தி நிருத்தம்' என்னும் திக்பாலர்களுக்கான நர்த்தனத் திலும் உபயோகப்படுகிறது.

## ३. सूची ।

अंगुष्ठः स्पृष्टभूमिश्चेत् पार्ष्णिः किंचिदुदाञ्चितः ।
स्वभावस्थोऽपरः पादस्सूचीसंज्ञस्स इष्यते ॥ ३०८ ॥
तपोऽधिष्ठानवेलायां धर्मस्थापनभावने ।
सूचीपादो नियुक्तोऽयं पूर्वमर्मविशारदैः ॥ ३०९ ॥

## 3. SŪCĪ

(308–309) When the toe of one foot just touches the ground and its heel is raised a little, and the other foot is in the normal position, it is called 'Sūci pāda'.

*Uses*: - It is used in penauce and when authoritatively laying down the rules of Dharma.

### 3. ஸூசி

(308–309) ஒரு காலின் கட்டைவிரலின் நுனி பூமியைத்தொட்டுக் கொண்டிருக்கக் குதிகால் சிறிது உயர்ந்து மற்றொரு கால் சமநிலையில் இருந்தால் அதற்கு 'ஸூசி' என்று பெயர்.

உபயோகம்:—இது தவம் செய்கையிலும், தர்மசாஸ்திரத்தை ஸ்தாபனம் செய்கையிலும் உபயோகப்படுகிறது.

### ४. अग्रतलसंचरः ।

अंगुलीभिस्समांगुष्ठः प्रसार्य स्थापितो भुवि ।
पार्ष्णिरुत्क्षेपणात्पादः स्यादग्रतलसंचरः ।
आकाशचार्यां नाट्यान्ते [ देश्यां ] स्यादग्रतलसंचरः ॥

### 4. AGRATALA SAÑCARA

(310) If the big toe and the other toes are well stretched and planted on the ground and the heel is raised up the foot is called 'Agratalasañcara'.

*Uses:*—It is used in [1] 'Ākāśa Cāri's' at the end of a (provincial) dance.

### 4. அக்ரதல சஞ்சரம்

(310) கால்கட்டைவிரலையும், மற்ற விரல்களையும் நன்றாக நீட்டித் தரையில் பதியவைத்துக் குதிகாலை உயர்த்தினால் அதற்கு 'அக்ரதல சஞ்சரம்' என்று பெயர்.

உபயோகம்:—இது [2] 'ஆகாசசாரி' களிலும், நாட்டியத்தின் இறுதியிலும் உபயோகப்படுகிறது.

---

1. About Ākāśa Cāris, see chapter on cāris supra.
2. 'ஆகாசசாரி' களைப்பற்றி 'சாரி' களைப்பற்றிய அத்தியாயத்தில் காண்க.



### ५. उद्घट्टितम् ।

चलितैकपदा भूमिः पार्ष्णिना चेन्निहन्यते ।
तदुद्घट्टितमित्याह विचार्य चतुराननः ॥ ३११ ॥
कथाख्यनटने नाट्यशब्दारंभविवेचने ।
तदुद्घट्टितपादोयं युज्यते भरतागमे ॥ ३१२ ॥

### 5. UDGHAṬṬITA

(311–312) If the ground is stamped by the heel of the one foot (while the other is stationary), then the movement is called 'Udghaṭṭita'.

*Uses:*—It is used in the Nāṭya called Kathā Nāṭya (Kathakali) and in the course of the initial analysis of the syllables used in Nāṭya.[1]

### 5. உத்கட்டிதம்

(311–312) ஒரு கால் சமநிலையிலிருக்க மற்றொரு குதிகாலால் தரையைத் தட்டினால் அதற்கு 'உத்கட்டிதம்' என்று பெயர்.

உபயோகம் :— இது 'கதகளி' போன்ற கதா நாட்டியங்களிலும், நாட்டிய ஆரம்பத்தில் உள்ள சப்தங்களை (சொல்லுக்கட்டுகளை) விவரிக்கையிலும் பயன்படுகிறது.

### ६. समम् ।

यथास्थानस्थितः पादः समाभिध इतीरितः ।
नाट्यारंभे स्थानके च पुष्पांजल्यादिनर्तने ॥ ३१३ ॥
समपादः पुरा धीरैः युज्यते भरतार्थिभिः ।

---

1. 'नाट्यशब्दारंभविवेचने' in the text may mean also in the initial exposition of the word 'Natya'.

## 6. SAMA

(313—314) Sama is the position of the feet in their proper place.

*Uses:*— It is used in the beginning of dance, in standing poses and in the dance connected with 'Puṣpāñjali' or offering of flowers.

### 6. ஸமம்

*(313-314) பாதங்கள் சமநிலையிலிருப்பதற்குச் 'சமம்' என்று பெயர்.*

*உபயோகம்:—நாட்டியத்தின் ஆரம்பத்திலும், நிற்கும் நிலைகளிலும், புஷ்பாஞ்சலி நடனத்திலும் இது பயன்படும்.*

## ७. सारिका ।

एतेन[1] चरणेन स्यात्सरणं सारिका मता ॥ ३१४ ॥
देशिनीगतिचारेपि हस्तचार्यादिनर्तने ।
तत्तदौचित्यनाट्येषु सारिका च प्रयुज्यते ॥ ३१५ ॥

## 7. SĀRIKĀ

(314—315) When a foot in normal pose is moved along the ground, the movement is called 'Sārikā'.

*Uses:*— It is used in foot movements or steps in provincial dances, in dances involving many hand-poses and foot movements, and in other suitable situations in dance.

### 7. ஸாரிகா

*(314-315) பாதத்தை பூமியை விட்டு எடுக்காமல் நகர்த்தினால் அதற்கு 'ஸாரிகா' என்றுபெயர்.*

1. 'एकेन' इति पाठभेदः ।



*உபயோகம்:— 'தேசி' நாட்டியத்தில் வரும் கதிகளிலும் பாத வகைகளிலும், ஹஸ்த முத்திரைகள் நிறைந்த 'ஹஸ்தசாரி' என்னும் நர்த்தனத்திலும், வேறு பொருத்தமான இடங்களிலும் இது பயன்படும்.*

## ८. अर्धपुराटिका ।

अंगुलीपृष्ठभागेन पादस्यैकस्य चेत्स्थितिः ।
[1]अन्येन कुट्टनं भूमेर्नाम्ना साऽर्धपुराटिका ॥ ३१६ ॥

नाट्योक्तशब्दढेंकारे करणानां नृतिक्रमे ।
युज्यते नृत्ययोगे च क्रमात्सार्धपुराटिका ॥ ३१७ ॥

## 8. ARDHAPURĀṬIKĀ

(316—317) If one of the feet rests on the back of the toes and the ground is stamped with the other foot, then it is called 'Ardhapurāṭikā'.

*Uses:*— This is used in the dances to the accompaniment of the syllables 'Ḍhēm', in Karaṇas and in combination of dances.

### 8. அர்த்த புராடிகா

*(316-317) ஒரு காலின் விரல்களின் மேற்புறம் பூமியில் படிந்திருக்க மற்றொரு காலால் பூமியைத் தட்டினால் அதற்கு 'அர்த்த புராடிகா' என்று பெயர்.*

*உபயோகம்:— இது 'டேம்' என்ற சொல் வரும் போதும், கரணங்களிலும், தொகுப்பு நர்த்தனங்களிலும் உபயோகப்படும்.*

1. 'अर्धेन' इति पाठभेदः ।

## ९. स्वस्तिकम् ।

स्वस्तिकन्यासयोगेन चरणस्स्वस्तिको भवेत् ।
करणे चारिकारंभे नृत्यशिक्षासु तौ स्मृतौ ॥ ३१८ ॥

## 9. SWASTIKA

(318) If the feet are crossed, it is called 'Swastika'.

*Uses:*— It is used in certain karaṇas (combined leg and hand movements), in the beginning of 'Cāris' or foot movements, and in the course of lessons in dance.

## 9. ஸ்வஸ்திகம்

(318) பாதங்களை ஒன்றுக்கொன்று குறுக்காக வைத்துக்கொண்டால் அதற்கு 'ஸ்வஸ்திகம்' என்று பெயர்.

உபயோகம் :— சில கரணங்களிலும், சாரிகளின் ஆரம்பத்திலும், நாட்டியப்பயிற்சியின் போதும் இது உபயோகப்படுகிறது.

## १०. स्फुरिका ।

पादाग्रपृष्ठभागाभ्यां युगपच्चालनं यदा ।
स्थितिर्वा स्फुरिका ज्ञेया तदा नृत्तविचक्षणैः ॥ ३१९ ॥

## 10. SPHURIKĀ

(319) If resting on the fore-foot and the back of the foot the legs are either moved or are at rest without motion, then it is called 'Sphurikā'.

(The stanza on uses is missing in the manuscript.)



## 10. ஸ்புரிகா

(319) முன்னங்கால் குதிகால்களால் பாதத்தை அசைத்தாலும் அல்லது ஸ்திரமாகநின்றாலும் அதற்கு 'ஸ்புரிகா' என்றுபெயர்.

(உபயோகம் அடங்கிய செய்யுள் சுவடியில் காணப்படவில்லை.)

## ११. निकुट्टकः ।

आकुञ्चितपदाग्राभ्यां स्थितिर्नाम्ना निकुट्टकः ।
नृत्याभ्यासक्रमे चाथ(तथा)लंबेऽपि नर्तने ।
युज्यते पादभेदोऽयं निकुट्टक इतीरितः ॥ ३२० ॥

## 11. NIKUṬṬAKA

(320) When the feet rest on the fore-part which is slightly contracted, then it is called 'Nikuṭṭaka'.

*Uses:*— It is used in dance-practises and in 'Lamba' dance (the dance with a support to hold on).

## 11. நிகுட்டகம்

(320) முன்னங்காலைச் சிறிது குறுக்கி அதன்மேல் நின்றுகொண்டிருந்தால் அதற்கு 'நிகுட்டகம்' என்று பெயர்.

உபயோகம் :— நாட்டியப்பயிற்சியிலும், 'லம்பநர்த்தனம்' (எதையாவது மேலே பிடித்துக்கொண்டு ஆடும் நாட்டியம்) என்ற நாட்டியத்திலும் இது உபயோகப்படுகிறது.

## १२. तलोत्क्षेपः ।

अग्रतः पृष्ठतो वापि यावज्जानुविलोलनम् ।
चरणस्य स विज्ञेयस्तलोत्क्षेपो विचक्षणैः ॥ ३२१ ॥

प्रेक्षाग्रहोक्तनाट्येषु चारीकरणनर्तने ।
तलोत्क्षेपाभिधः पादः क्वचिन्नाट्यावसानके ॥ ३२२ ॥

### 12. TALŌTKṢĒPA

(321—322) If resting on the fore-part or the back of the feet, the legs are shaken up to the knee forward and backward, then it is called 'Talōtkṣēpa'.

*Uses:*— It is used in dances in special auditoriums, in dances involving a variety of Cāris (leg movements) and karaṇas (combined leg and hand movements), and sometimes at the final part of dance programmes.

### 12. தலோத்க்ஷேபம்

(321–322) முன்னங்காலால் அல்லது குதிகாலால் நின்று கொண்டு முழங்கால் வரையில் காலை முன்னும் பின்னும் அசைத்தால் அதற்கு 'தலோத்க்ஷேபம்' என்று பெயர்.

உபயோகம் :— விசேஷ ஆடல் அரங்குகளிலும், சாரிகள் அதிகமாகவுள்ள நாட்டியத்திலும், கரணங்களிலும், சிலசமயங்களில் நாட்டியத்தின் இறுதியிலும் இது உபயோகிக்கப்படுகிறது.

### १३. पृष्ठोत्क्षेपः ।

अस्यैव पृष्ठचलनात् पृष्ठोत्क्षेप इतीरितः ।
देश्यादिनटने चापि तालाङ्गस्य नृतिक्रमे ॥
करणेऽपि प्रयोक्तव्यः पृष्ठोत्क्षेपाभिधः पदः ॥ ३२३ ॥

### 13. PṚṢṬHOTKṢĒPA

